உ
சிவமயம்.

கவிராக்ஷஸ -

# ஸ்ரீகச்சியப்பமுனிவர் பிரபந்தங்கள்.

முதற்பகுதி.

20

திருவாவடுதுறையாதீனம்.

உ

சிவமயம்.

# கலைமகள் விழா வெளியீடு.

விசய - புரட்டாசி

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

கவிராக்ஷஸ -

# ஸ்ரீ கச்சியப்பமுனிவர் பிரபந்தங்கள்.

## முதற்பகுதி.

---

1. பிரமீசர் பதிற்றுப்பத்தந்தாதி.
2. கச்சி ஆனந்தருத்திரேசர் பதிற்றுப்பத்தந்தாதி.
3. கச்சி ஆனந்தருத்திரேசர் கழிநெடில்.
4. கச்சி ஆனந்தருத்திரேசர் வண்டுவிடுதூது.
5. பஞ்சாக்கரதேசிகரந்தாதி. (குறிப்புரையுடன்)

---

திருவாவடுதுறை ஆதீனம்.

உ

சிவமயம்.

## திருத்தொண்டர்.

பாய வாருயிர் முழுவதும் பசுபதி யடிமை
ஆய வெவ்வகைப் பொருள்களு மவனுடைப் பொருள்கள்
மேய விவ்வண மலதுவே றின்றென வுணர்ந்த
தூய மெய்த்தவத் தடியவர் துணையடி தொழுவாம்.

—தணிகைப்புராணம்.

திருவாவடுதுறை ஆதீனவெளியீடு 71.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

[library stamp]

கவிராக்ஷஸ -

# ஸ்ரீ கச்சியப்பமுனிவர் பிரபந்தங்கள்.

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறையாதீனத்து

இருபத்தொன்றுவது குருமஹாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிகமூர்த்திகள்

கட்டளையிட்டருளியபடி

அவ்வாதீன வித்துவான்

த. ச. மீனாட்சிசுந்தரம்பிள்ளையால்

பல பிரதிகளைக்கொண்டு பரிசோதித்துப் பதிப்பிக்கப்பெற்றன.

உரிமை பதிவு.

விசய—புரட்டாசி

1953.

முதற்பதிப்பு—1953.

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 3020
நன்கொடை எண்:

உ

ஸ்ரீ ஞானமா நடராசமூர்த்தி.

---

திருச்சிற்றம்பலம்.

ஓங்கொளியாய் அருள்ஞான மூர்த்தி யாகி
உலகமெலாம் அளித்தருளும் உமையம்மை காணத்
தேங்கமழும் மலரிதழி திங்கள் கங்கை
திகழரவம் வளர்சடைமேல் திகழ வைத்து
நீங்கலரும் பவத்தொடர்ச்சி நீங்க மன்றுள்
நின்றிமையோர் துதிசெய்ய நிருத்தம் செய்யும்
பூங்கமல மலர்த்தாள்கள் சிரத்தின் மேலும்
புந்தியினும் உறவணங்கிப் போற்றல் செய்வாம்.

திருச்சிற்றம்பலம்.

— ஸ்ரீ உமாபதிதேவநாயனுர்.

அச்சிட்டது
ஸ்ரீ முருகன் அச்சகம்,
கும்பகோணம்.



உ
சிவமயம்.

# முகவுரை.

—::—

## தேவாரம்.

திருச்சிற்றம்பலம்.

"முந்தைகாண் மூவரினு முதலா னுன்காண்
மூவிலைவேல் மூர்த்திகாண் முருக வேட்குத்
தந்தைகாண் தண்கடமா முகத்தி னார்க்குத்
தாதைகாண் தாழ்ந்தடியே வணங்கு வார்க்குச்
சிந்தைகாண் சிந்தாத சித்தத் தார்க்குச்
சிவனவன்காண் செங்கண்மால் விடையொன் றேறும்
எந்தைகாண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன்காண் அவனென் எண்ணத் தானே."

திருச்சிற்றம்பலம்.

திருக்கயிலாயபரம்பரைத் திருவாவடுதுறையாதீனம் தெய்வச் செந்தமிழ் நாட்டுக்குத் திலகம் போல்வது. ஏன்? 'கண்ணைக் கண்ணிற்கருமணியாய் மணியாடு பாவையாய்' இலங்கியொளிர்வது. 'கல்விக் களஞ்சியம்' இத்திருவாவடுதுறையே எனக் கற்றோர் சொல்வர். சிவஞானராசதானி இது எனச் சிவஞானச் செல்வர் சொல்வர். புலவர்கட்குத் தாயகம் இதுவே எனப் புலவர் பலருங் கொள்வர். புவியரசரும் கவியரசரும் எம் துறவரசு வீற்றிருக்கும் துறைசைமாநகரென இதனைச்சூழ்வர். தொண்டுபடு தொண்டர் துயர்தீர்க்கும் தூயதலம் இதுவே எனத் தொண்டர்கள் வந்து வந்து வழிபடுவர். 'ஆயிரங் கொடுப்பர் போலும் ஆவடு துறையனாரே' என்றருளிய திருநாவுக்கரசு சுவாமிகள் 'மாயிரு ஞாலமெல்லாம் மலரடி வணங்கும் போலும்' என்று அன்றருளிய திறமே என்றும் மன்ற நின்று நிலவுவது என்பர் பெரியோர்.

இனி, இப்பிரபந்தங்களின் ஆசிரியராகிய கவிராக்ஷஸ — ஸ்ரீ கச்சியப்பமுனிவர் திராவிட மாபாடியகாரராகிய ஸ்ரீ மாதவச் சிவஞானயோகிகள் மாணவர் பன்னிருவருள் முதல்வர். ஏனைய மாணவர் பதினொருவராவார்:— தொட்டிக்கலை—சுப்பிரமணிய முனிவர், மதுரையாதீனம்-வேலாயுததேசிகர், காஞ்சீபுரம்—சரவண பத்தர், இராமநாதபுரம் — சோமசுந்தரம்பிள்ளை, முத்துக்குமார தேசிகர், இலக்கணம்—சிதம்பரநாதமுனிவர். கல்யாணசுந்தர உபாத்தியாயர், அடைக்கலங்காத்தான்முதலியார், காஞ்சீபுரம்—சிதம்பர முனிவர், திருமுக்கூடல்—சந்திரசேகரமுதலியார், திருச்சிற்றம்பல தேசிகர் முதலியோர் என்ப. இக்கவிஞர்பெருமான், இவ்வாதீனத்து மஹாவித்துவான். வடமொழி தமிழ்மொழிகளில் பெரிதும் வல்ல சிவாநுபூதிச்செல்வர். நெட்டுருப்பண்ணிய பழம் பாடல்களை ஒப்புவிப்பதுபோலப் புதிய புதிய பாடல்களைச் சிறிதும் வருத்தமின்றி எளிதில் இயற்றும் ஆசுகவி இவர்கள். குருபத்தியிலும், குருப்பணிவிடையிலும் இவர்களுக்கு இணை எவருமிலர். இவர்கள் செய்த பெரு நூல்கள்—காஞ்சிப்புராணத்து இரண்டாங்காண்டம், திருத்தணிகைப்புராணம், பேரூர்ப்புராணம், பூவாளூர்ப்புராணம், திருவானைக்காப்புராணம், விநாயகபுராணம் என்பனவாம். சிறு பிரபந்தங்களாகிய 1. திருத்தணிகையாற்றுப்படை 2. திருத்தணிகைப்பதிற்றுப்பத்தந்தாதி 3. பிரமீசர் பதிற்றுப்பத்தந்தாதி 4. ஆனந்தருத்திரேசர் பதிற்றுப்பத்தந்தாதி 5. ஆனந்தருத்திரேசர் கழிநெடில் 6. ஆனந்தருத்திரேசர்வண்டுவிடுதூது 7. பஞ்சாக்கர தேசிகரந்தாதி என்பனவும் இவர்களருளியவைகளே. இவற்றுள், பிற்கூறிய ஐந்து சிறு பிரபந்தங்களின் தொகுப்பே இம்முதற்பகுதி. முன்னிரண்டு பிரபந்தங்களும் தனியே இரண்டாம்பகுதியாக அச்சிட்டு விரைவில் வெளிவரும்.

இனி, "ஸ்ரீ கச்சியப்ப முனிவரியற்றிய பிரபந்தங்களெல்லாவற்றையும் சேர்த்து ஒருதொகுதியாகக் குறிப்புரை, நூலாசிரியர் சரித்திரம் முதலியவற்றுடன் வெளியிட எண்ணியுள்ளேன். அதனை நிறைவேற்றிவைக்கும் வண்ணம் தமிழ்த் தெய்வத்தை

இறைஞ்சுகின்றேன்.'' என மஹாமஹோபாத்தியாய – டாக்டர் ஸ்ரீ ஐயரவர்கள் 'வண்டுவிடுதூது' இரண்டாம் பதிப்பின் முகவுரையிலே 20—1—31ல் குறித்துள்ளார்கள். இந்தக் குறிப்பொன்றே இவைகளையெல்லாம் ஒரு தொகுதியாக்கி வெளியிட நெடுநாளாக என்னைத் தூண்டியது. 'அடுத்து முயன்றாலும் ஆகுநா ளன்றி— எடுத்த கருமங்க ளாகா' என்பது முதியோர் வாக்கன்றோ?

இனி, ஸ்ரீ மாதவச்சிவஞானயோகிகள் பேரூர் - ஸ்ரீ வேலப்பதேசிகர் சின்னப்பட்டத்திலிருந்தகாலத்து அவர்கள்பால் சைவசந்நியாசமும், சிவதீட்சையும் சிவஞானோபதேசமும் பெற்றுச் சிவஞானயோகிகள் என்ற தீட்சாநாமமும் சூட்டப்பெற்று விளங்கினார்கள். அப்போது குருமஹாசந்நிதானமாக வீற்றிருந்தருளியவர்கள் 10-வது ஸ்ரீ வேலப்பதேசிகசுவாமிகள். இம் மூர்த்திகள் சங்கரநாராயணர் கோயிலிலே சிவபரிபூரண மாயினார்கள். ஸ்ரீ மாதவச் சிவஞானயோகிகளது ஞானாசிரியர் பேரூர் - வேலப்பதேசிகர் சின்னப்பட்டத்திலிருந்தபடியே பேரூரிலே சிவபரிபூரணமெய்தினார்கள். இவர்கள் அருளிச்செய்தது பண்டாரசாத்திரம் பதினான்கனுள் ஒன்றாகிய பஞ்சாக்கரப்பஃறொடையாம். பேரூர் - வேலப்பதேசிகர் சிவபரிபூரணமுற்றமையை அறிந்த பத்தாவது ஸ்ரீ வேலப்பதேசிகர் அடியவர் கூட்டத்திலுள்ள மற்றொரு வேலப்பத்தம்பிரானுக்கு ஆசாரியாபிடேகம் செய்து ஸ்ரீ வேலப்பதேசிகர் என்ற அபிதானத்துடனேயே சின்னப்பட்டத்திலிருத்தினார்கள். இவர்களே ஸ்ரீ பின்வேலப்பதேசிகமூர்த்திகள். பின்பு இவர்கள் பதினொராம்பட்டத்தில் குருமூர்த்தியாக வீற்றிருந்தருளி ஸ்ரீ மாதவச் சிவஞானசுவாமிகளது மாணவர் பன்னிருவரில் ஒருவராகிய திருச்சிற்றம்பல தேசிகரைச் சின்னப்பட்டத்தில் அமர்த்தினர்.

இனி, திராவிடமாபாடியகாரராகிய ஸ்ரீ மாதவச்சிவஞானசுவாமிகள் மாணவர்களில் இலக்கணம் - ஸ்ரீ சிதம்பரநாதமுனிவர் திருச்சிற்றம்பலதேசிகரிடத்திலே சைவசந்நியாசமும், சிவதீட்சையும், சிவஞானோபதேசமும் பெற்றார். இராமநாதபுரம் - சோம

சுந்தரகுருவும் இவர்களிடத்திலேயே நிருவாண தீட்சையும், சிவ ஞானோபதேசமும் பெற்றனர். இப்பிரபந்தங்களின் ஆசிரியராகிய கவிராக்ஷஸ - ஸ்ரீ கச்சியப்பமுனிவரும், தொட்டிக்கலை - மதுரகவி - ஸ்ரீ சுப்பிரமணியமுனிவரும் பன்னிரண்டாவது குருமகாசந்நிதானம் திருச்சிற்றம்பலதேசிகர் பெரியபட்டத்தில் வீற்றிருந்து சிவாகம ஆராய்ச்சியையே பொழுதுபோக்காகக்கொண்டு சிவாநந்த நிட்டையில் எழுந்தருளியிருந்தமையின் அப்போது சின்னப்பட்டத்தில் உள்ள ஸ்ரீ அம்பலவாண தேசிகர்பால் சைவசந்நியாசமும் சிவ ஞானோபதேசமும் பெற்றுக்கொண்டனர். இவை ஆதீன குருபாம்பரை விளக்கத்தாலும், ஆதீன வரலாற்றாலும், ஸ்ரீ சுப்பிரமணிய முனிவர் தமது ஞானாசிரியர்மீது இயற்றியுள்ள பிரபந்தங்களாலும் அறியக்கிடப்பன.

இனி, இப்பிரபந்தங்களின் பதிப்புக்கு உதவியாயிருந்த பிரதிகள் வருமாறு:—

இவ்வாதீனத்துக் 'கல்விக் களஞ்சிய'மாகிய சரஸ்வதி மஹால் புத்தகசாலை எட்டுச்சுவடி 1.

இராமநாதபுரம்—இராமசாமிப்பிள்ளை எனவழங்கும் மதுரை ஞான சம்பந்தப்பிள்ளையால் பதிப்பிக்கப்பட்ட கச்சி ஆனந்தருத்திரேசர் பதிற்றுப்பத்தந்தாதி, ஆனந்தருத்திரேசர்கழி நெடில், (பிரமாதி—1879) அச்சுப்பிரதி 1.

[இப்பிரதியைக் கொடுத்துதவியவர் ஆரணி — வித்துவான், சித்தாந்தரத்நாகரம், திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள்.]

இவ்வாதீனத்து ஸ்ரீ சுந்தரலிங்கத்தம்பிரான் சுவாமிகள் எழுதிய கைக்காகிதப்பிரதி 1.

என் தந்தையார் ஸ்ரீ T. A. சபாபதிபிள்ளையவர்கள் எழுதிய காகிதக் கையெழுத்துப் பிரதி 1.

இவ்வாதீனவித்துவானும், ஆதீன ஓதுவார்களுள் ஒருவருமாகிய ஸ்ரீ சு. பொன்னோதுவா மூர்த்திகள் காகிதப்பிரதி 1.

[இக்கையெழுத்துக் காகிதப் பிரதியில் இம்முனிவர் பிரபந்தங்களும், தொட்டிக்கலை—மதுரகவி - ஸ்ரீ சுப்பிரமணியமுனிவர் பிரபந்தங்களும் உள்ளன.]

இயற்றமிழாசிரியர், புரசைஅட்டாவதானம்—ஸ்ரீசபாபதிமுதலியார் அவர்கள் பார்வையிட்டு கலி—4983: விஷு—தநுர்மீ (கி.—பி. 1882-ல்) பதிப்பித்த பெருநகர்ப் பிரமீசர்பதிற்றுப் பத்தந்தாதி அச்சுப்பிரதி 1.

[இதனையுதவியவர் குடந்தை - திரு. R. கங்காதரமுதலியார்]

இவ்வாதீனத்து 17-வது குருமஹாசந்நிதானம் ஸ்ரீ அம்பலவாணதேசிகமூர்த்திகள் கட்டளையிட்டருளியபடி மதுராபுரிவாசியாகிய இராமசாமிபிள்ளை எனவழங்கும் ஞானசம்பந்தப்பிள்ளையவர்கள் ஸ்ரீ மாதவச் சிவஞானசுவாமிகள் பிரபந்தங்களைத் தொகுத்து நந்தன—சிங்கமதியில் இரண்டாம்பதிப்பாக அச்சிட்டுதவினர். அதற்குமுன் பாலவநத்தம் ஸ்ரீ பாண்டித்துரைசாமித்தேவரவர்களுடைய விருப்பத்தின்படி மேற்கூறிய பிரபந்தங்கள் யாவும் ஞானசம்பந்தப்பிள்ளையே முதற்பதிப்பாக விரோதி ஆண்டிலே அச்சிட்டனர். ஸ்ரீ மாதவச் சிவஞானயோகிகள் பிரபந்தங்களும், அவர்கள் மாணவர்களில் கவிராக்ஷஸ—ஸ்ரீ கச்சியப்பமுனிவர் பிரபந்தங்களும் தனித்தனியாக இவ்வாதீன வித்துவான் விசுவலிங்கத்தம்பிரான்சுவாமிகளும் மேற்சொல்லிய ஞானசம்பந்தப்பிள்ளையும் சேர்ந்து பரிசோதித்து அச்சிட்டுள்ளனர். ஆயினும், ஸ்ரீ கச்சியப்பமுனிவர் பிரபந்தங்களும், தொட்டிக்கலை—ஸ்ரீ சுப்பிரமணிய முனிவர் பிரபந்தங்களும் தொகுத்து முதன்முதலாக 70, 71-வது வெளியீடுகளாக இவ்வாதீனத்து 21-வது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிகசுவாமிகள் கட்டளையிட்டருளியபடி இப்பொழுது எளியேனால் பரிசோதிக்கப்பட்டுப்பதிப்பிக்கப் பெற்றன. இவ்விருமுனிபுங்கவர்களும் அருளிய ஏனைப்பிரபந்தங்கள் இரண்டாம்பகுதியாக அச்சிட்டு வெளிவரவுள்ளன. இப்பதிப்பிலே கவிராக்ஷஸ—ஸ்ரீ கச்சியப்பமுனிவருடைய திருவுருவச் சிலைச்சித்திரமும் முகப்பில் சேர்க்கப்பட்டுள்ளது காண்க.

இனி, யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த ராவ்பகதூர் - ஸ்ரீமான் சி. வை. தாமோதரம்பிள்ளையவர்கள் பழையநூல்களை அச்சிடும் முயற்சியில் ஈடுபட்டிருந்த காலத்திலே தணிகைப்புராணத்தையும் அச்சிடவிரும்பினர்கள். 25—3—1883ல் மஹாமஹோபாத்தியாய ஸ்ரீமத் ஐயரவர்களுக்கு எழுதியகடிதத்துக்கு முன் 16-வது மேலகரம் - ஸ்ரீ சுப்பிரமணியதேசிகமூர்த்திகளுக்கு விண்ணப்பமநுப்பியிருந்தார். அவ்விண்ணப்பத்தின்படியே மகாவித்துவான்—பிள்ளையவர்களிடத்துப்பாடங்கேட்டபோது மதுரை - இராமசாமிபிள்ளையவர்கள் எடுத்துவைத்துள்ள குறிப்பையும் உடன் உபயோகித்துக் கொள்ளும்படி மகாசந்நிதானத்தில் பெருங்கருணையுடன் அந்நூற்பிரதிகளுடன் அநுப்பிவைக்கக் கட்டளையிட்டருளியது. அதன்பின் ஸ்ரீ கச்சியப்பமுனிவர் சரித்திரச்சுருக்கமும் எழுதுவித்து அநுப்பப்பெற்றது. எனினும், தணிகைப்புராணக்குறிப்புக்களை இராமசாமிபிள்ளையவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டும் அவர் என்னகாரணத்தினலோ பதிப்பிக்கவில்லை. தணிகைப்புராணம் அச்சிட்டகாலம் சுபானு—சித்திரை (1883). "பிள்ளையவர்கள் சொன்ன அருமையான குறிப்புக்களை இவர் லக்ஷியம்செய்யவில்லையே! நல்லபொருள் கிடைத்ததென்று மிக்கமகிழ்ச்சியோடு இவருக்கு உபயோகப்படுத்திக்கொள்ளத்தெரியவில்லையே! என்று நான் எண்ணினேன். ஸ்ரீ சுப்பிரமணியதேசிகசுவாமிகளும் அதேகருத்தை உடையவர்களாக இருந்தார்கள்" (என்சரித்திரம்—759ம் பக்கம் பார்க்க.) என ஐயரவர்கள் வருத்தத்தோடு குறித்துள்ளார்கள். அக்குறிப்புக்கள் ஆதீனத்தில் இருந்தாலும் ஒருகாலத்திலே வெளிவருமே! பிறர்கைவசப்பட்டுப் பயனிலதாயிற்றே!! என்செய்வது!!! எல்லாம் திருவருள்.

இப்பிரபந்தத்தில் உள்ள 'ஸ்ரீ கச்சியப்பமுனிவர்வரலாறு' முற்கூறிய ஞானசம்பந்தப்பிள்ளையால் எழுதப்பட்டுப் பேரூர்ப் புராணத்தை தாரண—சித்திரையில் அச்சிட்டகாலத்து அதில் சேர்க்கப்பட்டிருந்ததேயாம்.

இனி, இவ்வாதீனத்து 16வது குருமகாசந்நிதானம் மேலகரம் ஸ்ரீசுப்பிரமணியதேசிகமூர்த்திகள் காலத்துச் சின்னப்பட்டத்திலே

(கி. பி. 1871–1883) வீற்றிருந்த ஸ்ரீ நமசிவாயதேசிகசுவாமிகள் தணிகைப்புராணத்தையும் சிறந்தமுறையிலே பாடம்சொல்வார்கள். இவ்வாதீன அடியவர் கூட்டத்துட்சிறந்து ஆதீனவித்துவானக விளங்கிப்பின்பு கி. பி. 1888ல் குன்றக்குடியில் உள்ள திருவண்ணுமலை ஆதீனத்துக்குத் தலைவராக மகாசந்நிதானத்தால் அநுப்பப் பெற்ற ஸ்ரீ ஆறுமுகத்தம்பிரான்சுவாமிகளும் தணிகைப்புராணம் பாடம்சொல்லும் ஆற்றல்மிகப்படைத்தவர்களே. சின்னப்பட்டத்து ஸ்ரீ நமசிவாயதேசிகர் கல்லிடைக்குறிச்சியில் வீற்றிருந்தகாலத் திலே அவர்கள்பால் கல்விகற்றவர்களில் சேற்றூர் - அருணசலக் கவிராயரும், அவர்தம்பின் சுப்பிரமணியக்கவிராயரும் மிகச்சிறந்து விளங்கினர். சுப்பிரமணியக்கவிராயரவர்கள் ஸ்ரீ நமசிவாயதேசிக சுவாமிகளிடத்திலே தணிகைப்புராணத்தையும் பெரியபுராணத் தையும் நன்கு கற்றுத்தேர்ந்தவர். சேற்றூர் சுப்பிரமணியக்கவிராய ரவர்களிடத்திலே என் தமிழாசிரியர்களுள் ஒருவரும், இவ்வாதீன வித்துவானும், ஓதுவார்களுள் சிறந்துவிளங்கியவர்களும், சிதம்பரம் ஸ்ரீ மீனுட்சிகாலேஜில் பிரின்ஸிபாலாகவும் அண்ணமலைப் பல்கலைக் கழகத்திலே தமிழாசிரியராகவும் வீற்றிருந்து தமிழரசுசெலுத்திய வர்களும் ஆகிய ஸ்ரீ சு. பொன்னேதுவாமூர்த்திகள் தணிகைப் புராணத்தைக்கேட்டு நல்லகுறிப்பொன்று எழுதிவைத்துள்ளார்கள். சுப்பிரமணியக்கவிராயரவர்களிடத்திலும் தணிகைப்புராணத்துக் குச் சிறந்தகுறிப்புக்கள் இருந்தன. பின்பு, திருப்பனந்தாட் காசி மடத்துத்தலைவர்களாக வீற்றிருந்து வடமொழி தமிழ்மொழிகளில் பெரும்புலமையுடன் விளங்கிய ஸ்ரீ சொக்கலிங்கத்தம்பிரான் சுவாமிகள் தலைவர்களாக வருவதற்குமுன்னே குன்றக்குடிக்குச் சென்றிருந்து ஸ்ரீ சு. பொன்னேதுவாமூர்த்திகளும் தாமுமாகத் தணிகைப்புராணத்தை ஒருமுறை பாடங்கேட்டார்கள். இதனை ஓது வாமூர்த்திகளே அடியேன் பாடங்கேட்டபோது கூறியருளினர்கள். ஸ்ரீ பொன்னேதுவாமூர்த்திகள் ஸ்ரீ மீனுட்சிகாலேஜ் பிரின்ஸிபா லாக இருந்தபோது ஸ்ரீ சொக்கலிங்கத்தம்பிரான்சுவாமிகள் திருப் பனந்தாளிலிருந்து ஆளனுப்பித் தணிகைப்புராணக்குறிப்பை ஓதுவா மூர்த்திகளிடமிருந்து வருவித்துப்பார்த்துவிட்டுச் சிலநாட்களில்

திரும்பவும் அக்குறிப்புக்களை அனுப்பிவிட்டார்கள். ஸ்ரீ மீனாட்சி காலேஜில் தமிழாசிரியராக இருந்த சோழவந்தான்-ஸ்ரீ கந்தசாமியா ரவர்களும் தணிகைப்புராணத்தைச் சேற்றூர் - சுப்பிரமணியக் கவிராயரவர்களிடம் பாடங்கேட்டவர்களே. நாங்கள் சிதம்பரம் ஸ்ரீ மீனாட்சிகாலேஜில் படித்துக்கொண்டிருந்தபொழுது ஸ்ரீ பொன் னோதுவாமூர்த்திகளுடைய தணிகைப்புராணக்குறிப்பைப்பெற்று வந்து மாலைகட்டித்தெருவில் உள்ள ஸ்ரீ மெய்கண்ட வித்தியா சாலையில் கீழ்புறம் அறையிலே சூரியனார்கோயில் ஆதீனத்து இலக்கணம் - ஸ்ரீ முத்துக்குமார தம்பிரான் சுவாமிகளுடன் இருந்து ஸ்ரீ கந்தசாமியாரவர்கள் ஆராய்ந்துவந்தார்கள். அக்காலத்திலே எளியேனும், திரு. பெ கோவிந்தமூப்பனாரும் தணிகைப்புராணத் தைக் கந்தசாமியாரவர்கள்பால்கேட்கப் பெரிது முயற்சிசெய்தும் மிகமிக அரிதாயிற்று. பின்பு, ஸ்ரீ கந்தசாமியார் மிகவிரிவாக எழுதிவைத்துள்ள தணிகைப்புராணவுரைப்பிரதி அவர்கள் இறுதிக் காலத்திலே மாயமாயிற்று. தணிகைப்புராணத்துக்கு இதுவரையில் முறையே பாடங்கேட்டபடி திருவாவடுதுறையாதீனத்திலிருந்து மதுரை - ஸ்ரீ இராமசாமிபிள்ளையவர்கள் குறிப்பும், சேற்றூர் - ஸ்ரீ சுப்பிரமணியக்கவிராயரவர்கள் குறிப்பும், ஸ்ரீ பொன்னோதுவா மூர்த்திகள் குறிப்பும், ஸ்ரீ கந்தசாமியாரவர்கள் விரிந்தவுரையும் வெளிப்படாமல் தமிழ்மக்களுக்குத் தணிகைப்புராணச் சுவையைத் துய்க்கப் பெருந்தடைகள் பல இருந்தன. ஸ்ரீ பொன்னோதுவா மூர்த்திகள் தணிகைப்புராணக் குறிப்பொன்றுதவிர ஏனையோர் குறிப்புக்கள் ஒன்றும் பயனிலவாயின. அவை எப்போது? யாரால்? எவ்வாறு? தமிழகத்து அச்சில் உலாவருமோ திருவ ருட்கே தெரியும். என் தமிழாசிரியராகிய-ஸ்ரீ பொன்னோதுவாமூர்த் திகள் குறிப்புடன் தணிகைப்புராணம் விரைவில்வெளிவர இருக்கும் செய்தி தமிழகமக்களுக்குப் பெரிதும் அகமிகமகிழ்வையுண்டு பண்ணும் எனவே நம்புகின்றேன்.

**கவிராக்ஷஸ - ஸ்ரீ கச்சியப்ப முனிவரர் பிரபந்தங்களை ஒரு சேரத் தொகுத்து வெளியிடக்கட்டளையிட்டருளிய இவ்வா**

**தீனத்து இருபத்தொன்றுவது குருமஹா சந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக மூர்த்திகள் தணிகைப்புராணத்தையும் உடனடியாக ஆராய்ந்து அச்சிடக்கட்டளையிட்டருளினார்கள். திருவருளும் குருவருளும் முன்னிற்க.**

இப்பிரபந்தங்கள் கற்போருக்கு எளிதாகப்பயன்படுமாறுசந்திகள்பிரித்துஅச்சிடப்பட்டுள்ளன. எல்லாவற்றிற்கும் குறிப்புரை எழுதுவதாயின் மிகவிரியும் எனவும், முன்னே குறிப்புரையுடன் வெளியிட்ட நூல்களைப் பின்னும் பின்னும் வெளியிடுவது தக்கதன்று எனவும், எளிதாகக் கிடைக்கப்பெறும் கச்சி - ஆனந்தருத்திரேசர்வண்டுவிடுதூது முதற்பதிப்பு மூலபாடமாகவும், இரண்டு பதிப்புக்கள் உரையுடனும் மகாமகோபாத்தியாய ஸ்ரீமத்-ஐயரவர்கள் வெளியிட்டிருப்பதில் மூன்றும் ப்திப்பு குறிப்புரையுடன் இவ்வாதீனத்து 17-வது வெளியீடாக வந்திருக்கின்றதெனவும் எண்ணி இப்பிரபந்தங்களைக் குறிப்புரை முதலியன எழுதாமல் வாளா மூலபாடமாக அச்சிட நேர்ந்தேன். இவ்வாதீன வித்துவான் பல்கலைப் புலவர்—ஸ்ரீ வி. சிதம்பரராமலிங்கம்பிள்ளையவர்கள் எழுதி முன்பு வெளியிட்டுள்ள பஞ்சாக்கரதேசிகாந்தாதிக் குறிப்புரை மட்டும் இதிற்சேர்க்கப்பட்டுள்ளது காண்க.

குற்றமிருப்பின் பொறுத்தருளும்படி பெரியோரை வேண்டிக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

**" ஆரறிவார் எல்லாம் அகன்ற நெறியருளும்**
**பேரறிவான் வாராத பின்."**

**— திருவருட்பயன்.**

இங்ஙனம்,
சித்தாந்தசைவமணி —
**த. ச. மீனாட்சிசுந்தரம்பிள்ளை,**
ஆதீனவித்துவான்.

திருவாவடுதுறை,
18—9—53.

உ

சிவமயம்.

# திருத்தாண்டகம்.

---

திருச்சிற்றம்பலம்.

ஒன்றாவுலகனைத்துமானார்தாமே
யூழிதோறூழியுயர்ந்தார்தாமே
நின்றாகியெங்குநிமிர்ந்தார்தாமே
நீர்வளிதீயாகாசமானார்தாமே
கொன்றாடுங்கூற்றையுதைத்தார்தாமே
கோலப்பழனையுடையார்தாமே
சென்றாடுதீர்த்தங்களானார்தாமே
திருவாலங்காடுறையுஞ்செல்வர்தாமே.

திருச்சிற்றம்பலம்.

— திருநாவுக்கரசுநாயனார்.



கவிராக்ஷஸ ஸ்ரீ கச்சியப்பமுனிவர்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# ஸ்ரீ கச்சியப்பமுனிவர் வரலாறு.

—::—

இப்பிரபந்தங்களின் ஆசிரியராகிய ஸ்ரீ கச்சியப்பமுனிவரர் சற்றேறக்குறைய நூற்றறுபது வருஷத்திற்குமுன் தொண்டை மண்டலத்திலே, தணிகைத் திருப்பதியிலே, காஞ்சிபுரத்துப் பரம்பரைச் சைவ வேளாளர் குலத்திலே அபிஷிக்தர் மரபிலே அவதரித்து ஒழுக்கம் அன்பு அருள் முதலிய நற்குணங்களோடு வளருவாராயினர்.

பின்பு தந்தைதாயர்களாலே தக்க பிராயத்திலே வித்தியாரம்பஞ் செய்விக்கப்பெற்று, சிறிது கல்வி கற்ற வளவிலே, அக் கச்சியப்பமுனிவர், சிவக்ஷேத்திர யாத்திரை செய்யத் தொடங்கித் தொண்டைநாட்டிலுள்ள சிவஸ்தலங்களெல்லாம் தரிசித்துக் கொண்டு, சோழநாட்டிலே ஸ்ரீசிதம்பர முதலிய திருப்பதிகளைத் தரிசித்தார். பின்னர் ஸ்ரீ ஞானக்கோமுத்தியாகிய திருவாவடுதுறையை அடைந்து, மடாலயத்தினுள்ளே புகுந்து திருக்கைலாச பரம்பரைச் சித்தாந்தசைவ ஞானபாநுவாகிய ஸ்ரீநமச்சிவாய மூர்த்தியைத் தரிசித்து, திருவருணோக்கஞ் சிந்திக்கப்பெற்று, அப்பொழுது அத்திருமரபிற் சின்னப்பட்டத்தில் எழுந்தருளியிருந்த ஞாஞசாரியாராகிய[அம்பலவாண]தேசிகரை ஒடுக்கத்திலே போய்த் தரிசித்துப் பேரன்போடு வணங்கினர். வணங்கியபின் அந்த ஞான தேசிகரிடத்தே, சமயதீக்ஷையும் விசேஷதீக்ஷையும், பெற்று, சிவாச்சிரமத்திற்குரிய துறவறத்தை அடைந்து, நிருவாணதீக்ஷையும் பெற்றுக்கொண்டார்.

அங்ஙனந் தீக்ஷைபெற்ற கச்சியப்ப முனிவார், அகத்திய மகாமுனிவர் வரத்தினால் பாண்டிவள நாட்டிலே அவதரித்து எளிதிலே வடமொழிக்கடலும், தென்மொழிக்கடலும் கரை கண்டுணர்ந்து, பேரூர் - ஸ்ரீ வேலப்பதேசிகராகிய ஞானாசாரியரிடத்தே அநுக்கிரகம் பெற்று, மெய்யுணர்வின் முற்றுப்பேறுடையராய்ச் சித்தாந்த சைவ சிவஞானபோத திராவிட மகாபாஷ்யகர்த்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ மாதவச் சிவஞானயோகிகளை வித்தியாகுருவாகக் கொண்டு, அம்மெய்ஞ்ஞான முனிவரிடத்தே தென்மொழியிலேயுள்ள பல இலக்கணங்களும், இலக்கியங்களும், தர்க்கமும், சிவஞானநூல்களாகிய மெய்கண்ட சாஸ்திரம் பதினான்கும், பண்டார சாஸ்திரம் பதினான்கும், மற்றும் பல நூல்களும் ஐயந்திரிபற ஓதியுணர்ந்து கல்விகேள்விகளில் வல்ல மகாவித்துவானெனப் பெயர் பெற்று, அச்சிவஞானயோகிகள் மாணாக்கர் பல்லோருள்ளுஞ் சிறந்தவராய் வீற்றிருந்தார்கள்.

இவர்களது வாக்கு வல்லபத்தையும், பிரசங்க சாதுரியத்தையும் புகழாதார் இல்லை. இவர்கள் செய்யுளியற்றும் விரைவு நெட்டுருப்பண்ணிய பழம் பாடல் ஒப்பித்தல்போல் இருந்ததென்று சொல்லுவார். இதுமட்டோ! காலம் இடங்கட்கேற்பப் புதிது புதிதாக யுக்திகள் வேண்டியவண்ணம் அவரது திருவாயினின்று தோன்றிக் கொண்டிருக்குமானால் அவர் பெருமை இத்துணைத்தெனச் சொல்லற்பாலதா?

பின்பு ஸ்ரீ கச்சியப்பமுனிவர் சிவபெருமான் அப்புலிங்க மூர்த்தியாக எழுந்தருளியிருக்கப்பெற்ற திருவானைக்காவில் அமர்ந்திருந்தபொழுது, திருவானைக்காப்புராணமும், பூவாளூர்ப் புராணமும் மொழிபெயர்த்தருளினர்.

பின்னர்க்கொங்கநாட்டிலே, விராட்புருடனுக்கு விந்துஸ்தானமாய், சிவபிரானாலே படைக்கப்பட்டதாய், தக்ஷிண கைலாசம், பிப்பிலாரணியம், மேலைச்சிதம்பரம், ஆதிபுரி, தவசித்திபுரம், பத்திபுரம், ஞானபுரம், வன்மீகபுரம், மேருபுரம், தேனுபுரம்,

பசுபதிபுரம், குருக்ஷேத்திரம், பிறவாநெறித்தலம் முதலிய பல தெய்வீகமான ஹேது நாமங்களையுடையதாய், தேவர், அசுரர், முனிவர் முதலிய அநேகராலே பூஜிக்கப்பட்ட அளவில்லாத சிவ லிங்கங்களையுடையதாய், காஞ்சிநதி, கந்ததீர்த்தம், சக்கரதீர்த்தம், பிரமதீர்த்தம், காலவதீர்த்தம் முதலிய பல திவ்யதீர்த்தங்களை யுடையதாய் விளங்குந் திருப்பேரூருக்கு ஸ்ரீ கச்சியப்பமுனிவர் சென்று, அங்கே சிலகாலம் வசித்தபொழுது, மூர்த்திதலதீர்த்தங் களாகிய மும்மைச்சிறப்பும் பெற்று, இம்மை மறுமை வீடு பேறுஎன்னும் மும்மைப்பயனும்எளிதில்தரத்தக்கதாயிருத்தலையும், மற்றெந்தத் தலத்திலும் இயற்றும் பாவம் திருவிடைமருதூரிலும், அத்திருவிடைமருதூரில் இயற்றும் பாவம் இப்பேரூரிலும் தீரு மென்பதையும், பிரமகுண்டமாகிய திருநீற்றுமேட்டிலுள்ள விபூதி யை அணிவோர்க்குப் பிரமராக்கதமும், மலடும், நோய்களும், இடர்களும், பாவங்களுந்தீர்ந்து இகமும் பரமும் வீடுங் கூடுமென் பதையும், பிறவாப்புளி இறவாப்பனை முதலிய பலஸ்தல விம்மி தங்களையும், சோதிவிருக்ஷம் சிலாநதி முதலிய பல பருவத விம்மி தங்களையும், சிவபெருமான் அப்பேரூரின்கண்ணே அரி பிரமாதி யோர்க்கு ஆனந்ததாண்டவஞ் செய்துகாட்டிய இரசதசபையிலே, விராட்புருடனுக்கு இருதயஸ்தானமாய் விளங்கும் ஸ்ரீசிதம்பரத் தின் கண்ணதாகிய கனகசபையிலே பஞ்சகிருத்திய திருநிருத்தஞ் செய்தருளுந் திருக்கோலத்தைப் பரமாசாரியராகிய சுந்தரமூர்த்தி நாயனருக்குக் காட்டக்கண்டு வணங்கிப் போனந்தப் பெருங் கடலின் மூழ்கி, மீண்டு ஸ்ரீசிதம்பரத்தை அடைந்து, சபாநாயகரை நமஸ்கரித்து, "மடித்தாடு மடிமைக்கணன்றியே" என்னுந் திருப் பதிகம் பாடி அதிலே, "பாரூருமரவல்குலுமைநங்கை யவள்பங்கன் பைங்கணேற்ற - னூரூரன் றருமனார்தமர்செக்கிலிடும்போது தடுத் தாட்கொள்வான்-ஆரூரன் றம்பிரானாரூரன்மீகொங்கிலணி காஞ்சி வாய்ப் - பேரூரர்பெருமானைப்புலியூர்ச்சிற்றம்பலத்தே பெற்றாமன் றே" என்று அந்நாயனார் சபாநாதரைத்திருப்பேரூரிலே கண்ட நிலைமையைச் சிறப்பித்தருளிய அற்புதத்தையும் பற்பல முறை

உற்று நோக்கி ஆனந்தவெள்ளத்தில் அமிழ்ந்திக் காலந்தோறும் சுவாமி தரிசனஞ் செய்துகொண்டு திருவருட்செல்வர்களாய் வீற்றிருந்தார்கள்.

அப்போது, சிலகாலம் மழையில்லாமையால் வெப்பமிகுதி பற்றி ஜனங்கள் தாக சோகங்களுற்று வருந்துவதை நோக்கித், தெள்ளியோர் உள்ளமேபோல வெள்ளியம்பலத்திலே, ஆனந்த தாண்டவஞ் செய்தருளியகாலத்து, ஆடலின் வேகத்தால் அருமைத் திருமேனியில் ஆபரணமாக அணிந்துள்ள அரவங்கள் விடத்தை யுமிழ்ந்ததனால் தேவராதியோர்க்கு உளவாகிய தாக சோகங்களைத் திருமுடிக்கண்ணதாகிய கங்கையைக் காஞ்சிநதியாகச் செல்லும் வண்ணம் ஆஞ்ஞாபித்து மாற்றியருளிய பேருண் முதலியவற்றை அடக்கி அரசம்பலவாணர்மீது பெரிதும் அருமையாகிய ஓர்பிரபந்தம் பாடி மழை வருஷிக்கச் செய்து, ஜனங்களுடைய தாகசோகங்களை மாற்றியருளினார்கள். பின்னும் பட்டீசர் மீது பல பதிகங்கள் பாடிப் பலருக்குக் குட்டநோய் முதலிய போக்கி மற்றும் பல அற்புதங்களையுஞ் செய்தருளினார்கள்.

அந்த ஸ்தலத்தின் மகிமைகளை உலகத்தார் பலரும் உணர்ந்துய்யும்படி திருவுளங்கொண்டு சொற்சுவையும் பொருட்சுவையும் இனிது விளங்கும் வண்ணம் காலம் இடங்களுக்கேற்ற அலங்கார அமைதியோடு பேரூர்ப்புராணத்தையும் மொழிபெயர்த்து அருளினார்கள்.

அதன்பின்பு திருத்தணிகையை அடைந்து ஆங்கே சிலகாலம் வீற்றிருந்து இயற்றமிழ்ப் போதகாசிரியர் விசாகப்பெருமாளையர், வித்தவான் — சரவணப்பெருமாளையர் இருவருக்கும் பிதாவாகிய கந்தப்பையர் முதலாயினோருக்குக் கல்வி கற்பித்தருளினார்கள். அப்போழ்து, பலவித்வான்களும் தமிழிலேபுறச்சமயியாற் செய்யப்பட்ட சீவகசிந்தாமணியைப் பேரிலக்கியமாகக் கொண்டாடுதலைச் சித்தத்திலே கொண்டு, அதினும் மாட்சிமைபெறத் திருத்தணி

கைப் புராணத்தை மொழிபெயர்த்தருளிச்செய்தார்கள். சொல் வளம், செய்யுணடை, சந்தம், பொருட்சுவை யென்னும் இவை களிலே தமிழ் மொழியிலுள்ள எந்த இலக்கியமும் இதற்கு மேம் பட்டிலதென்பது அப்புராணத்தை ஓதியுணர்வோர்க்கு எளிதில் விளங்கும் என்பர்.

தம்மாணுக்கரிற் சிறந்தவராகிய கந்தப்பையருக்கு வயிற்றிலே ஓர் குன்மநோயுண்டாய பொழுது, தணிகையாற்றுப்படையைப் பாடி, அவர்நோயை மாற்றியருளினர். அதனல் அவர்கள் சிவத்தி யான வுறைப்பிற் சிறப்புடையரென்பது தெள்ளிதிற் புலப்படும். மற்றும் திருத்தணிகைப் பதிற்றுப் பத்தந்தாதி முதலிய பிரபந்தங் களும் அங்கே இருந்தபொழுது இயற்றினர்கள்.

பின்பு சென்னைமாநகர்க்குச்சென்று அங்கே சிறிது காலம் வசித்தார்கள். அப்பொழுது அவ்விடத்துப் பக்தஜனங்களும், பிரபுக் களும் வேண்டிக்கொண்டபடி விநாயகபுராணம், சென்னை விநா யகர் பிள்ளைத்தமிழ் முதலியன இயற்றி, அவர்கள் அடியுறையாக இரண்டாயிரம் வராகனிட அதைக்கொண்டு இத்திருவாவடுதுறை யிலே ஆதீனபரமாசாரியராகிய ஸ்ரீநமச்சிவாய மூர்த்திகள் சந்நிதி மண்டபப்பணி அணிபெறச் செய்வித்தருளினர்.

விநாயகபுராணம் அரங்கேற்றுஞ் சபைக்கு ஐயாப்பிள்ளை என்னும் ஒரு பெரிய பிரபு "சாம்வர இதென்ன இராமாயணமா" என்று சற்றே இகழ்ந்தனர். மற்றப் பிரபுக்கள் முனிவரர்க்கு அதனை மறைத்தும், அவர் தமது புராணத்தைத் தொடங்காது இராமாயணத்தை எடுத்துக்கொண்டு யாவரும் பிரமிக்கும்படி முதல் ஆறு செய்யுளில் நூறு குற்றம் ஏற்றினர். உடனே அப் பிரபு நூறுவராகனும், பீதாம்பரமுதலியவைகளும் கொண்டுபோய்ப் பாதகாணிக்கையாக வைத்துத் தீர்க்கதண்டஞ் சமர்ப்பித்து, சுவாமிகளது மகத்துவம் அறியாத ஏழையைத் தேவரீர் காத்தரு ளுகவென்று விண்ணப்பஞ்செய்ய, அதன் பின்பு தமது புராணத் தைத் தொடங்கி அரங்கேற்றினர்கள்.

இம்முனிவர் சென்னபட்டணத்திலிருக்கும்போது, காஞ்சீபுரத்தில் எழுந்தருளியிருந்த அவராசிரியராகிய ஸ்ரீமாதவச்சிவஞானயோகிகள்பால் ஆங்குள்ள தமிழ்வித்துவான்கள் ஒருங்குகூடி, நீவிர் காஞ்சிமான்மியஞ் செய்யப்புகுந்து அதன்கண்ணே கடவுள் வாழ்த்தில், "சங்கேந்துமலர்க்குடங்கை" என்பதை முதலிலுடைய சபாநாயகர் துதியை முன்னர் அமைத்து, "தணந்தபெரும்" என்பதை முதலிலுடைய ஸ்தலநாயகராகிய ஏகாம்பரநாதர் துதியைப் பின்னர் வைத்தது தவறென்று சாதித்தனர். அச்சிவஞானயோகிகள் தம்முடைய மாணுக்கனைக் கொண்டு அவர்களைத் தலைமடங்கச் செய்வதே தகுதியென்று திருவுளங்கொண்டு, அதனைக்கச்சியப்ப முனிவருக்குத் தெரிவித்தார். உடனே முனிவரர் சென்னையினின்றும் புறப்பட்டு ஸ்ரீகாஞ்சிசேர்ந்து, அனைவரையும் ஏகாம்பரநாதர் சந்நிதி மண்டபத்திற் சேரச்செய்து, பிரசங்கிக்கத் தொடங்குவாராகி, அந்தஸ்தலத்து ஓதுவாரை நோக்கி இந்தஸ்தலத்துத் தேவாரப்பதிகங்களுள் ஒன்றனை முதலிலே ஓதும்படி சொல்ல, அவர் "திருச்சிற்றம்பலம்" என்று தொடங்கினர். அப்பொழுது கச்சியப்பமுனிவரர், ஆக்ஷேபித்த வித்துவான்களை நோக்கி இவர் "திருச்சிற்றம்பலம்" என்று தொடங்குகின்றாரே, இது உங்கட்குப் பொருத்தந்தானா? இவரை நீங்கள் சேர்ந்து இச்சந்நிதியில் இந்த ஸ்தலத்துத் தேவாரப்பதிகங்களைப் பிருதிவியம்பலம் என்று சொல்லி ஆரம்பிக்கும்படி செய்யக்கூடாதா? வென்ற அளவிலே, அனைவரும் வாயெடாது ஊமர்கள்போலத் தலைவணங்கியிருந்தனர். அதன்மேல் விநாயகர் காப்புக்குப்பின், கடவுள் வாழ்த்தில் முதலாவது உயிர்களின் போகம் வீடுபேறுகட்கு ஹேதுவாகப் பஞ்சகிருத்தியத் திருநிருத்தஞ் செய்தருளும் சபாநாயகர் துதி கூறுதலே முறையென்று பல நியாயங்கள் காட்டி அவ்வித்துவான்கள் அவமானம் அடையச்செய்தனர்.

பின்பு, ஸ்ரீகாஞ்சியில் வீற்றிருக்கக்கருதி அங்கே அமர்ந்தபொழுது தம்முடைய ஆசிரியர் திருவாக்கைச் சிரமேற்கொண்டு காஞ்சிப் புராணத்து இரண்டாங்காண்ட மொழிபெயர்ப்புச்

செய்தருளிப், பின்னர்க் கச்சியானந்தருத்திரேசர் வண்டுவிடுதூது கச்சியானந்தருத்திரேசர் பதிற்றுப்பத்தந்தாதி, பஞ்சாக்கரதேசிகர் அந்தாதி முதலிய பல நூல்கள் இயற்றியருளினர்.

இங்ஙனம் லோகோபகாரமாகப் பல நூல்கள் இயற்றிப் பல நன்மாணுக்கர்களுக்குக் கற்பித்துத் தமிழ் மொழியை அபிவிருத்தி செய்து, சிவபேற்றிற்குக் காரணமாகிய சிவத்தியானுபூதிகளின் உறைப்பில் வதிந்தருளிய ஸ்ரீ கச்சியப்பமுனிவரர் ஸ்ரீ காஞ்சிபுரத்திலே சாலிவான சகாப்தம் 1712-க்குச்சரியான சாதாரணவருப சித்திரைமீ 11வ மங்களவாரத்தில், புனர்பூச நக்ஷத்திரமும் பூருவ பக்ஷத்துச் சத்தமியுங்கூடிய கும்பலக்கினத்திற் சிவ பரிபூரணதசையடைந்தருளினர். [கி.—பி. 1790]

ஏர்தரு சாலி வாகன சகாத்தம்
ஆயிரத் தெழுசதத் தொருபத்
திரண்டின் மேற்சாதா ரணவரு டத்தில்
இயைதரு சித்திரைத் திங்கள்
சார்தரு தேதி பத்தினே டொன்று
தருசெவ்வாய் வாரம்பூ ருவத்திற்
சத்தமி புனர்பூ சத்திரு நாளில்
தவலறு கும்பலக் கினத்திற்
சீர்தரு துறைசை வாழ்சிவ ஞான
தேவன்மா ணுக்கருண் முதன்மை
திகழ்ந்துள கச்சி யப்பமா முனிவன்
திருப்பெருங் காஞ்சியி லெய்திச்
சேர்தரு மடியார் தமதக விருளைத்
தினகரன் முன்னிரு ளென்னத்
திருந்து தன் னருளா லகற்றிவீ டுறுத்திச்
சிறந்தபூ ரணமடைந் தனனே.

இச்செய்யுள் முற்காலத்தது.

ஸ்ரீமெய்கண்டதேவர் திருவடி வாழ்க.
ஸ்ரீமாதவச் சிவஞானயோகிகள் திருவடி வாழ்க.
ஸ்ரீ கச்சியப்ப முனிவரர் திருவடி வாழ்க.

உ

சிவமயம்.

## குருபரம்பரை.

---

அருள்வளர் நந்தி மேதகை விளக்கி
யருள்சிவ ஞானபோ தத்தைத்
தெருள்வளர் தமிழ்ச்செய் தளித்தமெய் கண்ட
தேவனற் சந்ததி விளங்க
வருமொரு துறைசைத் திருநகர் நமச்சி
வாயதே சிகனெடு மிந்தக்
குருபரன் வழிவந் தருணனி கொழிக்குங்
குரவர்கள் பலரையுந் துதிப்பாம்.

—தணிகைப்புராணம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# கவிராக்ஷஸ -

# ஸ்ரீ கச்சியப்ப முனிவர் பிரபந்தங்கள்.

## 1. பிரமீசர் பதிற்றுப்பத்தந்தாதி

திருவாவடுதுறையாதீனம்.

" கயிலாய பரம்பரையிற் சிவஞான போதநெறி
காட்டும் வெண்ணெ
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான பாநு வாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ் குருநமச்சி
வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் றிருமரபு நீடூழி
தழைக மாதோ."

**ஸ்ரீ மாதவச் சிவஞானயோகிகள்.**

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# பிரமீசர் பதிற்றுப்பத்தந்தாதி.

---

## காப்பு.

அஞ்சிறைவண் டினம்புரளுங் கரடமதக் கலுழிவிண்ணோர்க்
கலக்கண் காட்டும்
வெஞ்சினவே லவுணர்நெடும் படைமுழுதும் பொருதடமுன்
விசித்த நீலக்
கஞ்சுகமே யெனவுடலம் போர்த்தொளிருங் களிற்றுமுகக்
கடவுள் வாசச்
செஞ்சரணப் போதிறைஞ்சிப் பிரமீசன் றனைவழுத்தல்
செய்வா மன்றே. (1)

வளிவழங்கு மொருநிலத்தண் மழைவழங்கு மொருநிலவாம்
புரவித் தேரின்
ஒளிவழங்கு மதிவழங்க வுடுவழங்க நிலையுளவென்
றூழி ஞேங்கித்
தெளிவழங்கு மணிப்பெருங்கோ புரத்தொருசா ரமர்ந்தருளித்
தேய மெல்லாங்
களிவழங்கு பிரமநகர்ச் சக்கரத்தைங் கரக்களிற்றைக்
கருத்துள் வைப்பாம். (2)

## நூல்.

பூமருவும் பசுந்துணர்க்கற் பககாடு புரந்தளிக்கும்
புலவன் வாணி
நாமருவு மயன்கமலை நாயகனுன் மறையின்னு
நாடிக் காணுத்
தேமருவுங் குழலுமையா ளிடத்தானைப் பிரமநகர்
சிறப்ப வோங்கும்
மாமருவுங் கொன்றையந்தார் முடியானை யவனருளால்
வணங்கி னேனே. (1)

வணங்குமிடு கிடையுமையா டவமுளுற்றுங் காஞ்சிநகர்
வரைப்பி னும்பர்
கணங்கள்கிளர்ந் திறைஞ்சுசது ரானனசங் கரத்தமர்ந்த
கருணை வாழ்வைப்
பணங்கிளர்பாப் பணிதயங்கும் பிரமீசன் றனைவழுத்தும்
பண்பு மிக்கார்க்
கணங்குறுநோய் வினைமுழுதும் வளியெதிர்ந்த பஞ்சியென
வகன் று போமே. (2)

போந்துதிரை கொழித்துமணி வான்றுநறுஞ் சேயாற்றுப்
புனலின் மூழ்கித்
தேந்துணர்ப்போ தலர்சொரிந்த நான்முகற்கு நான்முகத்துந்
திகழ வேதம்
ஈந்தருளும் பிரமநகர்ப் பிரமீசன் றனையிறைஞ்சி
யேத்தி னோர்கள்
காந்துமணி முடியிமையோர்க் கிறையவராய்ப் பேரின்பங்
கலந்து வாழ்வார். (3)

வாரணிந்த வணங்கனையார் களபமுலைப் பெருங்குவடு
மதர்த்து லாவுங்

கூரணிந்த வேற்றடங்க ணெடுங்கடலுங் குழற்காடுங்
குமைத்தெ னுள்ளத்
தேரணிந்த பிரமநகர்ப் பிரமீசன் புயவரையு
மிலங்கு மேனிச்
சீரணிந்த பெருவனப்பாங் கடலும்வளர் சடைக்காடுஞ்
செறிந்து மன்னும். (4)

மன்னியநான் முகனெழுத்து மதன்போருங் கூற்ருறுக்கும்
வதையு மாற்றும்
நன்னர்மருந் துட்கொண்டே னவையாவை யெனினுலகீர்
நவிற்றக் கேண்மின்
கன்னிமதில் புடையுடுத்த பிரமநகர்ப் பிரமீசன்
கபாலக் கையுந்
துன்னியவா னிருள்கிழிக்கு நுதல்விழியுந் துலங்குமலர்ப்
பதமு மாதோ. (5)

மாதொருபா லிடங்கொள்ள மற்ருெருபான் மாலவற்கு
மகிழ்ந்து நல்கும்
வீதுதைபைந் துணர்ப்பொதும்பர்ப் பிரமநகர்ப் பிரமீசன்
விரைசூழ் பாதப்
போதுதொழு தேத்துநர்க்குப் பொகுட்டலர்த்தா மரைத்தவிசிற்
புத்தே ளாதிக்
கோதுகுநற் பதங்களெலாங் கொடுக்குமெனக் கூறுவதோ
ரிறும்பூ தன்றே. (6)

அன்றியமுப் புரம்பொடிப்ப வசும்புகதிர்ப் பொலஞ்சிமய
வடுக்கல் கோட்டிக்
கன்றுகுணி லாவெறிந்த கணைபூட்டும் பிரமநகர்க்
கடவு ளார்தம்
பொன்றயங்கு மலர்ப்பாதப் பூசனையின் பயனன்ருே
புயலை மெய்யால்
வென்றநெடு மான்முதலோர் வீற்றிருக்கும் விம்மிதமார்
பதங்க ளெல்லாம். (7)

எல்லாரு முனைப்போற்றி யினியவணிந் தினியநுகர்ந்
தினிய செய்ய
வல்லாதா ரெனநீமற் றென்னேதோ லாவணிந்து
மறுகத் தாக்கும்
அல்லார்ந்த விடமுண்டு புறங்காட்டி னடங்குயின்று
யமா ரேறே
சொல்லார்ந்த பெருங்கீர்த்திப் பிரமநகர்ப் பெருமானே
சோதி யானே. (8)

சோதியார் சுடர்களெல்லாந் தூங்குவீங் கிருட்பிழம்பாஞ்
சோதி யாகிப்
பேதியா விருட்பிழம்பு வெளியாகு மலவிருளைப்
பெயர்த்தாட் கொள்ளும்
வேதியா பிரமநகர் வித்தகா வெனதிடுக்கண்
வேலை வல்லே
சேதியா தடியேனைப் புறக்கணித்தா லுலகுன்னைச்
சிரிப்ப தாமே. (9)

சிரித்துவரத் தாலுயர்ந்த புரம்பொடித்தான் வழிபாடு
செய்து போற்றும்
வரித்தகழற் றுவரையர்கோன் பார்த்தனுட னமராடி
வரங்க ளீந்தான்
விரித்தமறை மலரவனுக் களித்தருளும் பிரமநகர்
விமல னம்மா
பரித்தருளுந் திருவுளப்பாங் கிதுவெனமற் றெவர்தெரிந்து
பகரற் பாலார். (10)

## வேறு.

பாலாழி கடைந்தமுது பருகமதி யாதிறந்த
மாலாதி யிமையவர்கள் வந்துசர ணடைதலுமே
ஆலால மமுதுசெய்த பிரமநக ரமரர்பிரான்
சாலாவென் குணம்பொறுத்துத் தகுவனவே யருளுமே. (11)

அருளுருவாய்ப் பிரமநக ரமர்ந்தருளும் பெருகொளியில்
தெருளுருவா யழுந்தாது செயிர்வலியாற் பிரிந்தன்னே
இருளுருவா மலத்தழுந்தி யிருவினையிற் றடக்குண்டு
மருளுருவா மாமேய வலைப்பட்டுக் கிடந்தேனே. (12)

தேனேறு மிதழிநறுந் தெரியல்கமழ் சடைமுடியில்
ஊனேறு தலையணிந்த பிரமநக ருத்தமனே
வானேறு புகழடியார் வதியுமலர்க் கழலிணைமற்
றியானேற வளித்திடினு மெம்பெருமாற் கிழிவின்றே. (13)

இழிவின்றித் தவமியற்றி யெல்லோரு மூழியினும்
அழிவின்றி நின்றவுன தடியடைய முயல்கின்றார்
ஒழிவின்றி யானுலகி லுழிதருவே னுய்குவனோ
கழிவின்றி யருள்சுரக்கும் பிரமநகர்க் கண்ணுதலே. (14)

கண்ணுதலு மிளநகையுங் கையுகிருங் கழற்காலும்
விண்ணுரிஞ்சு மதில்புடைசூழ் பிரமநகர் வீற்றிருந்த
அண்ணலையே யில்லைகொலோ வறந்திறம்பு மென்வினையைத்
தண்ணருளா லொறுத்துமயர் தவிர்த்தருளா திருந்தனையே. (15)

இருந்தனனெவ் விடத்துநிறைந் தென்றாலு முயிர்களெல்லாந்
திருந்தவெழிற் பிரமநக ரிடங்கொண்ட சிவபெருமான்
மருந்தனைய திருமேனி வழிபாட்டின் பயத்தன்றிப்
பொருந்துமலந் துமித்தின்பப் புணரிபடி வாரிலரே. (16)

இலம்பாடு பிணிகாம மிளிவரலா திகளுறினுஞ்
சிலம்பாடு கழற்கன்பு சிதையாமை யளித்தருளாய்
நலம்பாடு நாவலர்க ணயந்தேத்தும் பிரமநகர்த்
தலம்பாடு பெறவிமயத் தையலொடும் வீற்றிருந்தோய். (17)

இருந்தோடு பெருந்தோளி னிடையுரிஞ்ச வொருபுடையே
முருந்தோடு மிளமுறுவன் முகமிமிர்த்துக் கடைக்கணித்து

மருந்தோடு பொரமொழிவார் மயறுமிக்கு மருந்திதழிக்
கருந்தோடு செறிசடிலப் பிரமநகர்க் கடவுளே. (18)

கடவுளரா யினுமன்பிற் கலவாரே லவர்க்கரியான்
அடர்வினைமா னிடரேனு மன்பினரே லவர்க்கெளியான்
மடலவிழ்பைந் துணர்ப்பொதும்பர் வானவர்நாட் டினுநிழற்றும்
இடனகன்ற பிரமநக ரிடங்கொண்ட வெம்மானே. (19)

மானேந்து கரதலமும் விடமேந்து மணிமிடறுங்
கானேந்து புனற்சடையுங் கரிகண்டாய் மடநெஞ்சே
ஆனேந்து கொடியுயர்த்த பிரமநக ரங்கணனம்
ஊனேந்து முடற்பிறவி யுறுவிழுமங் களைதற்கே. (20)

### வேறு.

தற்கொண்ட வுள்ள முரணித் திரிந்த தகுவோர் புரங்க டழலப்
பொற்குன்று வாங்கி யமராட் டுகந்து புகழ்திக் கணிந்த புலவன்
நெற்குன்ற மெங்கு நிலைபெற்று மல்கு பிரமா புரத்து நிமலற்
கற்கொண்டு நெஞ்ச மிகல்கிற்றி யாயி னழிவாயிதுண்மை யறியாய்.

அறியாமை யுய்த்த பழிபாவ மஞ்சி
யறனூ னவிற்று கழுவாய்
முறையா லுழக்கு மவர்கட் கொழிக்கு
முறைதேர்ந் திருந்து முறையோ
செறிபாவ பேத மறிவுற் றுஞற்று
சிறியேற்கு முய்தி வருமே
நெறியா லுயர்ந்த பிரமா புரத்து
நிறைஞான மோன முதலே. (22)

முதலற்று நின்ற முதலாகி மற்று முடிவற்று நின்ற முடிவாய்ப்
பதமற்று நின்ற பதமாகி மண்டு பயனற்று நின்ற பயனாய்
மதமற்று நின்ற மதமாய் வயங்கு பிரமா புரத்த மலனை
இதமற்று நின்ற விதமாக வெண்ண வறியா திழந்த துளமே. (23)

உளர்வண்டு பாடி நறைவாய் மடுக்கு
மொளிர்கொன்றை வேணி மதியப்
பிளவொன் றணிந்து நடமாட் டுகந்த
பிரமா புரத்து வரதன்
அளவின்றி நின்ற கருணைப் பெருக்கி
னலையா தழுந்த நினையிற்
களவொன்று மின்றி வெளிவந்து நின்று
கதழ்விற் பணித்த ருளுமே. (24)

அருளிற் கலந்த வறிவுற் றலாது
தொழிலொன்று மாற்றல் புரியாப்
பொருளிற் கலந்த பிரமா புரத்து
விகிர்தா புயங்க நடனு
தெருளிற் கலந்த விமையோர் முயன்று
தெருமந்து நின்று கழிய
இருளிற் கலந்த தமியேனை யாண்ட
விதுவென் குறித்து மொழியாய். (25)

மொழியாக மாதி வழிவைத்து மூர்த்தி
முதன்மூன்று மாகி யிடைவுற்
றொழியாத வண்ண மருள்செய்ய நின்று
மொழிவே னெனுண்மை யிதுவாற்
பிழிவார் பொதும்பர் புறமெங்கு மொய்த்த
பிரமா புரத்து விமலர்
கழியாத வீடு நிறைவிற் கலத்தல்
கலவாது கோட றகுமே. (26)

தகுதிக்க ணின்று தவமே புரிந்து
தறுகட் புலன்கள் களைவோர்
தொகுதிக்க ணின்று மொழிவேனை மைய
ளொடரா தொழிப்ப துளதே

பகுதிக்க ணின்று புலவோர் குழாங்கள்
பலகாலு மேத்து விழவின்
மிகுதிக்க ணின்ற பிரமா புரத்து
விளைகின்ற வின்ப வுணர்வே. (27)

உணர்வா யுணர்ந்து மொளியா யொளிர்ந்து
முயிரா யுயிர்த்து மொழியாப்
புணர்வாய்ப் புணர்ந்து மதுவுங் கடந்த
பொருளென்ப தேற னகுவீ
இணர்வாய் பொதும்ப ரிளகிக் குளிர்ந்த
பிரமா புரத்தி னிருடோய்
வணர்வார் கதுப்பி னுமையோ டமர்ந்து
வாமுய்த் தளிப்ப வனையே. (28)

வனமட் பிறக்க வொழிவின்றி யாழி
மடியா தழற்சி யதுபோல்
வினைதொக் கிருப்ப தொழிவின்றி யாக்கை
விளியாமை வைத்த கருணை
முனைவற் பணிந்து பிரமா புரத்தின்
முதிரன்பின் வைகு தவர்கள்
இனைவுற் றிரார்க ணினைவுற்ற யாவு
மினிதுற்று வீடு றுவரே. (29)

உறுகால் வழங்கு நெடுநீர் வளர்த்த
வுயர்தெங்கு வாழை பொதுள
அறுகா லுழக்கு மலர்வாவி சூழ்ந்த
பிரமா புரத்தி லமரும்
முறுகால முண்ட முதல்வற் பணிந்து
முடியாத வின்ப நுகரீர்
இறுகால மோர்ந்து தெறுகாலர் சூழி
னெதுநுங் கருத்து ரைமினே. (30)

## வேறு.

மின்னி லங்கிய முகிற்குலம் விலக்கலென் றிவரும்
பொன்னி லங்குமா ளிகைப்பிர மாபுரப் புனிதன்
தன்னி லங்குதாண் மலர்முனர்க் கூம்பிய தடங்கை
மன்னி லங்குவா னவர்கரங் கூம்புமுன் மலரும். (31)

மலர்ந்த பண்ணைசூழ் தரும்பிர மாபுர வள்ளல்
அலர்ந்த தன்புக ழுழுத்துநா வினுமவி ருருவங்
கலந்த நெஞ்சினுங் கழலிணை யிருத்திய சிரத்தும்
பொலிந்த வாணியைக் கமலையைக் கங்கையைப் புணர்த்தும். (32)

புணர்த்த மாயையாற் புணர்ந்ததன் னியல்புகா ணாமை
வணர்த்து வல்வினை யீட்டவு மறுத்தெனை யாண்டான்
பிணர்த்த நெட்டரைச் சோலைசூழ் பிரமமா புரத்தின்
உணர்த்த வுள்குவோ ருயிர்தனக் குடலென வுகைப்போன். (33)

உகைக்கு மைம்பொறி யுடற்றுமூ விருவகைக் குற்றந்
துகைக்கும் வல்வினை தொடக்குமுன் போலமா மாயை
பகைக்கு முப்புரம் பாற்றிய பிரமமா புரத்தோன்
தகைக்கு மின்னருட் கடலினைத் தணத்தொறு மம்மா. (34)

அம்மெ லோதியா ராடகப் பாடகத் தளிரும்
விம்மு பூண்முலை முகிழுங்கைம் மலருமெய் யணியா
திம்மென் காலமு மிரேனையும் பிரமமா புரத்தோன்
வம்மென் றூண்டுதன் வரம்பிலாற் றலைத்தெரித் தனனே. (35)

தெரித்து விட்டதான் முப்பொரு ளியற்கையுந் திருவாக்
கரித்து விட்டதா லடர்மலம் விழியென தறிவை
இரித்து விட்டதா லிலகுசே வடியெனை யொன்றாய்த்
தரித்து விட்டதாற் பிரமமா புரத்தொளி தானே. (36)

தானுந் தையலுஞ் சார்ந்திருட் பிழம்புகால் சீத்திட்
டூனுந் தங்கிய வுயிலாயும் வேறுசெய் தாண்டான்

மீனுந் திங்களு மென்மெல நுழைந்துலாம் பொதும்பில்
தேனுந் தும்பியுஞ் செறிபிர மாபுரச் செல்வன். (37)

செல்வ மோபெருஞ் செல்லனல் குரவதிற் செல்லல்
கல்வி யோபெருஞ் செல்லல்கல் லாமையுஞ் செல்லல்
எல்வ ளாம்பொலஞ் சடைப்பிர மாபுரத் திறைவன்
சொல்வ ளாவிய துணையடி தொழும்பரி சிலர்க்கே. (38)

பரிசி லாத்தனை யொருவருக் களித்தவர் பரர்க்குப்
பரிசி லாம்வகை யில்லைதற் பணிந்தவர்க் கெல்லாம்
பரிசி லாத்தனை யருள்பிர மாபுரப் பகவன்
பரிசி லாத்தொழு வார்க்குமேற் றாப்படா திருந்தான். (39)

இருந்தை மேனியாற் கீந்துதன் வலமெலாங் கறுத்தான்
முருந்துண் மூரலாட் களித்திட முழுவதும் பசந்தான்
திருந்து தீயென விருவர்முற் சேந்தனன் பிரமூர்ப்
பொருந்த ருட்குறி யதனிடைப் புணருரு விளர்த்தோன். (40)

வேறு

விளரிவண் டிமிர்பொழில் விண்ணம் போழ்ந்துமேல்
வளர்பிர மாபுர வரைப்பின் வள்ளலார்
பிளவியன் முடிமதி பெட்ப வுள்குவோர்
வளவியன் மதன்முடி மதிக்கஞ் சார்களே. (41)

சார்பெறு சார்பெனச் சார்ந்து மாதவர்
தேர்பிர மாபுரச் செம்மற் கண்டகண்
வார்பிதிர் முலையினர் வனப்புண் மூழ்கினும்
ஊர்பகட் டியமனு ருருவு காணுமோ. (42)

காணரும் பிரமமா புரத்துக் கண்ணுதல்
ஏணருங் கழன்மலர் பெய்த கைத்துணை
ஏணுறு மமரர்க்கு மீத லல்லது
தாணுவென் றொருவர்பாற் றாழ்ந்தி ரக்குமோ. (43)

இரப்பதும் பிரமனூ ரிறைவன் சேவடி
தரப்பெறு வதுமது தானன் றில்லைமற்
றிரப்பதுங் கொடுப்பது மினைதன் மாலைய
தரப்பெறும் பயனறி தகுவர்க் கென்பவே. (44)

வேய்புரை தோளியோர் பாக மேயதும்
பாய்புகழ்ப் புதல்வரைப் பயந்த வண்ணமும்
வாய்புணர் பிரமனூர் வதிந்த தும்பிரான்
றோய்புன லுலகெலாம் புரக்குஞ் சூழ்ச்சியே. (45)

சூழ்ந்தவ ருயிர்புறஞ் சூழ்ந்து கொள்ளுமே
வீழ்ந்தவ ருள்ளகம் வீழ்ந்தொன் றாகுமே
போழ்ந்தவெண் மதிபொலஞ் சடிலச் சூழலின்
வாழ்ந்தொளிர் பிரமனூர் வதிந்த வள்ளலே. (46)

வள்ளலென் றுரைப்பதென் மதித்துச் சொற்றிடாய்
தெள்ளிய பிரமமா புரத்துச் செம்மலே
கொள்ளையி லார்பொருட் டொகையு மாக்கையும்
உள்ளிய வுயிருங்கொண் டொழியு நின்னையே. (47)

நின்னையொப் பாரிலை நிறைகு ணத்தினில்
என்னையொப் பாரிலை யிழிகு ணத்தினில்
அன்னதா மாண்டவ னடிமை யென்பது
புன்னகை தரும்பிர மாபு ரத்தனே. (48)

புரத்தினல் வலியினற் போர்செய் மாண்பினல்
வரத்தின னிகரிலா வவுணர் வாழ்க்கைநாள்
துரத்தினன் பிரமனூர்த் தோன்ற லென்மல
உரத்தினைத் துரப்பதோ ருக்கங் கண்டிலான். (49)

கண்டிலா னன்பர்செய் கரிசி யாவதுங்
கொண்டிலா னன்பிலார் குணமும் யாவதும்

பிண்டிவார் பொழில்கமழ் பிரம மாபுரத்
தண்டவா ணர்கடொழ வமர்ந்த வண்ணலே. (50)

வேறு.

அண்ணன்மறை நாடரிய வங்கண னிரங்கி
நண்ணுபிர மாபுர நலத்தக விருந்தும்
வண்ணமலர் தூவிவழி பாடுபுரி கில்லேன்
எண்ணரிய தீவினை யிடங்கர்கவர் சேயேன். (51)

சேயனணி யான்பிறிவி லான்செறிவி லான்மண்
பாயபுன றீவளி பரந்தவெளி யானுன்
மாயனய னுயவர் மனத்தினொளிர் கல்லான்
ஆயபிர மாபுரனை யாவரறி கிற்பார். (52)

பார்பக விழும்புனலை வேணிபயில் வித்தாய்
சார்பிரம னூரிலுறை தத்துவவி தென்னே
ஏர்புனையு மண்டில மிருந்துமறை யோர்கை
வார்புனலை வைகன்றோறு மேற்கவரு கின்றாய். (53)

வரும்பிறவி நல்குவினை மாட்டிநகர் வாய
விரும்பயனை யேறுவினை தாழவினி தேற்றுப்
பெரும்பய னளித்தபிர மாபுர விடத்தோன்
அரும்பிறவி பத்துடைய வான்கொடி வலத்தோன். (54)

வலத்தய னிடத்தரிநன் மார்பிலரா னைத்தந்
துலப்பிலருண் முத்தொழி லுவர்க்கருளு மெம்மான்
தலத்திலுய ரும்பிரம னூரனனி தக்கோன்
நலத்தினிடு பிச்சைகொள நாண்சிறிது மில்லான். (55)

இல்வினை யிகழ்ந்துவன மேகிமுயல் வுற்று
நல்லதுற வெய்தினு நலத்தபிர மூரான்
வில்லுமி ழிருங்கழல் விராவுநெறி யின்றே
வல்லவிரு பற்றுமற மாற்றும்வழி யல்லால். (56)

ஆலமுண வாடரெழுழி லாடைபுலி யானைத்
தோலணிய ராவின னெனத்தொழு கிலாரார்
மூலவினை மோதுபிர மூரின்முதல் வோனைச்
சாலவவ னன்பர்களு மத்தகுத ரத்தோர். (57)

தாங்கமலி பாற்கடற ஞூரமுத மன்றி
வாங்கண்மலி தேவரை வருத்துகடு விற்ரூ
இரங்கியுயிர் வான்கதி யிடும்பிரம ஞூரிற்
பரங்கருணை யானருள் பணைத்தவினை யொன்றே. (58)

ஒன்றுமல வேர்வினை யிரண்டுமல மூன்று
வென்றுவரு நாற்பிறவி யைம்பொறியும் வீட்டி
நன்றுவிழி யாறெழுமெ ணன்புறு நலத்தோர்
மன்றபிர மூரான்வடி வொன்பதுணர் பத்தோர். (59)

பத்தில்வரு பத்திலுறு பத்தினி விறந்தோர்
பித்தனரு ளாழிபிர மாபுரஞெ டொன்ரும்
அத்தகைய முத்தியி னமுந்தினல தேனை
முத்திகளு மைந்தொழின் முதன்மைகளும் வேண்டார். (60)

**வேறு.**

வேண்டி யண்ணலா ரருளினுற் பார்ப்பதி
விடுத்தநீ லுருக்கன்னி
மாண்ட தானவர் கோடியோர் சூலத்தின்
மாட்டியவ் வதைதீர்ப்பான்
காண்ட குந்திருக் கோடிதீர்த் தத்தடங்
கண்டருச் சனைசாலப்
பூண்டசீர்ப்பிர மூரனைப் போற்றுவார்
போற்றிடார் பவச்சார்பே. (61)

சார்ந்த நான்முகற் கருளுவான் கோடிதீர்த்
தத்தடத் தொருபாங்கர்
ஆர்ந்த பேரருண் முகிழ்த்தெழ நான்முக
மலர்ந்துதா னேதோன்றி

வார்ந்த வேணியான் வளர்சது ரானன
சங்கர மதிப்போரிற்
பேர்ந்து வல்வினைத் தொடரெழு காவதம்
பின்னிட வொளித் தோடும். (62)

ஓடக் கண்டன னெனதிய லோட்டிய வுருப்பவிர் மலமென்னல்
ஆடக் கண்டன னென்னைமுன் னாட்டுமைம் பொறிகளு மாங்காங்கே
வாடக் கண்டன னெனதுயிர் வாட்டுமவ் வல்வினைப் பறம்பெல்லாம்
நாடக் கண்டிடாப் பிரமமா புரத்தனை நாடிக்கண் டருளாலே. (63)

அருளி லாருல கோரென வழக்கிலைப் பிரமனூ ரடிகேளோ
தெருளு லாகின திடமுரி மாலவன் றீர்தாக் கைக்கொண்டு
பொருளு லாமரற் குரியமார் புங்குறி பொறித்தன ளுமைமாயோன்
மருளி லாவயற் குரியுநின் வலப்புறம் வௌவின னிருந்தானே. (64)

இருந்த நெஞ்சகத் திருந்தொளிர்ந் தெழுந்தகெஞ்
சிடையெழுந் தொளிர்கல்லாத்
திருந்து பைம்பொழிற் பிரமனூ ரிறைவன்முற்
சேறலு நுதல் வாட்கண்
பொருந்து வல்வினைக் காட்டையுஞ் செவ்விழி
புகரிரு ளையும் வெண்கண்
வருந்து பல்பொரு ளார்வவெங் கோடையும்
வாய்மடுத் திறுமாக்கும். (65)

மாக்கு லம்பயில் சோலைமென் னீழலும் வந்தசை யிளங்காலும்
பூக்கு லம்பயில் சேக்கையும் புலம்பினிற் புலம்புறத் தெறுமாபோல்
தீக்கு லம்பயி லுலகுனைத் தீர்வுழித் தெறுவதும் வருங்கொல்லோ
ஆக்கு லம்பனி யாதுகல் லேந்திய வானுகை பிரமூரா. (66)

பிரம னுயுல களித்தனை மாயனைப் பேணினை தழற்சூல
வாத னுயவை யழித்தனை யீசனாய் மறைத்தனை யொருதானாய்
விரவு நோய்தப வருளினை பிரமனூர் வீற்றிருந் தரசாளும்
பரம னேயெமக் கரியன நினக்கவை பார்த்திடின் விளையாட்டே.

ஆட்டு பாவையி னடியனை யுடங்குநின் ருட்டிவல் வினையெல்லாம்
ஊட்டு கின்றனை செய்தனை நீயென வூட்டவும் வளர்க்கின்ருய்
நாட்டு கின்றவிக் கருணையை நாடியே நலத்தக வுய்ந்தேனற்
சேட்டி ளங்கிளி பயில்பொழிற் பிரமனூர்ச் சிவணிய சிவவாழ்வே.

வாழ வேண்டிய வடியரை முழுவதும் வாங்கிமுப் பாழ்மேலாம்
பாழ தாக்கினை பயில்சது ரானன சங்கரத் தமர்வோயே
தாழ வேண்டிய வடியரல் லாருழைச் சகலமு நிறைவித்தாய்
ஏழை பாகன்மற் றடியவர்க் குரியவ னென்பது பழுதாமே. (69)

பழுது தீர்சது ரானன
சங்காம் பயில்பவ வுனைநாடி
அழுது கண்சிவந் திலனுனக்
கலர்கள்கொய் தணிந்துகைந் நகந்தேயேன்
எழுது தொய்யிலார் கலவியிற்
கண்சிவந் திளமுலைக் குறிவைத்து
முழுதுங் கைந்நகந் தேய்ந்தன
னடுத்தனன் முனியினு முய்வேனே. (70)

## வேறு.

உய்திகொள் பிரம னூரி னுவந்தரு டேவ தேவன்
செய்தியின் றிறத்தை நோக்கிற் சிரிப்பல்லால் வேறென் றில்லை
கொய்தளிர் மலரிட் டீண்டுக் குலவுமூண் காட்டு வோர்கட்
கைதுவிண் டருவுஞ்சாவா வமிழ்துமுய்த் தமைவி லானே. (71)

அமைபொரு தோளி நம்மாட் டருளுவன் போலுந் தன்மாட்
டுமையவன் றேழன் றேழி யுடைதமக் கணியாத் தன்மை
இமையவ னேனும் வெஃகி யியற்பகை மனைவிக் கேகுங்
கமையறு கங்கை வேணிப் பிரமனூர்க் கட்வுட் டேவன். (72)

தேவனுந் தனது தன்மை தெரிதல்போ லுருவெவ் வேறு
மேவியெவ் விடத்துந் தோன்றி வீழ்ந்தியான் றழுவச் சேரான்

யாவருந் தொழுது போற்றும் பிரமனூ ரிறைவ னம்மா
பாவனைக் கெட்டா னென்னிற் பற்றுதற் கெட்டு வானே. (73)

எட்டுரு வுடைய னென்பர் பிரமனூ ரிறையை யென்னே
விட்டொளி ரொளிகண் மூன்றும் வேள்வியில் வெகுண்டான் பூமி
வட்டவான் றனது சேவின் மலரடி படுத்தா னுவி
பட்டது பிரப்பி னுண்ணப் படுமுளர் வளியு நீரும். (74)

நீர்திவள் சடிலக் கற்றைப் பிரமனூர் நிமலர் விண்ணோர்
வார்தரும் பொன்று தூக்கா மதுகைசே யுன்னை யுன்னி
ஆர்தா வுளத்து வைப்பே னயர்ந்துசே ணகற்று வேனு
ஓர்தரிற் றமியே னூற்ற லுனக்குமற் றின்று போலும். (75)

போலுமாற் சடிலக் கற்றை பொழிகதிர்ப் பரிதித் தோற்றம்
போலுமாற் பாவை பாகம் பொங்கிய திமிர வீக்கம்
போலுமா னீற்று மேனி பூரண மதியின் றோற்றம்
போலுமாற் பொருளொன் றில்லாப் பிரமனூர்ப் புனித னூர்க்கே.

புனிதனே பிரம னூரிற் புலவனே குரவ னில்லான்
தனிநல நுகர்ந்த கோளுந் தழறவழ் விடவ ராவும்
பனிதவழ் கங்கை வேணி பதித்துல கேத்த வைத்தாய்
இனியடித் தலத்தி லென்னை யிருவுதல் வழக்கே யாமால். (77)

மாலுமோர் பித்த னென்றல் வழக்குமற் பிரம னூரின்
ஏலும்வா னவனே யாக்கை யாவரு மியக்க லன்றிச்
சாலும்வே றுருவு கொண்டு தரித்தது சுமத்த லில்லை
ஆலுநீ ரனல்வெண் டிங்க ளாருயிர் சுமத்தி யன்றே. (78)

அன்றுநீ மேருக் கோட்டிற் றங்கைவா ளுதற்றீக் காய்ப்பின்
என்றனை வலிய னுக வெண்ணிலே னெனது நெஞ்ச
வன்றனிச் சிலையைக் கோட்டி வரவரக் கரைத்த வாற்றல்
வென்றமுன் வலியுங் கொண்டேன் பிரமனூர் வியந்து ளோயே.

வியந்துளோ ரகமும் வேத வுச்சியும் பிரம னூரும்
நயந்தகா வகமு மன்று நாடக நடிக்கும் பெம்மான்
பயந்தளி யேனை முன்பு முன்புறப் பயிற்றி யின்பம்
இயைந்தகங் களிப்பப் பின்பு மின்புற விருத்தி னனே. (80)

வேறு.

இருத்தி னனிரு ளாணவத் தின்வலி
வருத்தி னன்வினை வாட்டினன் மாயையென்
றருத்தி யாலுரைத் தாலுநெஞ் சாலுமே
பெருத்த சீர்ப்பிர மாபுரன் றன்னையே. (81)

தன்னைத் தன்னரு ளானனி கண்டுபின்
தன்னைத் தானது வாய்நின்று கண்டவர்
தன்னைத் தானிக ரும்பிர மூரிறை
தன்னுட் டாழ்வரல் லார்பிறந் தாழ்வரோ. (82)

தாழ வேணி வளர்த்துல கோர்தமைத்
தாழ வேண்டுநர் தங்களிற் றூயரே
வாழி வான்பிர மாபுர வள்ளறன்
வாழி வேட மெனத்தொழு வார்களே. (83)

வார ணிந்த வனமுலைக் குன்றமும்
கார ணிந்த கருங்குழற் கற்றையும்
பார மென்று பதைத்திநெஞ் சேபிர
மூர னைப்பணி யாயொரு காலுமே. (84)

கால யிற்றிக் கனலி னிறுத்திலென்
சால நீருட் டணித்துழக் கிற்றிலென்
ஏல வான்பிர மூரனை யேத்தெனின்
மாலு கிற்றி மறுத்தியென் னுள்ளமே. (85)

உள்ளந் தீய வுழப்பினுந் தஞ்சமென்
றள்ளி லைப்படை யாண்மை யியமனென்

றள்ள விவ்வயிற் சாரல் பிரமனூர்
வள்ளல் பாதம் வளைந்துகொண் டிட்டதே. (86)

இட்டி தானவென் னுள்ள மிரும்புகழ்
அட்ட திக்கு மவிர்பிர மூர்புகக்
கட்டு வார்சடைக் காளைபல் லோர்தொழ
நட்ட மாடு நனந்தலை யாயதே. (87)

ஆய மோவடி யார்குழு வன்றெனத்
தாய மோநின தாளின வல்லவிக்
காய மோகன வோதடித் தோகொன்னே
மாய மோபிர மாபுர வாணனே. (88)

வானத் துய்ப்பினு மண்ணி னிறுப்பினும்
ஈனத் துய்ப்பினு மின்புளன் வேதனூர்ப்
பேனத் துற்ற பெரும்புனல் வேணியான்
ஊனத் துற்ற தொழிப்பதென் றோர்தலால். (89)

ஓர்ந்து பார்க்கி னுனக்கே யிழுக்கெனத்
தீர்ந்து போக விடுத்தல்செல் லூழிகள்
பேர்ந்து மாள்வதுன் பெற்றிமை யாதலால்
ஆர்ந்த சீர்ப்பிர மாபுரத் தண்ணலே. (90)

## வேறு.

அண்ணற் கரிய பிரமநக
ரலங்கு மொளியுன் னியபொழுதே
உண்ணெக் குருக வதின்முளைத்திட்
டுரையிற் கிளைத்துப் பொறிவழியில்
நண்ணிப் படர்ந்து புறத்தெழுந்து
நனிபல் பொருளு மகத்தடக்கி
விண்ணிற் பரந்து திசைவிழுங்கி
விரிவற் றெங்கும் விரிந்ததே. (91)

விரிவின் றெழுந்து விரிந்தவொளி
விழுங்கிக் கிடப்ப வதினின்றும்
பிரிவின் றிகப்பப் பிரித்துவினைப்
பிணக்கிற் றுவக்கிக் கொட்புறுத்திப்
பரிவின் றிருக்குந் திறமின்னும்
பண்ணும் வலிய திருளென்ருன்
முரிவின் றெளிரும் பிரமநகர்
முதலன் றின்பும் பெறுவரே. (92)

பெறுதற் கரிய பிரமநகர்ப்
பெருவாழ் வுள்ளு தொறும்புதிதாய்
முறுகிக் கதித்த பேரன்பின்
முதிர்ச்சி யளவி னன்மையதாய்
உறுமக் கருத்தி னிலையாமை
யொழியுந் தோறும் பண்டையதாய்
அறுதிக் கழிவ தளவினஃ
தகன்று சேட்பட் டொளிக்குமே. (93)

ஒளிக்கு மடியேன் மலவிருளை
யொளிர்க்கு மளியேன் றனியுளத்தை
விளிக்குஞ் சிறியேன் சிற்றறிவை
மிளிர்க்குந் தமியேன் முரணிலையைத்
தெளிக்கு மறைசூழ் பிரமநகர்த்
தெளிக்கும் வளைக்கை மாதுடனுய்த்
தளிக்கு மழைபோ லருள்சுரந்து
தளிர்க்குந் தருவிற் குளிர்ப்பவனே. (94)

பவளக் கடிகைத் துவரிதழ்வாய்ப்
பட்டுக் கிசைந்த பெருமாட்டி
தவளத் தாள முறுவனிலாத்
தனக்கும் பிரம நகராளும்

...மராசர் ப...க்கலைக்க...
...லை
...முகம் நூ...

திவளக் கதிர்விட் டிலகுசடைத்
தேவன் முறுவ னிலாத்தனக்கும்
குவளைக் குலமன் றடியருளக்
கொழுந்தா மரையு மலருமே. (95)

மலர்ந்த கருணைப் பிரமநகர்
வள்ள லருட்கண் மலர்தலுமே
புலர்ந்த திறுதி யொளிகளுக்கும்
புலரா வெனது மலத்திமிரம்
அலர்ந்த துலப்பில் காலங்க
ளலர்ந்து மலரா வுளக்கமலம்
உலர்ந்த துலக முலப்புழியு
முலவா மதுகை யுடலுமே. (96)

உடலும் வினையி னுலகனைத்து
முயிர்த்து நிறுவி யொழித்துமறைத்
தடைவீ னருள வேறுவே
றடுத்தாங் கருளா னந்தநிலைத்
தடவு மனத்தை நிமிர்த்தருளத்
தனியே யுருக்கொண் டெழுந்தருளும்
கடவுட் கருணைப் பிரமநகர்க்
களைக ணேநற் களைகணே. (97)

களைகட் டகற்றி யெருப்பெய்து
கமழ்நீர் யாப்ப வுடன்வளர்ந்து
விளையப் பலவும் பதடிவிளை
முதல்போல் வினையேற் கடியரொடும்
தளைக்கட் டறுத்திட் டருள்புரிந்துந்
தமியேன் றணந்தேன் றடுத்தருளாய்
உளையப் புரங்கொல் சிலைத்தடக்கை
யொருவா பிரம நகரானே. (98)

நகரங் கலந்த மணிவிளக்கே
நறைவார் பகழி மதனுயர்த்த
மகரங் கலக்கு மனத்திருளே
மனநன் கெதிர்ந்தோர்க் கெதிரொளியே
புகரங் ககற்றி யவமாற்றிப்
பொற்ப வசித்த பூரணமே
சிகரங் கலந்த பிரமநகர்த்
தெளிவே யென்னைத் தெளித்தாயே. (99)

தாயா யிரங்கி வளர்மதியிற்
றதைபே ரிருளைத் துறந்தவருள்
ஓயா துள்கிக் கரைந்துருகி
யொருவன் பிரம நகரெந்தைக்
காயா வளியே னிடுமலர்க
ளன்றே னடியின் மருவுமவன்
மாயா தளிப்ப வென்சிரத்தில்
வனவார் கழற்பூ மருவுமே. (100)

---

பிரமீசர் பதிற்றுப்பத்தந்தாதி முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

---

ஸ்ரீ கச்சியப்பமுனிவரர் கழலடி வாழ்க.

ஸ்ரீ மாதவச் சிவஞானயோகிகள் மலரடி வாழ்க.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

கவிராக்ஷஸ -

# ஸ்ரீ கச்சியப்ப முனிவர் பிரபந்தங்கள்.

2. கச்சி ஆனந்தருத்திரேசர்
பதிற்றுப்பத்தந்தாதி

திருவாவடுதுறையாதீனம்.

பண்ணிசைவெம் பரிதிமதி திலதயிலம் தீயிரும்பு
பாணி யுப்பு
விண்ணனில முடலுயிர்நீர் நிழலுச்சிப் பளிங்குபகல்
விளக்குப் பானீர்
கண்ணிரவி யுணர்வொளிபோற் பிறிவரிய வத்துவிதக்
கலவி காட்டித்
தண்ணளிவைத் தெனையாண்ட துறைசைநமச் சிவாயகுரு
சரணம் போற்றி.

**ஸ்ரீ மாதவச் சிவஞானயோகிகள்.**

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# கச்சி ஆனந்தருத்திரேசர் பதிற்றுப்பத்தந்தாதி.

---

## காப்பு

முந்திமையோர் மதியாமை மூரிநெடுங்
கடல்கடைய முனிந்து வல்லே
அந்திலமிழ் துயிர்ப்பியா தாலாலந்
தோற்றியவ ரகந்தை காற்றும்
தந்தைவினைக் கூறிழைத்திட் டுய்ந்ததுமல்
லான்முதன்மை தனக்கே காட்டும்
மைந்தனைவண் காஞ்சிநகர் ஆனந்த
விநாயகனை வணக்கஞ் செய்வாம்.

## நூல்.

மணிபூத்த மலர்த்தடமு மலர்பூத்த
விணர்ப்பொழிலு மருங்கு சூழ்ந்த
அணிபூத்த காஞ்சிநக ரானந்த
ருத்திரே சத்து வாழும்
பணிபூத்த குழைகழற்றூட் பண்ணவனைப்
பணிந்தேத்தும் பண்பு மிக்கோர்
பிணிபூத்த பெரும்பிறவிக் கடனின்று
மானந்தப் பிறங்கல் சேர்வார். (1)

சேர்ந்தோங்கு மணிக்குறங்கிற் றிதலைமுலைச்
சேயரிக்கட் டெரிவை பாகம்
கூர்ந்தானை யானந்த ருத்திரே
சத்தமர்ந்த குணக்குன் றானைச்
சார்ந்தாவி யுடல்பொருளுந் தனக்களித்துப்
பேரின்பத் தடத்துண் மூழ்கி
வாழ்ந்தார்கள் வாழ்ந்தார்கண் மற்றையர்கள்
வாழ்வென்னை வாழ்வு மாதோ. (2)

மாதர்வடி வினைவாட்கண் வதனநகை
முலையல்குன் மருங்குல் கைகால்
ஆதியெனத் தெரிந்துளமே மயங்கியயர்
கின்றனைமற் றறையக் கேண்மோ
நீதியரு ளானந்த ருத்திரே
சத்தமர்ந்த நிமலற் போற்றி
மேதைமச்சை சுக்கிலமூத் திரமாதி
யெனத்தெரிதி விருப்பெங் குண்டே. (3)

உண்டில்லை யெனுமருங்கு லுமையிடங்கொண்
டாடிருக்க ணுற்று மூடக்
கண்டொல்லை கழுவாய்க்கு விடைகொடுத்தா
னெனிற்காஞ்சி நகரில் யார்க்கும்
தொண்டல்கு மானந்த ருத்திரே
சத்தமர்ந்த தொல்லை வாழ்வை
விண்டல்ல புரிகிற்பார் யாங்குய்தி
பெறுகிற்பார் விடைக்கு நெஞ்சே. (4)

நெஞ்சகமே சீசீநின் குணமென்னே
வானமிழ்த நேர்ந்துண் டாலும்
அஞ்சிறைமெல் லீயெவரு மருவருக்கும்
பவ்வீகண் டகலா வாபோன்

மஞ்சனைநல் லானந்த ருத்திரே
சத்தமர்ந்த மணியைக் கண்டு
நஞ்சனைய விழிமடவார் நாற்றவுடல்
வெறுத்திலையா னயக்கின் றாயே. (5)

நயக்குமடி யவர்கோல நாள்வாயு
நயந்தவர்க ளேவ லாற்றிப்
பயக்குமரு ளானந்த ருத்திரே
சத்தமர்ந்த பகவற் றாழ்ந்து
வியக்குமவன் றிருப்புகழை வாயார
விரித்துரைத்து மேவு கிற்பிற்
புயக்கரிதோ வுலகமெனுஞ் சேற்றிடைப்போ
யழுந்தியபுல் லறிவை யம்மா. (6)

அம்மையிற்செய் தீவினையின் பயன்வருவ
தறியாமை யந்தோ வந்தோ
இம்மையிற்செய் நல்வினையி னிதுவருவ
தெனக்கருதி யிழுதை யோர்கள்
செம்மையரு ளானந்த ருத்திரே
சத்தமர்ந்த செம்மற் போற்றா
தும்மைவரு பயனிழந்தார் நெஞ்சகமே
நீகலங்க லொழுக்கி னில்லே. (7)

நிற்குணனை யானந்த ருத்திரே
சத்தமர்ந்த நிலைமை யானை
விற்குணமே யிலைமுகப்பைம் பூணெனமார்
பிடைக்கிடத்தும் விடங்கன் றன்னை
நற்குணமுள் ளவரல்லா ரடுத்திருந்தும்
வழிபாடு நண்ணு கில்லார்
எற்கதிரி னலர்கமலம் வண்டலது
மண்டுகே மெண்ணு தன்றே. (8)

அன்றியமுப் புரம்பொடிப்ப தணிநகையா
லென்பதுமுன் பறியாய் கொல்லோ
ஒன்றியசீ ரானந்த ருத்திரே
சத்தமர்ந்த வொருவா கோல
வென்றிவரிச் சிலைவரையும் வீக்குறுநாண்
வாசுகியும் விரைசெ லம்பு
மன்றல்கமழ் துளவணிந்த மார்பனுமாக்
காத்தேந்தும் வயமை யென்னே. (9)

என்னையுடை யான்றிருமான் முண்டகனிந்
திரனிமையோ ரெவருஞ் சூழ்ந்து
முன்னிறைஞ்சு மானந்த ருத்திரே
சத்தமர்ந்த முதல்வ னென்றால்
அன்னையனை யாய்க்கறவும் பெருமையே
யினியேனு மடியா ரெல்லாம்
துன்னியசூ ழலில்யானு முடங்குறையக்
கடைக்கணியாய் சோதி வாழ்வே. (10)

வேறு.

வாழ்வெனும் படுகர்ச் சேறு வயின்வயி னமுக்க மாழாந்
தாழ்வது தகுமோ வன்னே வானந்த ருத்தி ரேச
எழ்வயப் புரவித் திண்டே ரிரவிபல் லுகுத்தோ யென்பால்
காழ்வினைக் கவய நூறிக் கருணையங் கவய நல்கே. (11)

நல்குவ துனது தாளே யல்லது வேறு நல்கா
தல்கிய காஞ்சி மூதூ ரானந்த ருத்தி ரேச
பல்கிய வன்பு நீங்காப் பண்பெனக் கருள்க வன்றேல்
மெல்குவல் வேறு காணேன் விம்முவ னென்செய் கேனே. (12)

செய்யபொன் னுருவா னென்றும்
வெண்பொடி திமிர்ந்தா னென்றும்
ஐயனு யாண்டா னென்று
மானந்த ருத்தி ரேசத்

துய்யவே நின்ரு னென்று
மோதிடப் படாதே லெந்தாய்
பொய்யிருள் கழூவி யாரே
நின்னடிப் போது காண்பார். (13)

காண்பது கருதி மாலுங் கமலனு நெடிது காலம்
வீண்பட முயன்ரு ரென்ருல் வினையினேன் காண்பல் கொல்லோ
ஆண்படு பொழில்சூழ் காஞ்சி யானந்த ருத்தி ரேச
மாண்படு கருணை தன்னுல் வயக்குதி நினது பாதம். (14)

பாதகம் பலவுஞ் செய்தேன் பரிந்தொரு கழுவா யாற்றேன்
ஏதமே யியற்ற வின்னு மெண்ணுவ லெங்ங னுய்வேன்
ஆதகா தென்று வல்லே யானந்த ருத்தி ரேச
நீதடுத் தாள வேண்டு நின்பெருங் கருணை நீரால். (15)

நீரினை விடத்தை மானை நெருப்பினைப் பிறவற் ருேடும்
ஆரிணர் முடித்த வேணி யானந்த ருத்தி ரேச
பாரிடை யடக்கிக் காத்தும் பயனிலை பலவு நோா
ஒருமென் றனையுந் தாளி லுறுத்திடா தொழிந்த காலை. (16)

காலையின் மலநோ யுச்சிக் கடும்பசி யுடற்றுந் துன்பம்
மாலையிற் காமப் பீழை யிடையிடை மற்ற னந்தம்
ஆலையிற் கரும்பு போன்றே னனந்த ருத்தி ரேச
மேலைவல் வினையே ருமை விழுத்தகு கலப்பு வையே. (17)

வையக முழுதுஞ் சூழ்ந்தும் வனம்பல சரித்தும் பன்னுள்
ஐயமேற் றுழன்று மென்னே யானந்த ருத்தி ரேசன்
செய்யபூங் கழல்கள் காண்டல் செல்லுமோ சிறிது நோவா
துய்யலா மன்னே ஞேக்க முறுத்துவ னுயி னின்னே. (18)

இன்னலே யாக்கை யென்னப் பட்டன வெவையு மாவிக்
கன்னது தெரித ராமை யானந்த ருத்தி ரேசன்
தன்னைநன் றடுத்தும் போக தனுக்களை யிரத்தி நெஞ்சே
பொன்னடிப் போதே வேண்டத் தக்கது புகழ்ந்து வேண்டே.

வேண்டுவார் வேட்ட யாவும் பெற்றபின் விழைய நிற்ப
தாண்டருள் காஞ்சி மூதா ரானந்த ருத்தி ரேசன்
மாண்டகு கமல பாத மற்றது பெற்றுற் பின்றைக்
காண்டகு மனமே வேட்டுக் கவர்பொருள் வேறென் றின்றே.

## வேறு.

இன்று வாழ்குது மென்னவும் வரையிலா வுடலினை யெடுத்தேமுக்
கொன்று மானந்த ருத்திரே சத்தம ரொருவனை மடநெஞ்சே
மன்றன் மாமல ரான்மணிப் புனலினுன் மற்றுள பொருளாலும்
நன்று மன்பினுல் வழிபட லல்லது நாடுவ தினியென்னே. (21)

என்னை யாண்டருள் புரியென நினைந்தன
னெண்ணுமவ் வுளத்தூடே
அன்னை யாகிய வானந்த ருத்திரே
சத்தம ரருளாளன்
மின்னி னேரிடை யாளொடுங் கணத்தொடும்
விண்ணவர் தொழுதேத்தத்
தன்னை நேர்கட மாடுத ருேடங்கினன்
றகர்ந்தது மலக்கோட்டம். (22)

கோட்ட மேபுரி கின்றனை சிதடர்தங் கூட்டமே விழைகின்றாய்
எட்டை தீர்த்திடு மானந்த ருத்திரே சத்தம ரிறையோன்பால்
நாட்டம் யாவதும் வைத்திலை யடியவர் நண்ணிய குழாங்கண்டால்
ஓட்ட மேபுரி வாய்மன மேயுனக் குய்வகை மொழிகல்லாய். (23)

கல்ல ரத்தமூட் டியகரூங் கலிங்கமுங் கதிர்த்தசெஞ் சடைக்காடும்
அல்ல னுக்கிய தவளவெண் பூதியு மக்கமா லையுங்கண்டால்
வில்ல ழுத்திய வானந்த ருத்திரே சத்துமெய்ப் பொருளென்றே
சொல்ல டித்துணை பணியுளத் ததுவென்றேதணிவழியிதுவாமால்.

ஆலம் பூத்தொளிர் மணிநிறக் கண்டமு
மவிழ்ந்தசெஞ் சடைக்காடும்
நீலம் பூத்தொளிர் விழியுமை பாகமு
நிலவுமிழ் முகப்போதும்
கோலம் பூத்தொளி ரானந்த ருத்திரே
சத்தமர் குணக்குன்றின்
சீலம் பூத்தொளிர் பாததா மரையுமென்
சிந்தைவிட் டகலாவால். (25)

அகல வெண்ணுவா ருளத்தினைத் தானுமங்
ககலவெண் ணுபுநிற்கும்
புகற லெண்ணுவா ருளத்தினைத் தானுநேர்
புகறலெண் ணுபுநிற்கும்
பகரு மெண்குண னெட்டுரு வத்தனெண்
டோளன்பாற் பதிபாகன்
நிகரி லானந்த னனந்த ருத்திரே
சத்தமர் நிறையோனே. (26)

நிறையு மன்பினு னினைந்திலை பணிந்திலை
நெடிதவன் றிசைநோக்கி
உறைகள் கண்ணிணை கால நன்றுருகலை
யுரைதழு தழுத்தில்லாய்
மறைமு ழக்கரு வானந்த ருத்திரே
சத்தமர் மழவெள்ளேற்
றிறையை யெங்ஙனம் பெறுகுவை நெஞ்சமே
யென்னையான் புரிகேனே. (27)

புரிமு றுக்கவிழ் முண்டகப் புதுமலர்
பூத்தவுந் தியினானை
அரிவி ழிப்பொது மகளென வரவழைத்
தருந்தவர் திருக்கோட்டி

உரிய தன்மனை யாக்கிய வானந்த
ருத்திரே சத்தண்ணல்
விரிபு கழ்ப்பதம் போற்றுந ருள்ளகம்
விடைப்பினு மீட்பானல். (28)

மீட்சி யில்லதோ ரானந்தப் பெருகொளி
வீட்டிடைக் குடியேற்றி
ஆட்சி கொண்டரு ளானந்த ருத்திரே
சத்தம ரறவோனைக்
காட்சி கொள்ள லுங் காணுரு திருத்தலுங்
கரிசெனக் கண்டாங்கே
மாட்சி கொண்டவக் காட்சியின் யாத்தனன்
வளர்ந்தது பெரும்போகம். (29)

போகம் வேண்டிய விண்ணவர் குழாங்களைப்
புழுவினுங் கடையாக்கி
ஏக மாகிய வீட்டினைத் தலைப்பட
வெண்ணிய வடியாரை
மாக மேத்திய வானந்த ருத்திரே
சத்தமர் மணிகண்டன்
பாக சாதனன் முதலியோர் பணிந்தெழும்
பரிசினிற் றருமம்மா. (30)

வேறு.

மாவெழுந் தொலிக்கு நந்தன வனமு
மதுமழை சொரிமலர்ப் பொழிலும்
பூவெழுந் துயிர்க்கும் பொய்கையு மடுத்துப்
போகபூ மியின்வளம் விறந்து
பாவெழுந் தாற்று மானந்த ருத்தி
ரேசம்வாழ் பதியென வமர்ந்த
சேவெழுந் தொலிக்குந் திண்கொடி யானைச்
சேர்ந்தனன் றீர்ந்ததென் வினையே. (31)

வினைவள மீட்டி நரகொடு துறக்கம்
 வியனில னென்னுமூன் றிடத்தும்
வனைகலத் திகிரி கொட்புறல் போல
 வைகலுங் கொட்புறு வேனை
அனையென விரங்கி யாள்வது கருதி
 யானந்த ருத்திரே சத்துத்
தனையிக ரில்லா னிருந்தன னவன்றன்
 றன்மையை யாவரே யறிவார். (32)

அறிவிரண் டனையு மடக்குபே ரறிவா
 யலரியா தியவொளிக் கெல்லாம்
செறியொளி செறிக்கும் பெருகுபே ரொளியாய்த்
 திலதமார் நெய்யென வெங்கும்
பிறிவில தாகி நிறைந்துநின் றருளும்
 பெரும்பெயர்க் கடவுள்வண் காஞ்சிக்
குறிகொளா னந்த ருத்திரே சத்துக்
 குடிகொளுங் குரூஉமணி யுருவன். (33)

உருவமா யருவா யுபயமா யுலக
 முயிர்த்தளித் தழித்துடன் மறைத்திட்
டருளுமா னந்த ருத்திரே சத்தெ
 மமலனை யுள்ளவா றறியார்
மருளினுன் மூவர் தங்களு ளொருவ
 னுகவே மதித்துட னெண்ணி
இருளினல் விழுங்கப் பட்டெரி நிரயத்
 தினைவரீ தென்னபா தகமே. (34)

பாதகம் பலவும் பயிற்றினும் பொதும்பர்ப்
 பண்ணைவண் டினமது மாந்திப்
போதகத் துறங்கு மானந்த ருத்தி
 ரேசத்துப் பொற்பவீற் றிருக்கும்

சேதகப் பொருளைச் சிறுவரை யேனுஞ்
சென்றடி வணங்கிடிற் றீரும்
பீதக வுடைய னுதியர்ப் பன்னுட்
பேணினும் பெயருமோ வொன்றும். (35)

ஒன்றதாய்ப் பலவா யுரைகளா யுரையி
னுணர்தரு பொருள்களா யுலகாய்
அன்றதா யசல மாயகண் டிதமா
யப்பிர மேயமா யறிவாய்
நின்றவண் காஞ்சி யானந்த ருத்தி
ரேசத்து நின்மலக் கொழுந்தை
என்றுகொல் புணர்வ தென்றவா யுருகி
யிருக்குமா லெனதுளப் பேதை. (36)

பேதையேன் பிழைக்கும் பிழைகளோ வனந்தம்
பிழைதபத் தீர்வுசெய் வதற்கு
வேதனை மிகுந்த பிணியுட லொட்டா
தயலவர்க் களித்திட வெறுக்கை
யாதுமொன் றில்லே னானந்த ருத்தி
ரேசத்து ளெம்பிரா னதனுல்
ஓதுவ சிலகொண் டென்பிழை நூறி
யுய்யக்கொண் டருள்வதுன் கடனே. (37)

கடன்முகட் டெழுந்த விடமிடற் றடக்கிக்
கடவுள ராருயிர் காத்த
இடவிய காஞ்சி யானந்த ருத்தி
ரேசத்து ளெம்பிரா னடுத்தேன்
மடவிய மனத்தன் மாசுளா னென்று
மருங்குளார் நகைத்திடப் பட்டால்
தடவிய நினக்கே யிழிவுமற் றதனாற்
றூழ்த்துரு தாண்டுநின் கருளே. (38)

அருளுவ னருளு வானெனப் பன்னு
ளவாயவா யலந்தலந் தெய்த்தேன்
இருளினுங் கழிக கழிகவென் றூடல்
யாவும்பார்த் திருந்தனை நீயும்
தெருளினர் சூழு மானந்த ருத்தி
ரேசத்துச் சிவபரம் பொருளே
வெருளுவ லவ்வா றின்னுநீ விடுப்பின்
விரைந்தென திடும்பைநோய் களையே. (39)

களைகணு யுலக முழுவதுங் காக்குங்
கண்ணுதால் காஞ்சிமா நகரின்
விளைமதுப் பொழில்சூ ழானந்த ருத்தி
ரேசத்து வித்தகர் தமியேன்
தளையவிழ் பூநீ ரிடுவதே போலுந்
தாளிணை தருவதற் கேதுத்
திளைபெருங் கருணை யன்றுகொ லதுசெய்
வித்ததுந் திருவருட் டிறமே. (40)

### வேறு.

அருட்டிறஞ்சே ரானந்த ருத்திரே சத்தமர்ந்து
பொருட்டிறங்கள் பகுத்தருளும் புண்ணியனைப் புன்மதியைத்
தெருட்டியிடு முதற்குருவைச் சேர்ந்தார்க்கு மூலமெனும்
இருட்டிருக்கு மேயெழுந்த வினனொளியின் மாயுமே. (41)

மாய்வனமும் பிறப்பனவும் வைகுவன வும்புந்தி
ஆயுமெனி லானந்த ருத்திரே சத்தமர்ந்த
தேயுமிள மதிச்சடிலச் சிவபெருமான் பதத்தன்றிக்
காயுமல கிடைச்சிறிதுங் கதுவாது கதுவர்தே. (42)

கதுவியுயி ரினைக்கவற்றிக் கலக்குவது மூலமலம்
அதுகாப்ப தானந்த ருத்திரே சத்தமர்ந்த

விதுவொளிர்பொற் சடைப்பெருமான் விளங்குதிரு வருளதுதான்
முதுமறையின் வழிச்சரியை முதன்மூன்றின் வருவதே. (43)

வருவதும்பின் போகுவது மாயுழலு மாநுடத்தீர்
அருண்மிகுந்த வானந்த ருத்திரே சத்தமிழ்தை
ஒருமுறையேத் திடினுங்க ளுலமந்த பவம்பறையும்
இருமுறையேத் திடினும்மை யெய்தினர்க்கும் பிறப்பிறுமே. (44)

இறுமுடலுக் குபசார மியற்றியுறு நாள்வீணில்
அறுவதுசெய் தானந்த ருத்திரே சத்திறையைப்
பெறுவதுசெய் தாயில்லை பீழையிற்பட் டவலித்தாய்
கொறுகொறுக்குஞ் சமனுலுங்கோட்பட்டாய் மனக்குரங்கே. (45)

குரங்கமனந் துறவோர்க்குங் கொடியிடையார் நடநவிற்றும்
அரங்கமலி யானந்த ருத்திரே சத்தடிகள்
வரங்களெனத் தனதருளை வயக்கமுறுந் தனைமன்ற
இரங்கியரு ளுவனென்றால் யாதுவரம் பெறாவன்பால். (46)

பாலொத்த திருநீற்றான் பவளத்தி னொளிருருவான்
நீலத்தி னவிர்மிடற்று னிலாநகையா னிழல்களுற்றும்
ஆலத்த னானந்த ருத்திரே சத்தமலன்
கோலத்தைக் குறிக்கொண்டேன் பிறர்கோலங் குறியேனே. (47)

குறியேது மில்லானென் குறிமாற்றக் குறியேற்றான்
அறிவாள னானந்த ருத்திரே சம்பதியா
உறைவானென் பதியெனக்கிங் கொழிக்கிற்ப விளமாவின்
முறிமேனி தரித்தானென் முடைமேனி கழிப்பவே. (48)

கழிகாதல் பெற்றார்கள் கைகண்டார் காஞ்சிநகர்
அழியாத வானந்த ருத்திரே சத்திறையை
ஒழிகாதல் பெற்றார்க ளுறல்வேண்டல் வரையுச்சிப்
பிழிகாண முடமில்விற் பெரிதுயிர்த்த வாறாமால். (49)

மாவிருந்த வலக்காத்தான் வரையிருந்த விடக்காத்தான்
றூலிழுத்த மணித்தோா னூலொருநால் வர்க்களிப்ப
ஆவிருந்த வானந்த ருத்திரே சத்தமலற்
கோலமிடல் வழக்கன்றே யுறுமலத்தின் வெரீஇயினரே. (50)

வேறு.

வெருவுவதென் வருவினைக்கு மடமை நெஞ்சே
வேலைவிட மிடற்றடக்கி விண்ணோர்க் கெல்லாம்
அருவியென விழிகவிழ்த்த புனலை மாற்றி
ஆவியரு ளானந்த ருத்தி ரேசத்
தொருபொருளுண் டவன்பெயருண் டவனை யண்மி
ஓங்கியவத் திருவெழுத்தை யுரைத்துப் போற்றிப்
பெருகியபே ரின்பவெள்ளத் தழுந்தி யொன்றாய்ப்
பிணைந்துவிடி னெஞ்ஞான்றும் பீழை யின்றே. (51)

இன்றளவுந் தீவினைகள் சால வாற்றி
யெழுநான்கு கோடியள றனைத்து மூழ்கி
நின்றவினைப் பயனருந்தப் பிணிகள் பல்ல
நெருங்கியவாக் கையிற்கிடந்து நெஞ்சே காண்டி
நன்றியினி வேண்டுமெனிற் காஞ்சி மூதூர்
நலத்தகையை யானந்த ருத்தி ரேசத்
தோன்றியொளிர் பரம்பரனைத் தேவர் தேவை
யுன்னுதியன் னவனடியா ருவப்பச் செய்யே. (52)

செய்யவுரு வான்வெள்ளை நீற்றா னீலஞ்
செறிமிடற்றான் பொற்சடையான் பைங்கட் டுத்திப்
பையரவப் பூணினா னுடுத்த தோலான்
பல்லெடுத்த கபாலத்தான் பயினற் கூத்தான்
மையளக வுமையிடத்தான் மழவெள் ளேற்றான்
மருங்குமிடை பூதத்தா னென்று வாழ்த்தி
ஐயனைநல் லானந்த ருத்தி ரேசத்
தடிகளைக்கண் டார்காணா ரவல நோயே. (53)

நோயிலியை மலமாயை கன்ம மில்லா
நோன்றகையை நூலுரைத்த முனைவன் றன்னைத்
தாயிலியைத் தத்துவனை யுலகுக் கெல்லாந்
தாயாகி யருள்சுரக்குந் தந்தை யானை
வேயினதோ ளுமைபூசை கொண்ட காஞ்சி
வேதியனை யானந்த ருத்தி ரேசக்
கோயிலிடைக் குருமணியைக் கூறு வார்கள்
குவலயந்தங் கூற்றின்வழி நடப்பக் கொள்வார். (54)

வாரணிந்து வடம்பூட்டித் தொய்யி றீட்டி
மையெழுதி யலர்சூட்டி மாத ரார்பாற்
சீரணிய வொருவருஞ்செப் பாமை நீயே
செல்கின்றாய் நான்மறையுஞ் செல்வக் காஞ்சி
ஏரணிந்த வானந்த ருத்தி ரேசத்
தெம்மானை யிறைஞ்சாயென் றாற்றா நின்றும்
போரணிந்த விடையானை யேகம் பத்தெம்
புண்ணியனை நெஞ்சேசே ராயி தென்னே. (55)

என்னுயிருக் குயிர்போலுங் கச்ச பேசத்
தெம்பெருமான் போலுமெழி லேகம் பத்து
மன்னியொளி ரேகம்ப வாணன் போலு
மயானத்து மணிபோலுங் காரோ ணத்துத்
துன்னுநிழற் கூவிளத்துத் தோன்றல் போலுந்
தூயநெறிக் காரைக்காட் டிறைவன் போலும்
பொன்னிமைக்கு மானந்த ருத்தி ரேசம்
பொற்பவீற் றிருந்தருளும் புராணன் றானே. (56)

தானேவல் விருட்கிடந்த ஞாட்பி னுக்கை
தந்துமன மாதியாற் றழைத்த கன்மம்
ஆனது பொருத்திமல பாக மாக்கி
யருள்பதித்துக் கன்மநே ராக்கி யாண்ட

வானேயு மானந்த ருத்தி ரேச
வரதனைமா வடிமுளைத்த மாணிக் கத்தைக்
கானேயு மலர்தூவிக் கருணை நோக்கிக்
கரைந்துருகிப் பணிகடப்பா டுறுவ தென்றே. (57)

என்றாழும் வெண்மதியும் விலகி யேகு
மெழிற்காமக் கோட்டம்வாழ் காஞ்சி மூதூர்
மன்றாடு காப்புகட மாடு முக்கண்
வள்ளலுய ரானந்த ருத்தி ரேசன்
வென்றாடு மலவலியை யறுத்த லோடு
மேலானே னதுசுத்தத் தருளா மென்றான்
தன்றாளி னிருந்துதொழில் புரியப் புக்கேன்
றகுதியின்மை காட்டினான் றணிந்துய்ந் தேனே. (58)

உய்ந்தாமென் றமரர்தொழு தாட நோக்க
முறுத்தவர்கள் வேட்டவர முதவு நாதன்
பந்தாடு பூண்முலையாள் பாகத் தண்ணல்
பண்பினர்சூ ழானந்த ருத்தி ரேசன்
பிந்தாத விருண்மலமும் யானும் பிந்தப்
பெயர்த்துமல மறுத்தாங்குத் திருகி னேனை
முந்தாத வகைதெரித்துத் தான்முன் னாகி
முடியாத வின்பவெள்ளத் தழுத்தி னானே. (59)

அழுத்தினான் சூலத்தி னெடுமா லாக்கை
யரிந்தேற்றான் மலர்த்தவிசிற் கிழவன் சென்னி
விழுத்தினான் வாளிரவி யெயிற்றுப் பந்தி
வீட்டினான் றக்கனெடு மெச்ச னாவி
வழுத்தினார்க் கருள்சுரந்து வேட்ட முற்றும்
வழங்கியிடு மானந்த ருத்தி ரேசன்
கொழுத்தின்னா நெறிக்கடவி யென்னைத் தட்டுங்
கோணைமலப் பெரும்பகையைக் குமைத்தி லானே. (60)

வேறு.

குமைத்தா னெதிர்ந்த காலனுயிர் கோல மாரன் றனக்கருவம்
அமைத்தான் காஞ்சி யானந்த ருத்தி ரேச னெனவஞ்சி
இமைத்தாற் பழுது வருமாலென் றெண்ணி யிமையா தமரரெலாம்
தமைத்தாம் பேணி விசும்பிருந்தார் தரைமா தவத்தோர்நகைக்கவே.

நகைக்கு முறுவ னெருப்பானு னளினக் காத்து நெருப்பானல்
தகைக்கு நுதற்க ணெருப்பானுற் றயங்கு முருவு நெருப்பானுன்
முகைக்குஞ் சோலை யானந்த ருத்தி ரேச முழுமுதலே
பகைக்கும் பகையு நினக்குளதாய்ப் பாரி னிருக்கு மிருக்குமே.(62)

இருக்கு முதலா நான்மறையு மெழுந்து நாடி யெட்டாமல்
தருக்கு விளியு மானந்த ருத்தி ரேசத் தனிப்பெருமான்
உருக்கி யளியே னுளமுழுது மோவா வின்பத் துறைபடியச்
செருக்கு மலத்தின் றிறனழித்தான் றேங்கிற் றேங்கு மருட்கடலே.

கடலாய் விரிந்தான் மழையானுன் கதிர்த்த மணிக்குன் றுகளானுன்
இடனு ரடவி முழுதானு னெல்லா மானுன் காஞ்சிநகர்
மடலார் சோலை யானந்த ருத்தி ரேசம் வதிவள்ளல்
படமா வடியே னுளம்புகுந்து பயின்று னீங்காப் பரிசினனே. (64)

பரிசில் விழைந்து மானுடரைப் பதுமத் தடங்க ணுன்மகவான்
பெரிய வெறுக்கைத் தனதனெனப் பெரிதும் பாவாற் புகழ்புலவீர்
கரிசு தணிக்கு மானந்த ருத்தி ரேசக் கண்ணுதல்பால்
விரசு மன்பிற் பாப்புனைமின் வேட்ட வேட்டாங் கடுக்குமே. (65)

அடுக்கு மலமே மாயையே யடர்க்குங் கன்ம மெனமூன்றும்
விடுக்கு மடியார் தாந்தானுய் விளையாட் டயர்ந்து பயனெவர்க்கும்
கொடுக்குங் காஞ்சி யானந்த ருத்தி ரேசக் கொழுமணிதன்
உடுக்கு முடையி லெண்கரியு மொளிரெண் பணியும்வ தியுமே(66)

வதியும் புவனந் தொறுந்தானும் வதிந்து வினைக ளினிதூட்டிப்
பொதியு மலத்தின் வலிதேய்த்துப் புனித மாக்குந் திருக்காஞ்சிப்
பதியில் வளரு மானந்த ருத்தி ரேசப் பசுபதிதன்
கதிர்செய் மணிநூ புரக்கழற்ருள் கருதா வினைக்குந் தீர்வுளதோ.

உளமே பிழைத்தா மிலையென்பா
யுள்ளே பிழைக்கும் பிழைகேண்மோ
இளமாம் பொழில்சூ ழானந்த
ருத்தி ரேசத் தெம்பெருமான்
அளமார் துரும்பு போனம்மை
யாக்கப் பணிக்குந் தொழிலெல்லாம்
வளரா நிற்ப நினதாக
மதித்தாய் பவத்திற் கதித்தாயே. (68)

தாயா யிரங்கி யானந்த ருத்தி ரேசத் தனிவள்ளல்
மாயா வுருவ மெனக்களித்து மாயா வுருவிற் ருன்வதிந்து
தோயா திருக்கு மவனியல்பு சூழ்ந்தா யாகின் மடநெஞ்சே
வீயா நின்றங் கபாவமாய் வெற்ற வின்பந் திளைப்பாயால். (69)

பாயா வேங்கை மடவாரும் பமர நாமு மாயினக்காற்
காயா நிற்கும் வாளரவக் கலன்பூண் டெழிலு மார்பத்தான்
தூயார் வணங்கு மானந்த ருத்தி ரேசத் தொழுகுலத்தின்
ஓயா வின்பத் தாளுறுத லொழிப்பார் யாவர் யாவரே. (70)

## வேறு.

யாவரும் வந்து வணங்கிப்போத
வெம்பெரு மானர சாட்சிவைகும்
காவள ரானந்த ருத்திரேசங்
காத்லிற் கண்டவ ரேத்தெடுத்தோர்
பூவணை நான்முக வன்பதமும்
பூதல மோரடி யாலளந்த
தேவன்வை குந்தமும் பொன்னுலகுஞ்
செல்லலர் கீழ்ப்பட வும்பர்ச்சேர்வார். (71)

சேர்ந்து செறிந்த குறங்கின்மாதர்
சேல்விழிப் பார்வையிற் பட்டுழுமை
வார்ந்த சடைப்பெரு மானைக்காஞ்சி
வைப்பின் முளைத்த மருந்தையன்பர்
சார்ந்து வணங்கு முக்கட்கரும்பைத்
தவளவெண் ணீற்றுரு வானைச்சீர்த்தி
ஆர்ந்தொளி ரானந்த ருத்திரேசத்
தண்ணலை யெண்ணினர் விண்ணுள்வாரே. (72)

ஆள்வது செய்தெனைத் தன்றொழும்பி
னாக்குதற் கேமன வாக்குக்காயம்
காள்வயிற் றந்துநண் ணுமைகண்டு
காதனல் லானந்த ருத்திரேசம்
மூள்வது செய்தெழு காதலோடு
முன்னி யிருந்து வணக்கியிட்டான்
மீள்வது செய்திட லாகுங்கொல்லோ
மேதகு மத்தகு தெய்வச்சூழல். (73)

சூழலங் காரமும் போகமற்றுந் தொல்லுக கத்தவர்க் காற்றநல்கிக்
கேழலங் கோடு மராவுமென்புங் கேழ்த்த திருவுருத் தாங்கியாழி
ஏழல மந்து கலங்கவைய மேங்க வெழுந்தநஞ் சுண்டதென்னே
ஊழலங் கானந்த ருத்திரேசத் தோகையின் வைகிய வும்பர்வேந்தே.

வேந்தர்கள் வேத்தியல் கண்டசோதி
மேதகு மானந்த ருத்திரேச
போந்தழு மோர்புலிக் குட்டிக்கம்மா
புவனங்கள் காக்கு மொருத்தன்பாயல்
சந்தனை நீதிகொ லன்னமாய
னெய்திட மின்மையி னன்றுகொன்னின்
காந்தொளி மேனியிற் பாதிவல்லே
கைக்கொண்டு விட்டனன் காசினிக்கே. (75)

காசினிக் கேற்றதொன் றன்றுநின்றன்
கைத்தொழி லானந்த ருத்திரேசத்
தாசில ராகியெல் லோருமுய்ய
வல்கிய வெம்பரு மானதனைப்
பேசுவல் கேட்டிநி னம்புவாயிற்
பெய்தது தாங்கிய வில்லுமேந்தித்
தேசொளித் தேரை யிவர்ந்தொடித்துத்
தேவர்கண் முன்னர்ச் சிரித்திநின்றே. (76)

நின்று மிருந்துங் கிடந்தும்போந்து
நெக்கு வணங்கி நக்கேத்தெடுக்கும்
துன்றிய மெய்யடி யார்குழாத்துத்
தொடக்குட னுய்விளை யாட்டயரும்
நன்றரு ளானந்த ருத்திரேச
நண்ணிய நாதவன் பேதுமில்லேன்
முன்றலை தாழ்த்தது வேபணியா
முன்னினை யென்வினை மோதுவாயே. (77)

மோது தரங்க மிரங்குகங்கை
மொய்யொளி வேணி யமைத்துச்செந்தீப்
போதுறழ் கைத்தல மேந்திற்றும்பர்
பூமழை தூர்த்து வணங்கித்தங்கள்
தீதுகு மானந்த ருத்திரேசத்
தேவர்பி ரான்கல னேந்தியையம்
மாத ரிடைப்புகுங் காலைவேட்ட
வைப்பி னடமதித் தோவிளம்பாய். (78)

விளம்புவ தொன்றுள தேஞ்சுநெஞ்சே
மெய்ம்மையிற் கேட்டி குருப்பிழைத்த
இளம்பிறை வேணியன் மாலாக்கற்
கின்னரு டந்தவே கம்பவாணன்

வளம்படு மானந்த ருத்திரேசன்
வந்தடி தாழிற் பொறுப்பனென்று
களம்படு தீவினை செய்யநீர்ந்த
கைதையம் போதினைக் கண்டுகொள்ளே. (79)

கொள்ளக் குறையா வளத்தினேங்குங்
கோலத் திருக்காஞ்சி வைப்பின்வைகும்
அள்ளெழி லானந்த ருத்திரேசத்
தடிகள் கழிய விழுந்தவென்னைத்
தள்ளலை யாளது சீர்த்தியாகுந்
தாழ்ந்தவெள் ளென்பும்பைந் தோலுமற்றும்
விள்ளலை யாத லறிந்துளார்க்கு
மெய்ப்புக ழாக விளங்கிற்றன்றே. (80)

**வேறு.**

அன்றி ஞர்புரத் தாரழற் கோட்படா
தன்பி னுன்றவர் மூவர் பிழைத்தமை
இன்றும் வையக மோதிடக் கேட்டநீ
யேர்கொ ளானந்த ருத்திரே சத்தனை
நன்று மன்பின் வணங்கலை போற்றிலை
நாடி நண்ணிலை திண்ணிய நெஞ்சமே
ஒன்று நிற்புறத் தோதிலன் வல்விரைந்
துனக்கு நேர்ந்த நெறிக்க ணியங்கிடே. (81)

இயங்கு முப்புர மெய்து பொடிப்பதற்
கியக்க மின்றி யிருந்த புடவியும்
தயங்கு வெற்பு மியங்க வெளிக்கொளுஞ்
சதுர னானந்த ருத்திரே சத்தவன்
புயங்கு லாவுவெண் ணீற்றொளி கண்டவர்
போதுந் தென்றிசை யானுருக் காண்பரோ
வயங்கு மன்னவன் கச்சுடை கண்டவர்
மறலி பாசம் வரிக்கப் படுவரோ. (82)

படுவதொன் றில்லை துன்பமல் லானெடும்
பௌதி கத்திடைப் பண்பினெஞ் சேயது
விடுவ தேவிடுத் தாலெழிற் காஞ்சியின்
மேவு மானந்த ருத்திரே சத்தனைத்
தொடுவ தாம்பய னெய்து றுமெய்துறிற்
சூழ்ந்த வல்வினை மூல மலத்தொடும்
கெடுவ தாமவை கெட்டிடி னெய்துமாற்
கேடி லாப்பா மானந்த வெள்ளமே. (83)

வெள்ளம் பூத்த விரிசடைக் கற்றையும்
வெண்பொ டித்திகழ் பாலமும் பாலத்துக்
கள்ளம் பூத்த கதிர்க்கன னேக்கமுங்
கதித்த பேருட் பார்வை முகங்களும்
அள்ளெ ழிற்கறைக் கண்டமு மாதடை
யாளம் வைத்த மருமக் குறிகளும்
வள்ள லானந்த ருத்திரே சத்தவன்
மலர்ப்ப தமும்வ யங்குவ வெங்குமே. (84)

எங்கு நின்றுல கோம்பு மிறைவனை
யென்னு யிர்க்குயி ராகிய வின்பனைப்
பொங்கு போரு ணல்கும் புராணனைப்
போகு கோட்டிமில் வெள்விடைப் பாகனைக்
கங்கை வேணி தரித்த கடவுளைக்
காஞ்சி யானந்த ருத்திரே சத்தனை
அங்கை யாமல கக்கனி போலவ
னருளி னற்கண்டு கொண்டன மென்பவே. (85)

என்பு காண்டொறு மீது நமக்குவந்
தெய்து மேயென வும்பர் கலங்குவார்
வன்பி னார்ந்த கபாலங்கள் காண்டொறு
மாலும் வேதனு மவ்வகை யேங்குவார்

முன்பன் னோர்கள் புகும்பொழு தையனே
மூரி மாமணிப் பேரணி தோற்றிடாய்
தென்பி றங்கிய காஞ்சி வளம்பதி
சிவணு மானந்த ருத்திரே சத்தனே. (86)

சிவணு மானந்த ருத்திரே சத்தனே
தெய்வ வாணி நதிக்கரை வாசனே
உவண வூர்தி விழிக்குச் சலந்தர
னுடலம் போழ்ந்த திகிரி யளித்தவா
கவன வாம்பரி குஞ்சர மற்றுமிற்
காத லாற்றொழு வார்க்கருள் கின்றனே
பவன வேகமும் பிற்பட முற்படு
பாய்வி டைவைத்த பண்பு தெரிக்கவே. (87)

தெரிக்கு மாகம மாமறை யாதியுந்
தெய்வ போக நுகர்ச்சி யொழுக்கமும்
பரிக்கும் பாச மிரிக்கு நெறிகளும்
பண்ண வர்க்கதி காரத் தொடர்ச்சியும்
விரிக்கு மெய்ப்புகழ்க் காஞ்சி வளம்பதி
மேவு மானந்த ருத்திரே சத்திறை
தரிக்கும் பேரரு ளாற்றிரு மேனியைத்
தரிக்கி லானெனி லாம்வகை யில்லையே. (88)

இல்லை யானமக் கென்று வெறுக்கைமிக்
கெய்தி னார்களை யெண்ணி யிரங்கிநீ
அல்ல விற்றுளை கின்றனை நெஞ்சமே
அவர்க ளோபண்டை நல்வினை யாற்றினர்
செல்ல லாம்வகை தீவினை முன்புநீ
செய்தொ ழிந்தனை தெய்வதக் காஞ்சியின்
மல்ல லானந்த ருத்திரே சத்தனை
வழுத்து மலைவ ளத்தினை யாவையே. (89)

ஆவ தும்மழி வெய்தலும் பாலவே
யாவ தற்கு மகிழ்ச்சி திளைத்தலும்
போவ தற்குக் கவலைப் படுதலும்
பூரி யோர்தொழி லாம்விடுத் துள்ளமே
சாவ தும்பிறப் புந்தவிர்த் தாண்டருள்
தலைவன் காஞ்சி வளம்பதி பொற்புற
மேவு மானந்த ருத்திரே சத்தவன்
மெய்ம்மை யாரரு ளேதுணைக் கோடியே. (90)

வேறு.

கோடி கோடிவன் பூதங்கள் குழுமிநின் ளுட
ஆடு மானந்த ருத்திரே சத்திறை யமரர்
நாடி நையநப் புணர்ந்தன னருளினுன் மனமே
கூடு மன்னவன் குறிப்பினை யேகுறிக் கொள்ளே. (91)

குறிக்கொ ளானந்த ருத்திரே சத்தமர் குழகா
வெறிக்கு மெல்லிதழ்க் கொன்றைசூழ் வேணியா நல்ல
நெறிக்க ணின்றில னென்றெனைத் தள்ளல யன்னை
செறிக்கு மாசொரீஇச் சேயெடுத் தணைப்பது கடனே. (92)

கடங்க விழ்க்கும்வண் கவுட்டுளைக் களிற்றுரிப் போர்வைப்
படங்க விழ்க்கும்பொற் சடைமுடிப் பகவமெய் யடியார்
அடங்கு மானந்த ருத்திரே சத்தம ரமல
விடங்க முற்றநின் றிருவுரு விழியெதிர் காட்டே. (93)

காட்ட தாகிய தன்னரு ளிடையெனைக் கலவி
மீட்டி ரண்டறத் தன்னொடும் விராய்த்தகை வினைகள்
ஓட்டி வல்வினை யேற்றமே லுறுவினை காத்தான்
கூட்டு மானந்த ருத்திரே சத்தமர் குழகன். (94)

குழக னானந்த ருத்திரே சக்குணக் கொண்டல்
அழகன் வாணுதல் விழிகொலோ வங்கையி னெருப்போ
உழலு நாயினேன் முன்செல வுறுவினைக் காட்டை
முழுது முண்டது விண்டது மூலமா மலமே. (95)

மலத்தின் வேரொடு மிருவினை மும்மல மாட்டி
நலக்கு மானந்த ருத்திரே சத்தமர் நம்பன்
நிலக்க ணல்கிய வுதவிநே ருதவியின் றுள்மே
அலக்கண் மாற்றிய வவனடித் தொழும்பூண் டொழுகே. (96)

ஒழுகு கண்கணீ ருரங்கழீ இத் தாழ்ந்திரு தாளும்
இழுக நெக்குநெக் கழுமடி யாருள விலதைக்
கொழுகொம் பாயினன் குளிர்பொழின் மலர்மது விடைத்தேன்
முழுகு மானந்த ருத்திரே சத்தமர் முதல்வன். (97)

முதல்வ ஞனந்த ருத்திரே சத்தின்முன் னினர்க்குப்
பதுமன் மாலறி யாதவப் பெரியபண் டாரப்
புதவு நீக்கினன் காவலுங் கடிந்தனன் புகுமின்
மதவு மாமலக் கலிதப வெளவுமி னறவீர். (98)

அறவ ஞனந்த ருத்திரே சத்தருட் செல்வன்
பிறவி நீக்கிய பேயினேன் போலுரு வெடுத்தான்
துறவின் மேலவர் மாலயன் சுருமற் றெவரும்
உறவி தாமென வவ்வுரு வுளத்துறுத் துவரே. (99)

உறுத்த ருட்பத மென்றலை மேலுறு பாசம்
அறுத்த வானந்த ருத்திரே சத்தனை யடுத்தோர்
வெறுத்த செல்வங்க ளாவன விம்மித வுலகம்
பொறுத்த வான்றரு விருநிதி புகழ்ச்சிந்தா மணியே. (100)

காப்பு உள்பட ஆகச் செய்யுள் **101.**

---

**கச்சி ஆனந்தருத்திரேசர் பதிற்றுப்பத்தந்தாதி முற்றிற்று.**

**திருச்சிற்றம்பலம்.**

---

**ஸ்ரீ மெய்கண்டதேவர் மிளிர்கழல் வெல்க.**
**ஸ்ரீ மாதவச் சிவஞானயோகிகள் மலரடி வாழ்க.**
**ஸ்ரீ கச்சியப்பமுனிவரர் கழலடி வாழ்க.**

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

கவிராக்ஷஸ -

# ஸ்ரீ கச்சியப்ப முனிவர் பிரபந்தங்கள்.

## 3. ஆனந்தருத்திரேசர் கழிநெடில்.

திருவாவடுதுறையாதீனம்.

உ

திருச்சிற்றம்பலம்.

# தேவாரம்.

“ தாயவன்கா ணுலகிற்குத் தன்னொப் பில்லாத்
தத்துவன்காண் மலைமங்கை பங்கா வென்பார்
வாயவன்காண் வரும்பிறவி நோய்தீர்ப் பான்காண்
வானவர்க்கும் தானவர்க்கும் மண்ணு ளோர்க்கும்
சேயவன்காண் நினைவார்க்குச் சித்த மாரத்
திருவடியே யுள்கிநினைந் தெழுவா ருள்ளம்
ஏயவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காணவனென் னெண்ணத் தானே.”

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# ஆனந்தருத்திரேசர் கழிநெடில்.

---

மண்ணில மாதி காதமீ ருன
மலிதரு தத்துவக் குழாத்துள்
வதிந்திடை தெரியா திருவினை யீட்டி
மறுப்பயில் பவம்பல வெடுத்து
விண்ணில மாதி யிடந்தொறுந் திரிந்து
மெலிதரு வீணனேன் றனையும்
விரைமலர்ப் பதத்து ளழுத்திமீட் டெழாமை
வியனருட் பார்வைதந் தருளாய்
பெண்ணிடம் படர்ந்த கருணையங் குன்றே
பேட்டவ ரகத்தினள் ளூறும்
பெருகொளிப் பிழம்பே யிகந்தவர்க் கென்றும்
பீழைசெய் தூங்குவீங் கிருளே
அண்ணலந் தேவர்க் கரியமெய்ப் பொருளே
அடியவர்க் கெளியவா னமுதே
அழகடை கிடக்குங் காஞ்சிவீற் றிருந்த
ஆனந்த ருத்திரே சுரனே. (1)

மும்மலச் செருக்கு மிருவினைத் திருக்கு
முதிர்ந்தவா ணவப்பெருங் கிழங்கும்
முழுவது மடர்த்த வடியவர் குழாத்துண்
முன்னிவாழ் வழிமுறை யறியேன்

செம்மலங் கருணை வழங்குநிற் பணியச்
சிந்தையுள் யாவது நினையேன்
சிதடனாய்த் திரியும் வீணனேன் றனக்கும்
திருவருட் பார்வைதந் தருளாய்
இம்மெனு மளவின் முப்புரஞ் சிதைய
இளநகை விடுத்தசே வகனே
எறழ்வலி யியம னுயிர்குடித் தொருவற்
கீண்டுமா யுகமருண் முதலே
அம்மைவல் வினைக ளடியவர்க் கேகரு
தனைத்துமேற் றருணிரு மலனே
அழகடை கிடக்குங் காஞ்சிவீற் றிருந்த
ஆனந்த ருத்திரே சுரனே. (2)

ஒழுங்கிய மறையின் விதித்தன வேம்பு
முடற்றுவல் விடமுமொத் தினியா
ஒழிதா விலக்கு முழுவதுங் கரும்பு
முறுசுவை யமிழ்துமொத் தினிப்ப
விழுங்கெழு நான்கு கோடிவெந் நிரய
விழுக்குழி யழுந்தமிக் குளுற்றும்
வினையினேன் றனையும் வம்மெனப் பணித்து
விளங்கருட் பார்வைதந் தருளாய்
எழுங்கலை யோதை செஞ்செவி யடக்கி
இனிதுல களித்தவெண் குணனே
இருநில முலைப்ப வருபுனற் கங்கை
யெரிசடைக் காந்தவெண் புயனே
அழுங்கிய வமரர்க் கிரங்கியா லாலம்
அயின்றவெண் வ[illegible]வுடைப் பொருளே
அழகடை கிடக்குங் காஞ்சிவீற் றிருந்த
ஆனந்த ருத்திரே சுரனே. (3)

என்புநெக் குருக விழிப்புனல் வார
இருகரஞ் சென்னிமேற் குவிய
இரும்புகழ் நவின்று நாத்தழு தழுப்ப
எழுமயிர் மெய்யெலாம் பொடிப்ப
மன்புலன் வழியிற் பொறிசெலா தடக்கி
மலர்ப்பத நினைக்குமா றறியா
மடமையேன் றனக்கு மலவிரு ளொதுக்கி
வயங்குகருட் பார்வைதந் தருளாய்
பொன்புரை சடிலத் தெறிதிரைக் கங்கை
புனிற்றிள மதியலைத் தாடப்
பொறியராத் தளர்ந்து தலைக்கலத் தடங்கப்
பொருப்பிறை மகள்விழி களிப்ப
அன்புமிக் கிருவர் தொழுதெழ மன்றுள்
அருணடங் குயின்றபே ரறிவே
அழகடை கிடக்குங் காஞ்சிவீற் றிருந்த
ஆனந்த ருத்திரே சுரனே. (4)

வலம்வரப் பதமுங் கும்பிடக் கரமும்
வயங்குரு நோக்கவாள் விழியும்
வண்புகழ் கேட்கச் செவியுநின் பாதம்
வணங்குறச் சென்னியும் வழுத்த
நலம்வரு வாக்கு நினையநெஞ் சகமும்
நல்கிய கருணைநா டாது
நாரிமார் தொழற்கே யனைத்தையும் விடுத்த
நவையினேன் றனையுமாண் டருளாய்
குலமறைச் சிரமு மடியவ ருளமுங்
கோமள மாதொடு மமர்ந்த
கோலமே சூலத் தந்தக னுடலங்
கோத்தெடுத் தருள்சிவக் கொழுந்தே

அலமரு பிறவி மலமற வெவர்க்கும்
அருளிய வருட்பெருங் கடலே
அழகடை கிடக்குங் காஞ்சிவீற் றிருந்த
ஆனந்த ருத்திரே சுரனே. (5)

ஒளிர்விளக் கினம்வீழ் விட்டிலுந் தூண்டில்
உணவுவீழ் மீனமு மிசைவீழ்
ஒண்சிறை மாவும் வேங்கைவீ ழளியும்
ஒருத்தல்வீழ் பிடியுமே யென்னத்
தெளிர்வளை மடவார் கலவிபே ரின்பச்
செறிவென மதித்துவீழ்ந் தாவி
சிதையும்வல் வினையின் சீத்தையேன் றனையும்
திருவடிக் கலப்பின்வைத் தருளாய்
வளியெழப் பெயரு முறச்செவிப் பனைக்கை
மதங்கவிழ் காடமால் வேழம்
வகிருரிப் போர்வைச் சிங்கவல் லேற்று
வயங்குரி யுத்தரா சங்கத்
தளியறு வேங்கை யதளுடைப் பானே
அணியெலாம் வகுத்தகா ரணனே
அழகடை கிடக்குங் காஞ்சிவீற் றிருந்த
ஆனந்த ருத்திரே சுரனே. (6)

பெருந்தவந் தான முதலிய தருமம்
பேணிவேட் டனவெலாம் பெறாது
பிறருழைச் செல்வங் கண்டழுக் கற்றும்
பிறனிலாள் வனப்புவேட் டுழந்தும்
திருந்துமே தகையென் றுலகவர் மதிப்பச்
சிறந்தவர்க் கிழிவெடுத் துரைத்தும்
தேம்புறப் பிறருக் கிடுக்கணே விளைத்தும்
திரிதரு மெனையுமாண் டருளாய்

முருந்திள முறுவன் மாதரார்க் கெல்லாம்
முழங்கழல் சான்றதா வேட்ட
மொய்ம்பரை யலது பிறரைநோக் காமை
முறையென நூலெலாம் விதித்தும்
அருந்திறன் முனிவர் மாதர்கெஞ் சழிய
ஐயமேற் றருள்களை கண்ணே
அழகடை கிடக்குங் காஞ்சிவீற் றிருந்த
ஆனந்த ருத்திரே சுரனே. (7)

பண்டுறு தவத்தி னீட்டுதீ வினையாற்
பரந்தபன் ஞேயுகல் குரவும்
பரிபவப் பாடு மிளிவரு திறமும்
பண்பறு மிழிகுலச் சார்வும்
மீண்டுமெப் பிழையும் வருவவென் றறிந்தும்
விளங்குமெப் பவத்துந்தீ வினைகள்
விளைப்பதே விருது கொண்டுள மழியும்
விதியினேன் றனையுமாண் டருளாய்
தொண்டையங் கனிவாய்க் கலைமகள் கொழுநன்
சுந்தரத் தலைக்கல னணிந்த
தொடிபொலி தடக்கை யேந்தலே மாயற்
றெலைத்தகங் காளமார் புயனே
அண்டர்க ளெலும்பும் பன்றியின் கோடும்
ஆமையு மணிந்தமார் பகனே
அழகடை கிடக்குங் காஞ்சிவீற் றிருந்த
ஆனந்த ருத்திரே சுரனே. (8)

மாதினைக் கொடுத்து மகவினை யரிந்து
மதிப்பருந் திறம்பல புரிந்தும்
வயங்கடி யவர்சீர்க் கடியனே னெங்கே
மற்றது நிற்கநின் னடியார்
போதறி னெழுத லாதியின் றேனும்
பொற்பவா ளாங்கவர்ப் புகாது
புகர்வினைந் துரைத்துத் தகவில வுஞற்றும்
பூரியேன் றனையுமாண் டருளாய்

காதழற் கடவுள் செஞ்சுடர்க் கடவுள்
கலைமதிக் கடவுளோர் மூன்றுங்
கண்ணெனக் கதிர்க்குங் காரணப் பொருளே
காழறு முயிர்க்குயி ராகி
ஆதியீ றிடையு மாயவை யெய்தா
அகண்டசிற் பரவெளிப் பரப்பே
அழகடை கிடக்குங் காஞ்சிவீற் றிருந்த
ஆனந்த ருத்திரே சரனே. (9)

மூர்த்தியுந் தலமுந் தீர்த்தமு மாகி
மூடனேற் கறிவுரு வண்ணம்
மொய்த்தெழு மருளாற் புண்ணிய மாக்கி
முன்னறி வுறப்பல விளைத்துச்
சேர்த்தகச் சரியை நான்குமே லாகத்
திகழுமந் நான்கையுஞ் செறித்துத்
திருத்துநின் விரகை யுள்கியுள் ளுருகாச்
சிறியனேன் றனையுமாண் டருளாய்
பார்த்தலை நாத மிறுதியாக் கிடந்த
பலவகைத் தத்துவங் கடந்து
பகையுற விறந்த வுயிர்நிலை கடந்து
பணிகொளுங் கருத்தினை வாட்டி
ஆர்த்தபே ரிசையி னருளையுங் கடந்திட்
டறிபவர்க் கறிவுறுஞ் சுகமே
அழகடை கிடக்குங் காஞ்சிவீற் றிருந்த
ஆனந்த ருத்திரே சரனே. (10)

திருச்சிற்றம்பலம்.

**ஆனந்தருத்திரேசர் கழிநெடில் முற்றிற்று.**

---

**ஸ்ரீ மெய்கண்டதேவர் திருவடி வாழ்க.**
**ஸ்ரீ மாதவச் சிவஞானயோகிகள் திருவடி வாழ்க.**
**ஸ்ரீ கச்சியப்பமுனிவரர் கழலடி வெல்க.**

---

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

# கவிராக்ஷஸ -

# ஸ்ரீ கச்சியப்ப முனிவர் பிரபந்தங்கள்.

## 4. கச்சி ஆனந்தருத்திரேசர் வண்டுவிடு தூது.

திருவாவடுதுறையாதீனம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஆனந்த வாழ்வி லடியாரெல் லாரு மகங்களிப்ப
நானிந்த மாயத் தொடக்கினில் வீழ்ந்து நலிதனன்றோ
வானந்த நீண்ட மதிலா வடுதுறை வாழ்முதலே
தேனுந்து பங்கயத் தாளாய்பஞ் சாக்கர தேசிகனே.

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# கச்சி ஆனந்தருத்திரேசர் வண்டுவிடுதூது.

---

## காப்பு.

மணிநீர்ப் புவிவியக்கும் வண்காஞ்சி வைப்பிற்
பிணிநீர் மலம்பெயர்க்கும் பெம்மான் — அணிசீர்செய்
வண்டுவிடு தூதுக்கு வான்பொருளே லாமிரம்பக்
கண்டுவிடு முக்கட் களிறு.

திருவழங்கும் பல்கலையுஞ் சேர்க்குமிடர் தீர்க்கும்
அருள்வழங்கு மானந்த மாக்கும் — மருவழங்கும்
ஆத்தி மதிமிலைந்த வானந்த ருத்திரனைத்
தோத்திரஞ்செய் வார்க்குத் துணைந்து.

---

## நூல்.

1 பூமாது புல்கும் புயல்வண்ணப் புத்தேளும்
நாமாது புல்குநளி னத்தோனுங் — கோமானும்

2 வானவரு மண்ணவரும் வானடைய வைந்தொழிலும்
தானடவி நின்ற தனிமுதல்வன் — வானமுதற்

3 பூதமுதற் காரணமாய்ப் பூத பவுதிகமாய்ப்
பேதமு மான பெருஞ்சோதி — கோதகன்ற

4 சிற்றறிவுக் குள்ளே செறிந்து திருமேனி
முற்று மெடுத்த முறைமையான் — முற்ற

5 மறையாக மங்கலைகண் மற்றுங் கிளந்து
முறையாவும் வைத்த முனைவன் — முறைபுரியும்

6 ஆருயிர்க்குப் போக மருத்தித் திறம்புயிர்கட்
கோருமருந் துன்ப முறுத்துவோன் — சாருடலின்

7 ஐந்தவத்தைச் சாக்கிரத்தி னூர்வினையிட் டாவிகட்கு
மைந்துமல மிந்துவென வாட்டுவோன் — முந்து

8 மலமாற வண்கருணை மாறா வருளின்
நிலைமாறு பாக நிறுப்போன் — மலமூன்றும்

9 போக்கி முழுத்த புகருயிரை யாங்கறிவின்
ஆக்கித் தனைக்காட்டு மாண்மையான் — ஊக்கியெழும்

10 எற்றந் தவிர்த்தொளியி னேய்த்துத்தன் னோடொருக்கி
அற்ற நிலையரு ளானந்தன் — ஒற்றைமறை

11 மாவு மிருசுடரும் வான்விலங்கு மொண்கோட்டத்
தேவியமை தீர்த்தங்க ளோரிரண்டும் — மேவினர்க்குப்

12 பல்பவத்துத் தாதையரைத் தாயரைப்பல் கேளிரையிவ்
வொல்பவத்துக் காட்டுமிட மோர்மூன்றும் — வெல்பனுவல்

13 வாக்கியிழி மூகையென மூகைமொழி வாக்கியென
ஆக்குவது நீரமுத மார்த்துவதுந் — தேக்கெறிய

14 வேட்டன யாவும் விளைப்பதுவு மென்னவிருள்
ஓட்டுமணித் தெற்றி யொருமூன்றும் — ஈட்டுழவோன்

15 றின்றி விளைப்பதுவித் திட்டஞான் றேவிளைவு
துன்றுவது கொய்யுந் தொறுமீள — நன்று

16 விளைவதென மும்மை வியனுலகும் போற்றும்
வளமலிந்த தெய்வவயன் மூன்றும் — ஒளிருமென்றாழ்

17 வேத னரியரனை விண்ணோர் தொழத்தெரிக்கும்
ஆதி மடங்க லணைநான்கும் — மாதமிழ்

18 தூற்றுபொலம் பூஞ்சூத மொண்ணிழல்சா யாக்காஞ்சி
தோற்றுகாய் பூவில் சுவைப்புளிபல் — வேற்றலரும்

19 பூக்கு மிருப்பைமலர் பொன்னத்தி யென்றுவிண்ணைத்
தாக்குங் கடவுட் டருவைந்தும் — தேக்கமலம்

20 எல்லிற் பகற்குமுத மேய்ந்தலர்வ தோர்காளத்
தல்லிக் கமலத் தலர்மூன்று — புல்லுவது

21 வானர மாக்குவது வண்மை தருவதொன்னார்க்
கூனமுய்ப்ப தாந்தடங்க ளோரைந்தும் — வானமழை

22 காலமன்றிப் பெய்யக் கரைமஞ்ஞை வேட்டவெலாம்
சாலவரு ணேமிமறை சாற்றுகிளி — நூலிசைவல்

23 பூவை முழுதுணர்க போதங் கணித்தாந்தை
பாவு புகழ்ப்பறவை யோராறும் — தேவர்மொழி

24 கேட்ப வுரகர்மொழி கேட்பவிண்ணார் காணவிழு
தேற்பதின்றித் நீப மெரியமுயற் — கார்ப்பொடிபம்

25 மங்கத் திசைமயக்க மல்கவொலித் துந்துமிகள்
பொங்கத் திகழ்ந்த பொதுவேழும் — தங்குபிணி

26 சீப்ப மனக்கினிய சேர்ப்ப விழைந்தவெலாம்
யாப்பமணி யேரிசைப்ப வேமருவுக் — கோப்பப்

27 புரவலன்வாழ் வுய்க்கமெய்ஞ்ஞா னம்புணர்த்த வீடு
தரவமைந்த தண்பொய்கை யெட்டும் — வாவிமையோர்

28 ஆக்கவிடந் தீர்க்கசித்தி யார்த்தவுயிர் நல்கவழக்
கூக்கி யறுக்க வுறுபிணிபுண் — போக்கவுடல்

29 பட்ட துணிபொருத்தப் பாற்றவினை மெய்ஞ்ஞானம்
ஓட்ட வமைந்தசிலை யொன்பதும் — அட்டும்

30 இரசதம்பொ னாமில கிந்திர நீலம்
குருவிந்தங் கோதில் வயிரம் — புருடரா

31 கங்கலுழப் பச்சை கதிர்த்தவயி டூரியமென்
பொங்குமழை நல்குபொழி லொன்பதும் — தங்கில்

32 திசைமயக்கக் கல்விநலந் தேற்றமருள் சோரர்க்
கிசைவிக்கப் பல்வடிவு மேய்ப்ப — வசைவினைஞர்

33 மூங்கையுறப் பாதலத்தின் முற்றுபிலங் காட்டவுற்றோர்
தாங்கள்பிறர் காணுத் தகுதிபெற — ஓங்கொளிப்பொன்

34 மாணிக்க மாரி பொழியவாஞ் சாவாமை
பேணிக் கொடுக்கப் பிறங்குபகல் — ஏணிரவு

35 மாறுபெறக் காட்ட வமைந்து வயங்கியிடர்க்
கூறுசெயு மன்ற மொருபதும் — பாறயிர்நெய்

36 தேன்கருப்பஞ் சாறு திகழ்ந்தனநன் முத்திநெறி
வான்கதிமற் றேனையுல கத்துவழி — தான்கருதக்

37 காட்டுவன சாயைபிணிப் பக்கலந்தோர் தாமயரார்
மீட்சியுற வித்தின்றி மென்பயிர்கள் — ஈட்ட

38 இயைந்தநறு நீரினவென் றெவ்வுலகும் போற்ற
உயர்ந்தமணிக் கூவல்பதி னென்றும் — நயந்துதன்பால்

39 இட்டவெட்கு நெய்யொருபா லீயுந் தனிச்செக்குந்
தொட்டனபொன் னாக்குஞ் சுடர்ச்சிலையும் — முட்டும்

40 வினைப்பயனைத் தாமே விளக்குமொரு கல்லுந்
தனைப்பொருவுங் கற்பாவை தானும் — எனைத்துமருள்

41 தாவா வயிரவனூர் தாங்குட னச்சிலம்பார்ப்
போவாது கேட்கு மொலியிடமும் — பாவாணர்

42 எண்ணித் தளரவின்னு மீண்டுபல விம்மிதமும்
அண்ணற் கவுரியறச் சாலைகளும் — நண்ணிக்

43 குடக்கோடி நீர்காக்குங் கோணைநத மொன்றும்
இடக்காம ரேரி யிரண்டுந் — தொடக்கீர்த்து

44 முத்தியருண் மண்டபங்கண் மூன்று நிலநான்கும்
அத்தன்மகிழ் புட்கரிணி யாங்கைந்தும் — உத்தமிமுன்

45 காத்தமத மாறுங் கடிநதிக ளோரேழும்
ஆத்தனருள் பீட மவையெட்டும் — சாத்தர்களோர்

46 எண்மருந் துர்க்கையர்க ளெண்மருங் காளியர்கள்
எண்மருமாற் குச்சிறந்த வெட்டிடமும் — விண்ணவரும்

47 பற்றியெழு வாரத்தும் பாய்ந்தாட மிக்குரிமை
உற்றமணித் தீர்த்தங்க ளொன்பதும் — முற்றுமலம்

48 போக்க வமைந்தசிவ புண்ணியங்கள் பத்துமவை
ஆக்குமருண் மூர்த்தம் பதினொன்றும் — தேக்குபுகழ்

49 மந்திரமைந் தோடாறு மான நலனளித்துப்
பந்தமறுக் கும்பெயர்கள் பன்னிரண்டும் — இந்துமுடி

50 வாய்ந்தவிறை யோன்பல் வளம்பதியு ளுஞ்சிறந்தோர்
ஏய்ந்த தலங்க ளிருபதும் — ஆய்ந்துமையாள்

51 முட்டா தெடுத்தவற முப்பத் திரண்டுமவட்
கொட்டாய கோட்டமுத லொள்ளிடமும் — மட்டுறும்

52 கோதைக் கடம்பன் குமரகோட் டம்முதலாம்
தீதற்ற பற்ப மிருநகரும் — போதகத்துப்

53 பிள்ளை பலதளியும் பீடுடைவெய் யோன்முதலோர்
கொள்ளுமுயர் தேவ குலத்திரளும் — தெள்ளுபல

54 தீர்த்தமுந் தேவர் திரளும் பிறவுநனி
சேர்த்த வளமுங் குடிகொண்டு — பார்த்தலையில்

55 ஓங்கிய காஞ்சி யொருநகரா யந்நகரில்
தேங்கிய தீர்த்தத் திரளாகித் — தாங்குமருள்

56 ஏகம்ப நாதரா யென்று மினிதிருந்தும்
பாகம் பலவான பல்லுயிர்க்கும் — மோகம்

57 படைத்தமலந் தீர்ப்பப் பரிந்ததிரு வுள்ளம்
தொடுத்த கருணை துணைய — அடுத்தருளும்

58 மற்றுமொரு மூன்றுகம்பம் வாலீச நந்தீசம்
வெற்றிமயா னம்விண்டு வேசமெழின் — மத்தள

59 மாதவே சஞ்செவ்வந் தீசம் வருணேசம்
மாதலீ சந்திரு மாற்பேறு — தீதில்

60 அனந்தபத்ம நாபேச மானவகத் தீசம்
கனிந்தகட கேசங்காப் பீசம் — முனைந்தவிரா

61 மேச்சுரம் வெல்பரசு ராமேச் சுரமபிரா
மேச்சுரம் வாழ்விச் சுவநாதம் — தூச்சிவாத்

62 தான நவக்கிரகே சம்யோகா சாரியர்சூழ்
தானமங்க ளேசந்தா னேதோன்றும் — தானம்

63 இறவாத்தா னஞ்சுரக ரேசந்தீர்த் தேசம்
பிறவாத்தா னங்கச்ச பேசம் — நெறிக்காரைக்

64 காடுசாத் தீசங் கயிலாயங் கற்கீசம்
ஆடகே சஞ்சீ ரமரேசம் — நாடும்

65 இரேணுகே சஞ்சவுன கேசுங்கா மேசம்
பராசரே சம்பாண்ட வேசம் — வராக

66 புரமணிகண் டேச்சுரநற் புண்ணிய கோடீச்
சுரஞ்சத்த தானஞ்சோ மேசம் — பரவுமிட்ட

67 சித்தி யயிராப தேசமோ ணன்காந்தன்
பத்திபுரி சூழல்பகர் முத்தீசம் — சுத்த

68 அநேகதங் காவதம்வா ணீசமந்த கேசம்
இனைத லறுஞ்சலந்த ரேசம் — பணைதரே

69 சம்பணம ணீசஞ்சார்ந் தாசயந் தக்கேசம்
வம்பில்சித் தீச மதங்கேசம் — நம்புமரி

70 சாப பயந்தீர்த்த தானமா லிங்கமா
தீபதே சம்விடுவச் சேனேசந் — தாபமறு

71 வன்னீச் சுரநார சிங்கீச் சுரமாண்டு
கன்னீச் சுரமாகா ளேச்சுரம் — வன்மீக

72 நாதம் பலபத் திராம நாதமச்ச
நாதமுயர் முக்கால ஞானேசம் — காதம்பம்

73 ஓத்தூர் சதுரா னனசங் காமும்பர்
எத்துமறை நூபுரங்கண் ணீச்சுரம் — தோத்திரிக்கும்

74 வீரரா கேச்சுரநல் வீராட்ட காசஞ்சீர்
பாரளாஞ் சேனு பதீச்சுரம் — வாளாம்

75 மேற்றளிகா ரோணம் விளங்கு பனங்காட்டூர்
போற்று குரங்கணின்முட் டம்போக்கும் — நீற்றும்

76 உருத்திரர் சோலையீ ரொன்பதின்மர்ச் சேர்த்த
உருத்திரர் நூற்றுவர்க ளூற்றுக் — கருத்திசையப்

77 பத்திபுரி நூற்றுப் பதினெண் டளிபிறவாய்
அத்தளிக டோறு மவிர்கின்ற — முத்துமுதற்

78 பல்வகைப்பல் வேறு மணியினும் பாய்கதிரோன்
எல்வகைமைக் கேற்ப விலங்கியாங் — கல்கலுறும்

79 வெவ்வே றுருக்கொண்டு வேவ்வேறு பேர்கொண்டு
வெவ்வே றருள்கள் விளைத்தாலும் — எவ்வமறும்

80 மானிடரின் வானவர்கள் வானவரின் மாமலரோன்
ஆனவனின் மாயோ னவன்றன்னின் — ஞானமிகும்

81 மாதவர்க ளன்னவரின் மாகணங்க ளன்னவற்றிற்
சாதலறும் பூதத் தலைவர்கள் — ஓதவரிற்

82 சேயிலைவே லோனவனிற் றிண்களப மற்றதனிற்
பாயமணி மேகலைய பார்ப்பதி — மீயுயர்ந்தாங்

83 கேனையர்கள் போற்று மிடமூர்த்தந் தம்மினுமம்
மானனைய நோக்கி வழிபட்டுத் — தான்மகிழ்ந்த

84 தூங்குசினை மாவடியுஞ் சோதிலிங்க முஞ்சிறந்த
ஓங்குருத்தி ரேச வுயரிலிங்கம் — ஆங்கவற்றே

85 டொக்கு முமையா ளுருப்பாதி தன்காணி
கைக்கொண்ட வேகன் கதியமுழு — மெய்க்கொண்டு

86 நாமமுங் கொண்ட நலத்தகையோர் போற்றுதலிற்
காம ரவற்றுள்ளுங் காழிலோர் — தாமருவும்

87 ஆனந்த ருத்திரே சத்தமல மூர்த்தமே
தானந்த ணேடுங் தலையாவ — தூனம்

88 தவிர்பொருள்கள் பற்பலவுந் தாழ்வில்சுக மற்றும்
அவிர்துறக்க மாதி யவையும் — இவர்கின்ற

89 மேலான வின்ப விளைவுந் தலைமைகளும்
மாலாவ வென்று மதித்தொரீஇச் — சாலாத

90 ஆனந்தத் தானந்த வின்றி யினிதெழூஉம்
ஆனந்த மிக்களிக்கு மாட்சியால் — தானந்த

91 ஆனந்த நாம மளாவலி னத்தகைய
ஆனந்த ருத்திரே சத்தென்றும் — ஆனந்தன்

92 ஏகம்பம் போல வினிதாசு வீற்றிருந்து
மாகம் பணிய வளங்கொழிப்போன் — மேகம்

93 படியுமிளந் தெங்கு பயில்கமுகஞ் சூதம்
கடிகொள் வருக்கை கதலி — அடரும்

94 முருகு நாந்த முகிழ்தாடி மங்கள்
கருனைமஞ்ச ளிஞ்சி கலந்து — பெருகு

95 வளங்கொள் படிப்பை மருங்குடுத்துத் தீந்தேன்
துளங்குமலர்ப் பிண்டிதொகு நாகம் — இளங்கனிகள்

96 ஆர நறுந்தேக் ககில்சரள மாச்சாமந்
தாரமுருக் குத்தா தகிவெள்ளில் — வேரல்

97 மருதகுமிழ் போதி மகிழ்வழைபுன் னாகத்
தருவெவையும் வேலியெனச் சார்ந்து — முருகுவிரி

98 மல்லிகை சாதி மயிலை குருக்கத்தி
முல்லை குளவி முதிர்செருந்தி — வில்லங்

99 கணவிரங்கூ தாளங் கடுக்கை கடம்பு
மணம்விரிந்த நந்தியா வட்டம் — இணர்விரியும்

100 பாடல நீள்சண் பகந்தமா லங்கோங்கு
நீடிய நந்த வனநிரந்து — தோடுவிரி

101 தேங்கமல மொண்குமுதஞ் செங்கழுநீர் நீலநெய்தல்
ஆங்கமலி பொய்கை யணியோடை — தேங்குபுனல்

102 வாவிநறுங் கூவன் மணற்கேணி வண்புனற்கால்
தேவரும் வீழச் செறிந்தோங்கிப் — பூவைமயில்

103 கிள்ளைபுருச் சேக்குங் கெழுமணிசெய் மாடநிரை
அள்ளுமெழின் மேடை யகன்றெற்றி — வெள்ளல்

104 தலைப்பெய்த வீதி தலைத்தலைநேர் போகி
மலைப்பெய்த யாரு மலிந்து — நிலைப்பெய்தி

105 வந்தொழுகும் வேக வதிமருங்கு வீற்றிருந்த
அந்தகெடுஞ் சூழ லதினின்றும் — சுந்தரஞ்சேர்

106 வானுலக மேன்மைபெற மண்ணுலகஞ் செம்மாப்ப
ஈனவிடர் முற்று மிரிந்தோட — ஆன

107 அறந்தழைப்ப வன்ப ரகந்தழைப்ப வன்பின்
திறந்தழைப்பச் செல்வந் தழைப்ப — மறந்தழைத்த

108 வேற்கண் ணுள்ளம் விடைகொள்ள நல்லுலா
எற்குமா கொள்ள வினிதுறீஇ — மாற்குமால்

109 கொள்ளுந் திருவழகு கொண்டுவெவ் வேறுபல
ஒள்ளிய வூர்தி யுவந்தருளி — நள்ளுறுநாள்

110 தெள்ளிதிற் காலந் தெரிப்போர் துயிலெழுப்பப்
பள்ளி யறைதணந்து பாவையொடு — மெள்ளப்

111 புறம்போந் தருளிப் பொழிகதிர்மா ணிக்கத்
திறம்பூண்டு விண்ணேங்கு செல்வ — நிறம்பூண்டு

112 பன்மணி மாலைகளும் பல்கனி மாலைகளும்
பன்மலர் மாலைகளும் பைம்பொன்னின் — வின்மலிய

113 ஆக்கிய பூந்தொடையு மாடிகளுஞ் சாமரையும்
தூக்கியகஞ் சுற்றிற் றுயல்கிற்பப் — பூக்கணமும்

114 மிக்க மருக்கொழுந்தும் வெய்யமரு வும்வேரும்
தொக்க படலை சுடர்ப்பட்டும் — தக்கவெலாம்

115 சித்திரித்த பட்டுஞ் செறிய விதானித்துப்
பைத்த மணிக்கம் பலம்படுத்துப் — பித்தியெலாம்

116 கண்ணடியும் பாவைகளுங் காமர் மணிவிளக்கும்
வண்ணமலர்ப் பட்டும் வதிவித்துத் — திண்ணியதூண்

117 வாருறைகள் சேர்த்து மருங்குமலி பூம்பந்தர்
ஆருமணித் தூண்க ளவைதோறும் — நேரும்

118 கதலிமடற் பூகங் கனிபலவும் யாத்து
மதவுவண்ணத் தூசு வயக்கிக் — கதிர்பசும்பொற்

119 சுண்ணமுந் தாதுந் தொகுவிரையும் பன்மணியும்
கண்ணகு பூவுங் கமழ்சாந்தும் — வெண்ணிறத்த

120 வான்பொரியு மச்சுதமும் வண்கடுகுங் குங்குமமும்
கானகறு நீரு கனிசிந்திக் — கானமென

121 நீண்ட கொடிநிறுவி நித்திலப்பொற் றோரணங்கள்
காண்டகைய சுற்றிற் கதிர்ப்பித்துப் — பூண்டகைய

122 பாவை நடமாடப் பல்லோ வியப்படங்கள்
கோவைபட வாங்காங்குக் கொள்வித்துப் — பாவு

123 படம்விரித்து நான்முகத்தோன் பார்த்தயிர்ப்பச் சேர்த்த
தடவுமணி மண்டபத்தைச் சார்ந்து — கடவுள்

124 மடங்கலணை யேறி வதிந்து பழைய
விடங்கவணி முற்றும் விலக்கி — உடங்கமர்ந்த

125 பாவைமகி ழெண்ணெய் பயினெல்லி மாமஞ்சள்
ஆவின்வரு மைந்து மளாவியது — தாவினறும்

126 பாறயிர்நெய் தேன்வேழப் பைஞ்சாறு பல்லமிர்தம்
வீறு பலவிரத மென்கனிகள் — ஊறுமிள

127 நீர்சந் தனக்குழம்பு நீவில் விரைநறுநீர்
கூர்சந்த வேதக் குருக்கலநீர் — சீர்தந்த

128 எல்லா முறையி னினிதாடி மெய்யீரம்
கல்லா யிழைப்பட்டி னன்கொற்றி — வில்லார்

129 மணித்தலைநாண் கொண்டு வயங்கரையின் முற்றும்
மணிக்குயின்ற பொன்னாண் வயக்கித் — தனக்குமிச்சில்

130 காப்புட்ட கோவணமு னண்ணிடத்தி லொண்கிரணத்
தூப்பட்டுக் கோவணத்தைச் சூழ்வித்து — நீப்புறுவர்

131 கொம்பனையார்க் கன்றிவறங் கூரா வுறுப்பனைத்தும்
செம்பட் டுடையாற் றிகழ்வித்து — வம்புடைமேற்

132 செம்பொற் கிரணச் செழுந்தா சிருபாலும்
பம்புற்ற தொங்கல்பயி லச்சாத்தி — நம்புற்ற

133 குங்குமங் கோரோ சனைபுழுகு கத்தூரி
பொங்குகருப் பூரம் புதுப்பனிநீர் — எங்கும்

134 விரைக்கக் குழைத்தெடுத்த மென்னறும்பூஞ் சாந்தம்
வரைக்குநிகர் மார்ப மெழுகித் — திரைக்கும்

135 மதுமலர்ப்பூந் தாது மணிதகர்த்த சுண்ணம
அதிகவிரைத் தூளியுமே லட்டிக் — கதவுபுனல்

136 ஈரம் வறள வியம்பு புகையைந்தும்
சாரன் மழையிற் றவழ்வித்துப் — பாரக்

137 கருநீற வாருயிர்க்குக் காசற்ற கற்பத்
திருநீறு நெற்றி திருத்திக் — குருநீ

138 றழியாது பாங்க ரடியருளந் தோறும்
ஒழியாத் திலக முறுத்துப் — பொழிசீதக்

139 கங்கைமக ளோடு கலைமதியஞ் சேர்ந்திருத்தல்
தங்கு மிடமுறையிற் சான்றூலும் — அங்கே

140 விதிர்க்கு முலகர் விழிக்கொளிப்பான் போலக்
கதிர்க்குமணி மோலி கவித்துக் — கொதிக்குமொரு

141 கொக்கிறகோ வென்னக் குருவயிரங் கைசெய்த
தொக்கதிர்ச் சூட்டுச் சுடர்வித்துத் — தக்கதந்தை

142 தாயுந் தளரச் சரந்தொடுக்குந் தீக்கடவுட்
காயுங் கடவுள் கதிர்ப்பெய்தல் — ஏயுமஃ

143 தென்றூலுந் தீயார்க் கிடங்கொடா ரென்பதுற
வென்றூலும் பட்ட மிளிர்வித்து — நன்றே

144 களிக்குமுடன் மாயுங் கரிசடுத்தா ரேனும்
அளிக்குணத்தா ரங்கமழி யாமை — தெளிக்குதல்போல்

145 வெற்றி மதனுயர்த்த வெய்யகொடி வீற்றிருந்த
கொற்ற மகாக் குழையணிந்து — பெற்றசுகம்

146 நல்லா ரிடத்திற் பிறந்தாலு நல்லார்தாம்
செல்லா விடத்திற் செறித்தாலும் — பொல்லாதார்

147 பண்பிற் றிரியாப் பரிசேபோ லாலாலம்
கண்பொத்து நீலக் கறைமிடற்றுத் — திண்புலத்தார்

148 மீட்டுமொரு சூழ்ச்சியினவ் வெய்யோரை மாய்ப்பதுபோல்
ஈட்டுமணிக் கட்டுவட மேய்வித்து — வேட்டுழல்சிற்

149 றின்பினர்க ளின்ப விளைவேயென் றேமாப்ப
அன்பினர்க ளாரா வருளென்னும் — கொன்பல்

150 வளைத்தழும்புங் கொங்கை மணிச்சுவடுங் கண்கள்
திளைப்ப வெளிச்சிறப்ப வேனும் — அளிப்பின்

151 றிருவர்பா லெய்தார்க ளெண்ணவெண்ணி யாங்குக்
குருமணிக்கே யூரந்தோட் கோத்து — மருமத்துப்

152 பொன்னரி மாலைகளும் பூவினறுந் தொங்கல்களும்
மின்னகு மொன்பான் வியன்றொடையும் — நன்னர்

153 இலைமுகப்பைம் பூணு மிருங்கண்ணித் தாரும்
குலவுசெழுங் கொன்றையொடுங் கூர்த்திட் — டுலகமெலாம்

154 காப்புக் கமைந்ததற்கோர் காப்பின்றே யாதலிற்பொற்
காப்புக்குங் காப்புக் காமாக்கி — நீப்பிலொற்றை

155 ஆழி யுருட்டு மகங்கை விரற்றூறும்
ஆழி பலபூண் டவிர்வித்துப் — பீழை

156 கழல வினைகள் கழல மலங்கள்
கழலக் கழல்கழற்கால் வீக்கிக் — கழலமுன்னர்ப்

157 போதந் தொளித்த புரையோனைக் கொன்றுப்வி
மீது தனைவிளங்கு வித்ததிறல் — மாதவனைத்

158 தாட்கவைஇக் காணவினிச் சாரென் றழைப்பனபோல்
ஆர்க்கு மறைநூ புரமணிந்திட் — டேற்கவின்னும்

159 வேண்டு மணிபலவு மெய்ப்படுத்து வெங்கதிரோன்
காண்டகு மண்டிலத்துக் கண்ணுற்று — மாண்டதனை

160 தேர்விளக்கி யாங்காவுண் டனுமதி போலுறைபோய்ச்
சீர்விளங்கு மாடி தெரிந்தருளிப் — பார்துளங்கப்

161 பல்லியங்க ளார்ப்பவிரு பாற்கவரி துள்ளமணி
வில்லுமிழ் வெண்கவிகை மேனிழற்ற — மெல்லமெல்ல

162 வேத்திரத்திண் கையர் மிடைசனநீக் கக்கொடுபோய்
யாத்த வெழினி யிடம்வீழ்த்து — மூத்தவன்பின்

163 வைத்தநறும் பாளிதமும் வண்டயிர்கெ யக்காரம்
மெத்து சுவைப்பயறு மென்கடுகு — பொத்து

164 புளிமுதல்வெவ் வேறுவிராய்ப் போக்கின் றமைத்த
மிளிரமுதும் வெற்ற வமுதும் — ஒளிர்கருனை

165 பாகு துவையல் பலவறைய லாதிகளும்
பாகமுற வூறும் பலகாயும் — மாகமுஞ்சென்

166 றூர்கடிய கோலை யடைகெய்க் களிமிதவை
வார்கழையின் பாகு மணற்பாகு — சீர்கலவும்

167 சிற்றுண்டி பற்பலவுந் தேநீ ரிளநீர்வார்
உற்ற கழைநீ ருறுநீர்மோர் — பொற்ற

168 பலகனியின் சாறுநறும் பாறயிர்தேன் மற்றும்
கலவு மருளாற் கரந்தொட் — டிலகு

169 கலங்கழித்துக் கைபூசிக் காமர் கவுளின்
அலங்குபஞ்ச வாச மடுத்துத் — துலங்குபட்டின்

170 ஆனன நீவி யரும்புகைபஃ றீபவகை
ஊனமினீ ரூடி யொளிர்கவிகை — பாணிறத்த

171 சாமரை யாலவட்டஞ் சாந்தாற்றி பற்பலவும்
ஏம முறவினிது கொண்டருளி — நான்மறையும்

172 அன்பர் தொடுத்த வருந்துதியும் பல்லியமும்
முன்பு தொடங்க முறையாற்கேட் — டின்பக்

173 குலமுருக்கொண் டாலன்ன கோதையர்நேர் நேரே
கலவி கடமாடல் கண்டு — சுலவியெழும்

174 கற்பூர தீபமெதிர் கண்டடுத்தோர் யாவர்க்கும்
பொற்பூரு நீறு புரிந்தருளி — அற்பூறும்

175 காமன் குடைக்குக் கலைநிரப்புஞ் சென்னிமதி
வாமக் கலைகண் மலிந்தெழுந்து — சேமக்

176 குளிர்நிரப்பிற் றென்னக் குருமணிகால் யாத்த
ஒளிநிரப்பும் வெண்கவிகை யோங்கத் — துளிநிரப்பிக்

177 கங்கை நதியைக் கரந்த பெரும்பகையால்
துங்கக் கடற்றலைவன் றூண்டுதலும் — பொங்கிப்

178 பொரவெழுந்த வெண்டரங்கம் போன்மெனவேப் பாலும்
சுரர்மகிழ்ந்த சாமரைக ளுள்ள — வருதரங்கம்

179 கண்டு பொரானுமக்குக் காரியமன் றென்றூக்கம்
கொண்டு விலக்குங் குறிப்பேபோல் — ஒண்டாளம்

180 சுற்றி னழுத்திச் சுடர்விரிக்குஞ் சாந்தாற்றி
பொற்றமணி யாலவட்டம் போந்தசைய — வெற்றி

181 விருது பலமுழங்க வெண்சங்க மார்ப்ப
இருபுறமுந் தாரை யிரங்கக் — கருவிநிரை

182 பாவலர்க ளுவலர்கள் பல்கவிதை யேத்தெடுப்பப்
பாவலர்க டங்கள் பணிசெய்யக் — காவலர்கள்

183 நீதி பிறழாமை நின்றே வலரேவல்
ஆதி நடத்தி யருகுவரப் — போதுசொரிந்

184 தாவலங் கொட்டி யடியார் குலங்களிப்ப
நாவலந் தீவு நனிசிறப்பப் — பூவலயம்

185 மெத்திய வெய்யோன் விழுக்கிரணம் பாவாமல்
நித்தில வூர்தி நிழல்செய்ய — நித்திலத்த

186 மாலைக் கவிகை மழகதிரோ னேர்கவிகை
சாலக் கதிர்க்குந் தனிப்பிச்சம் — கோலக்

187 கொடிநிரையும் பல்காடு கூர்ந்தவென வாலக்
கடிநிறைத்த காவணத்தி னின்றும் — நெடிதெழுந்து

188 பல்லுறுப்பு முற்றிப் பசும்பொன் குயின்றமணி
அல்லிருக்குங் கோயி லகத்துலாய்ச் — செல்லிருக்கும்

189 கோபுர வாயிற் குழாங்கண் டுளங்களிப்ப
மாபுர வீதி மருங்கெய்தி — ஆபுரத்தில்

190 ஏவுற்ற பொற்சிலைநே ரெய்துவதோ வென்னநனி
மூவுற்ற செம்பொன் முழுத்தேரில் — பூவுற்ற

191 சிங்கத் தவிசிற் றிகழ்ந்தேறி யைங்கரன்முன்
துங்கக் குலத்தேர் துணைந்தூர — மங்கையுமை

192 நன்னர்க் கடம்ப னவையில் விறற்சண்டன்
பின்னர்ப் பொலந்தேர் பெரிதூர — முன்னர்

193 வாத்தி னருள்பெற்ற மத்தளமா யோன்றன்
காத்தினனி யொத்திக் களிப்ப — நரைத்தலையோன்

194 தாளம் பிடிக்கத் தனிவிசும்பு காவலோன்
வாளம் பிடித்து மருங்கணைய — வேளம்

195 பிடித்தறியார் செங்கைதிரை யீந்து தனதன்
பொடித்தநறும் பாகடைப்பை பூணக் — கடித்தேன்

196 துளிமலர்மெல் வாசந் துதைந்துகுளிர் கொண்டு
வளியிளங்கா லாய்மருங்கு வாவ — நளிகொள்

197 தனிநீர்க் கடற்றலைவன் சார்ந்திறைவர் மெய்யில்
பனிநீர்த் திவலை பனிப்பக் — கனிதே

198 மதுபருக்கம் பான்மற்றும் வந்தடியா ருய்ப்பக்
கதுமென வெய்யோன் கனலி — விதமூவர்

199 சுத்தி புரிந்து துணைக்கை யிடையேந்தி
அத்த நகர்கென் றளித்துவா — எத்திசையும்

200 போற்றுயரீ சானன் புனிதனருள் பெற்றெய்தி
ஏற்றுமிசை யேற்றுக் கொடியுயர்ப்ப — ஆற்றுபணி

201 நீக்கிக் கழியு நிலேயினரை நன்னெறியில்
தாக்கி யியமன் றலைநிறுவப் — போக்கின்றி

202 மற்றை யமரார்களும் மாநகரி ளுட்சியரும்
உற்ற தொழின்மை யுளுற்றிவா — முற்றும்

203 இரவுபகல் காட்டு மெறுழுருளே மான்றேர்
வரதன் மணிவீதி வந்தான் — புரவளிக்கும்

204 அத்திர சாலே யமுதடு சாலேயா
வைத்த தனிச்சேவகன்வந்தான் — பைத்தமணி

205 நாகமு நீள்கோட்டு நாகமுஞ் சூழ்ந்திருப்ப
மாகரும் போற்றுமுடை யான்வந்தான் — ஆகும்

206 பரிசமுருக் காண்டல் பகர்கேள்வி யோர்பால்
மருவுமணிப் பூணிஞன் வந்தான் — பரவை

207 அலேத்தும் புவிபெயர்த்திட் டந்தரத் தோங்கி
மலேத்த விடைக்கொடியான் வந்தான் — நிலேத்த

208 கடவுளர்தம் மாதர் களம்வறங்கூ ராது
மிடல்படைத்த நன்மிடற்ருன் வந்தான் — படர்கருமம்

209 ஈட்டா ருயிர்விழிக ளெல்லா முருக்காணக்
காட்டாகு முக்கண்ணி ளுன்வந்தான் — வேட்டதருள்

210 ஆனந்த ருத்திரத்தெம் மண்ணல்வந்தா னென்றோதை
வானுந்து சின்ன மலிந்தூத — ஞான

211 உருவ ருவவும் பனவ ருவவும்
மறைக ளொலியின் மலியச் — செறியும்

212 மதலே நிரையின் வரிசை யெனத்தின்
மதமைக் களிறு மருவப் — பிதிரும்

213 திரையி னிரைக டிரள்வ தெனப்பல்
பரியி னிரைகள் படரப் — பெரிய

214 பகடு கடவிப் பாவு மரையர்
மகுட மிரைகள் வயங்கப் — புகரில்

215 கடவுண் மகளிர் கலவி முறையின்
நடன வகைக ணவிலப் — படகம்

216 பதலை முருடு பணவ முழவம்
முதல பலவு முழங்க — மதிவெல்

217 வளைகள் குழல்கள் வயிர்க ணரம்பின்
கிளைக ளினிது கிளர — ஒளிசெய்

218 மடல்கொ டருவின் மலரி னமரர்
படியிற் றிடறு படுப்ப — அடியர்

219 உதவு கனக மழையொ டுதவும்
உதக மதனை யொழிப்ப — மதவொண்

220 பொழில்கண் மழைகள் பொருவ தெனப்பொன்
செழிபன் மணிகள் சிதறப் — பொழியும்

221 கனிகள் கழையின் றுணிகள் பொரிகள்
சனமெய்த் தலையிற் றதையக் — கனக

222 தருவுங் கொடியுந் ததையப் பதண
நிரையு மெவரு நெருங்க — விரவு

223 மனிதர் குலமு மலர்வ தெனப்பல்
புனித மாமும் பொலிய — இனிய

224 புகையின் பொதியப் பொழிசெங் கிரணப்
பகல்செ லிரவிற் பயில — நிகழும்

225 இருளை யிழையி னொளியு மிரத
உருவி னொளியு மொறுப்பத் — தரையின்

226 வணங்கிடை மங்கையர் வண்ட லிகந்து
சுணங்கிவர் கொங்கை துளங்க – இணங்கி

227 மணந்தவழ் தொங்கன் மணந்த குழன்று
வணர்ந்து சுரிந்து மலிந்து – தணிந்து

228 பொருந்தள கங்கள் சரிந்து சரிந்து
வெரிந்தலை யொன்றி விளங்கப் – பரந்து

229 நெருங்கிய கொங்கை நிலந்திவள் வம்பு
மருங்கொளி யுந்து வடங்கள் – ஒருங்கு

230 செழுந்தொடை யொன்றனொ டொன்று செறிந்து
விழுந்து தவழ்ந்து விலங்க – எழுந்து

231 பணிந்த நிதம்ப மணிந்த வடங்கள்
பிணைந்து தழங்கல் பிறங்க – நிணந்து

232 கிடந்து சிலம்பு சதங்கை கிளர்ந்து
நுடங்கிடை கொந்தது கொந்த – திடங்கண்

233 டிருந்தெழு கென்று விளம்புவ தென்னத்
திருந்தடி நின்று சிலம்ப – விரைந்து

234 நடந்து தொடர்ந்து கனந்தலை ஞெள்ளல்
மிடைந்து சனங்கள் விலங்கப் – படர்ந்து

235 புகுந்தெதிர் நின்று பொழிந்தலர் செங்கை
முகிழ்ந்து சிரங்கொடு முந்தி – நெகிழ்ந்த

236 உளங்கொ டிறைஞ்சி யுவந்து நிமிர்ந்து
துளங்கி மருங்கு துவன்ற – வளங்கொள்

237 விசும்பர மங்கையர் விண்ணிட மெங்கும்
அசைந்தலர் சிந்தி யணங்கக் – கசிந்தெவரும்

238 போற்ற நெடுங்கொடியும் பூந்தோ ரணத்திரளும்
தோற்றிய மாடந் தொறுந்தீபம் – ஏற்றிநறும்

239 பூரண கும்பம் பொருத்திநறு நீர்தெளித்துக்
காரணவ வோங்குநடைக் காவணமிட் — டோணவும்

240 வீதி யிடைக்கடவி வெய்தெதிரே தோற்றுதலும்
போதுமட மாதரொடு போந்தேனும் — நாதன்

241 கருணை பொழிமுகமுங் காதலெலாம் வல்லே
அருள வலர்ந்த விழியும் — பருதிபல

242 கோடி யொருங்கு குழீஇயனைய செக்கரொளி
நீடு முருவினிறை கோலமும் — பீடும்

243 மழுமான் றரித்து வயங்குமிரு கையும்
முழுவான் பயத்தை முனிந்து — செழுவான்

244 வாம்வழங்க வைத்த மலர்ந்தவிரு கையும்
பாம்வழங்கு பாதத் துணையும் — உரங்கிடந்த

245 கேழில் பிரணவம்போற் கேசரங்கொண் டேமலர்ந்த
கேழிதழித் தாரின் கெழுதகையும் — வாழிநனி

246 கண்டேன் புரிமுறைமை காணேன் கதழ்வினுளம்
விண்டேன் வெதும்பி மெலிந்தனேன் — தண்டாப்

247 புகுமுகம்யான் வீழப் பொழிகருணை காட்டி
நகுநயமு நல்கினு னேனும் — தொகுதவத்துள்

248 ஏது குறையுளதோ வெம்பெருமான் றன்கருத்தும்
தீதி திருவிளையாட் டோவறியேன் — மாதவற்குச்

249 சங்காழி முன்னிங்குத் தந்தாரென் பார்கவர்ந்த
சங்காழி யென்கைத் தரவிரையார் — இங்கே

250 கலையொருவர்க் குய்த்தளித்தா ரென்பார் பறித்த
கலையெனக்கு நல்கக் கடுகார் — விலகவிங்கு

251 வேகவதி நீர்தடுத்தா ரென்பா ரெனதுவிழி
வேகவதி நீரை விலக்கிலார் — மாகளங்க

252 மேனிப் பசப்பரிக்கு வீத்தாரென் பாரெனது
மேனிப் பசப்பரிக்க மேவிலார் — ஊனவிட

253 வெப்பொழிய விண்டுவைத்தம் பானிறுவி னுரெனது
வெப்பொழியப் பானிறுவ மேவிலார் — ஒப்பனையாட்

254 காகங் குழைந்தா ளரியேன்றன் பாற்குறுகும்
ஆகங் குழையு மருளிலார் — சாகரத்தைத்

255 தாக்கியன்று காஞ்சி தனைக்காத்தா ரின்றுமது
தாக்கியெனைக் காப்பத் தயவிலார் — ஒக்கியசெங்

256 கல்லெறிக்குத் தம்பாதங் காணிகொடுத் தாரென்கண்
நல்லெறிக்குத் தந்திணிதோள் நல்கிலார் — வல்லி

257 அறமுழுது மாக்க வமைத்தாரிக் காம
அறமொன்றுந் தாமாக்க வண்ணர் — உறுவெப்புக்

258 கண்ணனுக்கிங் கானந்தங் காட்டினர் காதலித்தேற்
கெண்ணனுக்கு மானந்த மேய்த்திலார் — கண்ணனயன்

259 பூமகளிர் தம்மைப் புணரவளித் தாரிங்கிப்
பூமகளே னைத்தாம் புணர்கிலார் — தோமிலாக்

260 காப்பு நடனமிங்குக் கைக்கொண்டா ரென்னுவி
காப்பவுளஞ் சற்றுங் கடைப்பிடியார் — யாப்பு

261 மறைபுறத்தே செல்லாமை மீட்டுவளர்த் தாரென்
மறைபுறத்தே செல்லாமை வையார் — குறுகொருவன்

262 புண்ணுருவ மாற்றிப் புரவளித்தா ரிங்கெனது
புண்ணுளத்தை மாற்றிப் புரவளியார் — எண்ணில்

263 இடர்துமித்தன் மூத்தபிள்ளைக் கேய்த்தா ரெனக்கோர்
இடர்துமிக்கத் தாமிங் கிசையார் — படருமிரு

264 மாலாரைத் தம்முருவா வைகுவித்தா ரிங்கடுத்த
மாலேனைத் தம்முருவா வைகுவியார் — மாலோ

265 டலருடையா னைத்தோ ளணைத்தார்மா லோடிங்
கலருடையே னைத்தோ ளணையார் — குலவுகற்ப

266 காலத்துங் காஞ்சி யழியாமை காட்டினரிக்
காலத்தென் காஞ்சிதனைக் கட்டழித்தார் — கோலத்தம்

267 கைப்பட்ட மென்றுரும்பாற் காமருவின் ஞோர்தூண்டு
மொய்ப்பட்ட வெம்படைகண் மொத்தினர் — மெய்ப்பட்ட

268 வெல்லுருவ முற்றும் விராய்நிறைத்த வென்னுள்ள
வல்லிரும்பைப் பூவின் மலக்கினர் — வெல்லெரியின்

269 மூவ ருடல்குளிர்ப்ப முன்னினர் தண்மதிக்கென்
ஓவி லுயிர்வெதும்ப வுன்னினர் — மேவுதலும்

270 பொய்யழிய வேதவியா சன்மையல் போக்கினர்
மெய்யழிய வென்கண்மயல் வீக்கினர் — வெய்யவுறு

271 சாப மவரவர்க்குச் சாய்த்தார் கழையாய
சாப மெனக்குத் தகவைத்தார் — கோப

272 மகர வலிதொலைத்தா ரம்மகர மைந்தன்
மகர வலிவளர வைத்தார் — புகழ்வையம்

273 சுத்தி யொருதடத்துத் தோற்றினர் யான்சுத்தி
முத்த மிகமுழு முறைவைத்தார் — ஒத்த

274 அயிரா பதத்தி னருள்வைத்தார் யாரும்
அயிரா பதத்தி னருள் வையார் — அயராமைப்

275 பாலுததி யோர்முனிக்குப் பாலித்தா ரிங்கெனக்குப்
பாலுணவு வேண்டாப் பகைசெய்தார் — சால

276 இரவு தமக்குரிமை யாக்கின ரென்பால்
இரவிகல்வ தாக விசைத்தார் — பரவும்

277 அதிசயித்த வைந்தடத்தோ டாருமெனை யெண்ணி
அதிசயித்த வாறுதட மென்ன — வதனூர

278 விந்தம் விழிக்குவளை மென்முகையும் பூவிரிவும்
அந்தி பகலுமுற வாக்கினர் — இந்தமுறைக்

279 கோட்டிபுரி கின்றூர்முன் கோதற்ற நான்முறையின்
வேட்டடியிற் பூசை விளைத்துவரம் — ஈட்டியநற்

280 காமனை யிங்குக் கடிவரோ பூசைபுரி
சோமனைக் காதத் துணிவரோ — பூமலியக்

281 காலிறைவன் றூவிக் களித்தலான் மெல்லவரும்
காலினை யிங்கே கழிப்பரோ — கோலவிமிற்

282 சேவினிது பூசைபுரி செய்கையான் மற்றிங்குச்
சேவின் மணியைச் சிதர்ப்பரோ — பூவியப்ப

283 ஆண்பெண்மை யாக்கினு ரப்பெண்ணை வாழன்றில்
மாண்பின்மை யாக மதிப்பரோ — காண்பினிய

284 மாவடியின் வாழ்க்கை மருவினு ரம்மாவிற்
கூவு குயிலைக் குமைப்பரோ — ஆவதிவண்

285 என்னேயென் றெண்ணத் திரங்கினே னங்ஙனே
கொன்னே யுறுதி குறிக்கொண்டேன் — முன்னே

286 அரிதாழ்ந் தயனே டளிப்பவுல கேத்தி
அரியோ டுலகயனு மீன்றான் — கருடன்

287 இகலோ டரவலைத்தா னேத்தியர வேத்திச்
சுகமே கருடனெனச் சொற்ற — திகவின்

278 றிரணியன்பூ சிப்பவா மீந்தார்பூ சித்த
நரமடங்க ருக்க நயந்தார் — பாவியொரு

289 வாணன்பூ சிப்பநொச்சி வாயில்காத் தார்நேமிப்
பாணிபூ சிப்பவவன் பாடழித்தார் — மாணவாம்

290 அந்தகன் பூசைக் களித்தார் ரவனையொரு
மைந்தனைவிட் டாருயிரை வாங்கினர் — மைந்து

291 சலந்தரன்பூ சிப்பத் தகவளித்தார் தாமே
சலந்தகவன் ஞனுயிரைச் சாய்த்தார் — வலந்தொழுத

292 கச்சபத்துக் கீந்தார் கடலலைப்ப வைங்காற்கு
வெச்செனத் தாக்கும் விடைகொடுத்தார் — மச்சம்

293 நயக்கவர மீந்தார் நவைகண்டு வாட்கண்
புயக்கவொரு மைந்தனைப்போ வித்தார் — வியக்கவாம்

294 வன்றிக் களித்தார் மறலமருப் புப்பறித்தல்
வென்றிக் குமாற்கு மேவித்தார் — ஒன்றுவாம்

295 வாமனனுக் கீந்தார் வயக்கவயந் தண்டவனோர்
மாமகனுக் காக மகிழ்சிறந்தார் — நர்ம

296 நாமடங்கல் போற்றவர நல்கினர் மைந்தன்
சரபமெனத் தாக்கமகிழ் சார்ந்தார் — விரகவர்பால்

297 இவ்வா றிருத்தலா லெண்ணி லடுத்தயர்ப்பின்
ஒவ்வாது சேட்படுத லுண்மையால் — எவ்வாறும்

298 தீங்குபுரி மாரன் செழுந்திங்க ளாதியொரீ இப்
பாங்கெனக்கு நல்கப் படர்வரே — ஈங்கென்றும்

299 இட்டசித்தி நாத ரெனவிருப்பார் மற்றெனக்கும்
இட்டசித்தி யாக்க விசைவரே — விட்டவொரு

300 பூவுக்குங் கண்வாங்கும் புண்ணியனர் நொந்தவென
தாவிக்குங் காவ லமைப்பரே — மேவியிங்குப்

301 பன்னாளும் வைகும் பயனுற்றம் மோடொன்று
எந்நாளும் வாழ்க்கை யிசைப்பரே — பன்னாளும்

302 தீதிரண்டி னுமிங்குச் செய்திருந்தே னயினும்
தீதெவர்க்கு மிங்குத் திருப்பணியாய் — மேதகுமா

303 ருக்குவார் தம்மையுளத் தாக்கு மளியேற்கும்
ஆக்கி யணைய வமைவரே — போக்கென்

304 றறியாப் பருவத் தடிபிழைத்தே னேனும்
பிறியாக் கருணைப் பெருமான் — குறியாத

305 தக்கனிங்குச் சாரத் தவறு தவிர்த்தவற்கு
மிக்க தலைமை விளைத்திட்டார் — தொக்கதமக்

306 கன்பரைப் பாழ்மதத்தி லாழ்த்தினோர் நண்ணுதலும்
கொன்பெரும் பாவங் குறைத்திட்டார் — முன்பிருவர்

307 யான்முதன்மை யான்முதன்மை யென்றிகந்தா ரெய்துதலும்
தான்முதன்மை யென்னத் தவறழித்தார் — பான்மை

308 திரிந்தொட் டகவடிவாய்ச் சேர்சனற்கு மாரற்
கரிந்துபிழை யெவ்வாமு மார்த்தார் — பிரிந்தவுளத்

309 தாழிகடைந் துங்கடுவை யாரக் கொடுத்துமுற்ற
பீழையம ரர்க்குப் பிரித்திட்டார் — வாழிமுன்னர்த்

310 தக்கனொடு கூடித் தவறிழைத்த விண்ணோர்கள்
தொக்கடைய நன்மைச் சுரப்பளித்தார் — மிக்கமர்த்த

311 வாளவுணர்த் தாம்வெல்ல யாம்வென்று மென்றிகவி
ஆளமரர் சார வருள்கொழித்தார் — தோளிணைகள்

312 கண்டூதி நீவ வறைகூவுங் காழவுணன்
தொண்டூற மீட்டுநலந் தோற்றினர் — பண்டேவல்

313 கண்டே றுவணற்குக் காட்டாப் பிழையண்மி
விண்டேறு வாழவருள் வீக்கினர் — வண்டேதும்

314 தேங்கடப்பந் தாரான் றிருவருளி னேவலிணை
நீங்கி யணையவரு ணீடினர் — ஓங்கல்

315 மகள்வாள் விழிபுதைத்து வந்தடிமை செய்யத்
தகவாள் கலப்புத் தரித்தார் — இகவாத

316 இத்தகைமை மிக்கார்மற் றென்னையுந் தண்ணருளின்
வைத்தடிமை கொள்ள மதிப்பரென — ஒத்தெழுந்தேன்

317 தூதொருவர்க் காகத் துனைந்தார் தமையடுத்த
தூது வறிதாகச் சூழ்கலார் — ஆதலினல்

318 தூதுவிடிற் பாணித்தல் சூழா ரெனத்துணிந்தேன்
போதுநெகிழ்த் தூதும் பொறிவண்டே — தாதளாய்ப்

319 பில்குமது வுண்ணும் பிரமரமே மென்மலரின்
மல்கு மமளி மதுகரமே — நல்குமிசைக்

320 காளம் பயிலுங் கருஞ்சுரும்பே பூஞ்சோலைத்
தானம் பயிலுந் தகைஞிமிறே — மானமிகு

321 சிம்புளுக்கு மஞ்சாத் திறலரியே சீறிவரும்
வெம்பரிக்கு மஞ்சா விறற்றும்பி — வெம்புலிகள்

322 தாக்குதற் கஞ்சாத் தனிமாவே குட்டிதழீஇ
ஊக்குதல்செய் யாத வுயர்மந்தி — ஏக்குலங்கள்

323 தாங்கி யுகையாத சாதகமே வில்லுதைப்பத்
தீங்கு புரியாச் சிலீமுகமே — ஓங்குரிமை

324 நெஞ்சத்தைத் தூண்டுவோ மென்னி னெடுவீதி
மஞ்சன் மணித்தேர் மருங்கெய்தி — என்செய்தி

325 கேட்கவெனத் தாழ்ந்து கிளப்ப முயன்றுபல்கால்
மீட்கப் பதமின்மை மேவலால் — தாட்கமலம்

326 கண்டுகொண்டே யண்ணல் கவின்வீதி தோறுமுலாக்
கொண்டருளிக் கோயில் குறுகிமணி — மண்டும்

327 உவளகத்திற் செல்ல வுடன்சென்ற தாங்கும்
இவறியது கூறவிட மின்றிக் — கவலுவதே

328 போலுமத னலின்னும் போந்ததிலை போந்திடினும்
மாலுவது மீட்டும் வழங்காதே — சாலவிங்கு

329 நன்றுறுத்தப் போத னயந்தாலும் பல்புலனும்
சென்றுசென்று பற்றுதலுஞ் செய்யுமே — மன்றவங்கே

330 பூண்டபெருங் காரியத்தைப் பொச்சாத் தலுங்கூடும்
மாண்டதன்று தூதுக்கு மற்றதுதான் — காண்டகைய

331 அன்னத்தைத் தூண்டின் மறையன்ன மன்ஞெருபொய்
சொன்ன பிழையாற் ஞெருமன்னம் — என்னவும்

332 நம்பர் திருவுள்ள நாடுவன வல்லவன்றிக்
கொம்பனையாட் கன்னக் குருகன்றே — நம்பலுறும்

333 ஊர்தி யஃதிதனை யுய்த்தறியின் முற்ருமை
சார்வது முண்டு தகவன்றே — சீர்வதியும்

334 கிள்ளையைத் தூண்டிற் கிளந்தவலா லங்குரைக்குக்
கொள்ளக் கிளவாத கொள்கைத்தே — ஒள்ளிழையாள்

335 கைக்கிள்ளை யிக்கிள்ளை காணினுங் காரியந்தான்
பொய்க்கு மதுவும் பொருந்தாதே — மெய்க்குமொரு

336 பூவையைப் போக்கிலது போகெறியிற் கண்டோர்கள்
மேவினர் பற்றின் விடுதியின்றே — மேவவொரு

337 நன்புறவைத் தூண்டினது நாளுந்தூ துண்டொழிக்கும்
என்புறத்துத் தூதாக வெண்ணுமே — துன்பறியா

338 அன்றில்குயி றென்ற லவைவிடின்மா ருப்பகையாய்
ஒன்றுவன தூதா யுதவுமே — அன்றியுங்கேள்

339 எண்காற்புள் ளானுர்க் கிருகாற்பு ளெவ்வெவையும்
கண்காணுந் தூதாங் கடனிலவே — ஒண்காரைத்

340 தூண்டி னதன்செலவு சூழ்ந்துவரப் பாணித்தல்
வேண்டுமத ஞற்பிழையே மேவுமே — ஊண்டிகழும்

341 காருவரி சொல்லோ கடுங்குரல் வாய்திறப்பின்
ஆரழலே சிந்து மவையன்றிச் — சீரரையன்

342 வாகனமா யன்னுன் வழியேவ லாற்றுவது
வேக வளியெதிரின் மீள்வதே — போகவது

343 செந்தமிழைச் செம்பொன்னைச் சேர்ப்பினவை தாஞ்செல்லா
பந்த முறக்கொடுபோம் பாலவே — முந்தூய்த்தும்

344 வேற்ருெருவர் வாய்திறக்க வேண்டுமே யென்செய்கை
வேற்ருெருவர் காணு விதியதே — கோற்ருெடிக்கைப்

345 பாங்கிமுத லோரைப் படர்விக்கப் பல்வழியும்
ஈங்கெனக்குச் சற்று மிசைவின்றே — ஈங்குரைத்த

346 பல்வகைய தூதும் பதனறிந்து சேய்நின்று
சொல்வகையி னன்றித் துணிபொருளை — நல்குவகை

347 காட்டுவன வல்லவே கண்ணிய பூங்கடுக்கைத்
தோட்டலர்த் தாரிற் றனைந்தேறி — வேட்டதித

348 நல்கெனமுன் னத்தி னவின்றருளி நாதனுர்
செல்கென மீள்வதுநின் செய்கையே — புல்குதவம்

349 ஆற்றி மறையு மாவு மதியுமற்றும்
ஏற்ற மிகுமணியா யேய்ந்திருக்கும் — நீற்றர்

350 திருவுருவின் மீது திகழ்தெய்வத் தாரில்
மருவுதவ நீவளரா யேனும் — ஒருவிலுயிர்

351 ஆக்கைபொருண் மூன்று மளிக்கவென நேர்ந்தேற்கு
நீக்க மறுந்துணையாய் நேர்வதே — போக்கில்

352 அரிய தவமா மகத்தீடு முற்றும்
பிரணவ மாகப் பிறங்கி — விரவுமணம்

353 எண்டிசையும் போர்ப்ப விறைவரே போலுயர்வு
கொண்டநறுங் கொன்றைக் கொழுந்தாரில்- தண்டுளித்தேன்

354 வாய்மடுத்துத் தேக்கெறிந்து மன்னுகளி மிக்குளர்ந்து
தாய்மறிந்து தாதளவித் தங்குநலம் — வேய்மதித்த

355 தோளியொரு பாலார்பாற் றன்னுமங்கே யும்பெறுவை
மீளி புரியினிங்கு மேவுவை — கேளளியே

356 தூதுவிடு வார்க டுணிந்தபொரு ளேயிசையும்
தூதுபுரி வார்க்குமெனிற் சொல்லுவதென் — நீதகவில்

357 தோற்றுதலா னின்குலத்தைத் தூய்மைபடுத் தாயதுவும்
நோற்றதே நீயதன்பா னேக்குதலின் — ஏற்றுருவாய்

358 மாயனனி தாங்கும் வாத னுருக்காணத்
தூயதிரு மேனி தொடநிகரின் — ரூய

359 அருள்பெரிதுந் தாங்கநின்போ லார்பெற்ருர் பெற்ருர்
மருள்சிறிதுந் தாங்கவா ராரே — தெருளரியே

360 முன்னின்ப நின்னின்ப முற்றிய வென்னின்பம்
பின்னின்ப மன்றிப் பிறிதுண்டே — அன்னைநீ

361 ஆதற் குரிமை யடுத்தலா னிற்றூது
போதற்க ணுக்கப் புகன்றனேன் — போதுற்றி

362 வேட்ட பொழுதி னதுவாயே மேவினுய்
ஈட்டமிதன் மேலு மெனக்குண்டோ — பாட்டளியே

363 தன்பெருமை தானறியாத் தன்மையன்போல் வையகத்து
நின்பெருமை நீயு நினைகலாய் — முன்பொருநாள்

364 நின்னுருவங் கோடலா னன்றே நெடுவேலான்
முன்னிய வேத முழுதுணர்ந்தான் — நின்ன

365 தரியெனு நாம மணிதலான் மாயன்
இரவி வலாரியிவர் முன்னோர் — பாசுகரத்

366 தானந்த ருத்திரனுக் காளாய்ப் பணிபுரிந்து
வானந் தரிக்கும் வரம்பெற்ருர் — மான

367 மடங்கலும் பார்ப்பதிக்கு வாகனமா யையற்
கிடங்கொளணைக் காலா யியைந்தே — தொடங்கரிய

368 எண்ணின்மிரு கக்குலமு மேத்து மாசுரிமை
மண்ணில் விரவி வயங்கிற்றே — கண்ணுதிறல்

369 வாசுகி யாதியுகம் மன்ன னடிபோற்றி
ஆசையுல கம்பரித்தின் பார்ந்தனவே — பேசியநின்

370 மந்தியெனு நாம மரீ இயன்றே நீமருவும்
கொந்தவிழ்கா வானரங்கள் கொண்டவே — உந்துபெயர்ச்

371 சாகஞ் சிலீமுகஞ் சார்ந்தன்றே விற்கணையும்
வேகம் பகைக்கழித்து வீறுவதும் — நீகொள்

372 அளியென்னு நாம மணிந்த கருணை
களியெவர்க்கு மாற்றுவது காண்டி — ஒளிர்தருநின்

373 வண்டென்னு நாம மணிந்த வளைமகளிர்
தண்டளிர்க்கைச் சீரளிக்குந் தன்மைத்தே — வண்டேநின்

374 நாமமே யண்மினர்க்கு நன்மை தருமென்றால்
நாமிநீ நல்கல் வியப்பேயோ — காமருநின்

375 எங்கும் வழங்கு மியற்பெயர்த்தெங் கையணியும்
நங்குலமெங் கூந்த னுழைந்துள்ளரும் — எங்கெவர்க்கும்

376 கண்ணிற் சிறந்த வுறுப்பில்லை யெங்கண்ணின்
வண்ண நினக்குரிய வண்ணமே — கண்ணலமந்

377 தாடு தொழிலு நினதேயங் கோடரியும்
கூடியநின் னாமமெனக் கூறுவதே — பாடகத்தாள்

378 எய்திய நூபுரங்க ளேங்க வவற்றுள்ளே
பெய்தது மந்தப் பெயருடைத்தே — ஐதுலகில்

379 மிக்குரிமை யிவ்வாறு வீறினேன் மிக்குணர்ந்த
தக்கவருஞ் சாற்றத் தகுமிஃதத் — தக்கவனை

380 வில்லிற் குணமாய் விசித்தேற்றி நங்குலத்தை
வெல்லத் தொடுத்து மெலிவிக்கும் — வல்லமத

381 மார னுடற்ற வருந்தி யருங்கவலை
சாரவது நீபார்க்கத் தக்கதோ — வாரமென்ப

382 தல்ல லடையி னலர்விழிக்கு வாரிமைபோல்
மெல்லுடைக்குக் கைபோல் விரைவதன்றே — நல்லளியே

383 நின்னியற்பேர் கொண்ட நிரைவளைக ளென்கையில்
நின்னையன்றி யாரே நிறுத்துவார் — அன்னேநின்

384 றன்னுருவம் போலுந் தடங்கண் பொழிபுனலின்
றன்னையன்றி யாவர் தவிர்த்திடுவார் — மின்னையார்

385 மேனி திதலை விழைவவெனப் பூத்தகணி
கானிவர் சண்பகமுங் காலுழக்காய் — ஆன

386 உரியைநீ யல்லாலெ னெள்ளிய மேனி
தெரிதிதலை யாரே திருப்பார் — விரிநீழல்

387 மாவிற் பலாசில் வளர்கூ விளத்தினரும்
பூவின் மதுவுண்ணப் புக்குலாய் — மேவுதோறும்

388 தன்னை வலம்புரிந்த தென்று தவமாக்கும்
மன்னனைநீ யண்ம மகிழ்வாயே — துன்னி

389 இரப்ப தரிதா லிரப்பி னிரந்த
சுரப்பதின்மேற் றெல்லுலகிற் சேர்த்தி — நிரப்பதில்லை

390 அத்தகு சீர்த்தி யளிக்கலான் மேவாமை
பைத்த பெரும்பார் பகருமே — எத்திறத்தும்

391 வண்டங்கே செல்லின் மதுமலர்த்தார் மன்னவனார்
வண்டிங்கே நல்க மதிப்பரே — மண்டி

392 முருகா ரளியங்கே முன்னினுற் செம்மல்
பெருகா ரளிபெறுவ துண்டே — மருவுபொறி

393 வாளரி யங்கே மருவின் வெதும்பிவிழும்
நீளரிக் கண்ணீர் நிகழாதே — கோளில்

394 மதுகர மங்கே வழங்கினுயிர் வேவ
விதுகரம் வெப்புவிளை யாதே — கதுவலுறச்

395 சஞ்சரிக மங்கே தலைப்பட்டா லென்கரங்கள்
அஞ்சரி கங்கணங்க ளாருமே — விஞ்சலுறும்

396 சஞ்சா யகமங்குச் சார்ந்தாற் றிறன்மாரன்
வெஞ்சா யகமிங்கு மேவாதே — அஞ்சாச்

397 சுரும்படரி னங்கே சுரும்பிவர்வார் வில்லின்
பெரும்படரி னங்கம்பீ ருதே — விரும்பி

398 ஒருமந்தி யங்கே யுறினழலிற் சீறி
வருமந்தி மாருதம்வாட் டாவே — பொருவில்

399 பிரமரங்க ணல்கிப் பெயரினு னந்தப்
பரமரங்க ணல்குபய னுண்டே — கரிசில்

400 வரிஞிமிறு செல்லின் மணிமுலைக்குச் சாந்திங்
குரிஞிமிறு கத்துற்ற தாமே — உரிய

401 அறுகாற் பறவை யடுப்பினிரண் டென்னப்
பெறுகாற் பறவைபிழை யாவென் — றுறுகாதல்

402 மல்க விரந்தேன் வறங்கூரா மேசேறல்
நல்குகட னென்று நயப்பாயே — நல்கி

403 இலளிதைக்கு மூவரையு மீனவா மீந்தார்
பலருடலும் புக்கமரும் பண்டன் — உலையப்

404 புரியமர்மிக் காற்றிப் புகல்காம நல்கல்
திரிபுர சுந்தரிக்குச் செய்தார் — வரைமாதின்

405 பூங்கரத்துக் காப்புக் கடகம் புணர்த்தினர்
ஆங்கவள்வீழ்ந் தேதழுவ வாக்கினர் — யாங்கவடான்

406 மஞ்சணீ ராடவது வார்ந்தொழுக வக்கரையில்
மஞ்சணீர்க் கூத்தரென வைகினர் — வஞ்சியவள்

407 நீக்கிய கோசமென நின்றகன்னி தன்னையுமில்
ஆக்கிநகர்க் காவ லருளினர் — மாக்கருங்கண்

408 மங்களை வேட்ட வரமளித்தார் காளிக்குப்
பொங்குகட ளுக்கும் பொலிவளித்தார் — மங்கைசிறை

409 மீள விராமற்கு வீரமளித் தாரணங்காய்
ஆள விரேணுகைக்கன் பாக்கினர் — நீளும்

410 சிறைகருடன் ருய்க்கொழிப்பச் செய்தார்சா பத்தின்
மிறைதிருமா துக்குமையால் வீத்தார் — மறையவனே

411 டுடிய வாணி யுறவாக்கி னர்பெண்மை
கூடிய மாலைக் குறித்தணைந்தார் — நாடிய

412 மாண்டுகன்னு மாமுனியால் வானை யரம்பையர்கட்
கீண்டிய போக மியைவித்தார் — நீண்டவருள்

413 கண்டு றுரையார்க்கே கைகொடுப்பா ரன்னவர்பால்
பெண்டூது செல்லவெவர் பெட்கலார் — வண்டே

414 மிஞிறே யளியே விளரியரி யேநின்
மிஞிறுஞிமி ருக விளங்க — விமிழ்கின்ற

415 வைசாகி வைகாசி வாய்ந்த பறையலகே
ஐதாம் பலகறையென் ருனவே — மைதீரும்

416 நீர்க்கீழ் நகர்ப்புறங்கீழ் நீரே புறநகரே
சேர்க்குமின்முன் முன்றிலெனச் சேர்ந்தவே — பார்க்கண்

417 இருந்தா னிருந்தானே பார்க்க ணெழுந்து
திரிந்தான் றிரிந்தா னெழுந்தென் — றிருந்தனவே

418 தத்தந் திணைக்குரிமை சாற்றுகரு வும்பொழுதும்
ஒத்து முறழ்ந்து முறுவனவே — வைத்தபொருள்

419 வெண்பா முதனன்கும் வேதியர்முன் னோர்நால்வர்
ஒண்பாவென் றேத லுறழ்ந்தனவே — ஒண்பாத்

420 தளைமுதலுந் தம்மு ளுறழ்ந்தனவே காவி
ஒளிர்மதியொண் காம விதியே — வளரும்

421 துடிகனியே தோமி றுகடினியே யான
படியேநீ யெத்தொழிலைப் பார்த்துப் — பிடிசெயினும்

422 அண்ண லருளு மதுவே நெறியாக
நண்ணுமது போனலக்கு மாயினும் — மண்ணவர்க்குக்

423 கீழாக வைத்த கிளர்தொழில்சற் றும்புரியாய்
வீழாக மேற்றொழிலு மேவாயே — வாழாகப்

424 பூவிலிருந் தூது முறைபுரித லேயன்றி
மேவு மரசுரிமை மேவாயே — தாவிலாச்

425 சந்திசைவ தல்லாற் றகுபயனுண் டாமேனும்
கொந்துபடு மத்தியிவர் கோளிலாய் — எந்திடத்தும்

426 வாசந்தி யென்பாரை யன்றிநீ போதியென்பார்
பேசுந் திருவேதும் பேணிலாய் — ஆசில்

427 கரவீரங் கொண்டு கதழ்வாய்மற் றுங்கே
விரவாக் கணியோர்ந்து மேவாய் — பரவாம்பல்

428 அம்போ ருகத்தா ரமர்வா யுயர்வேனும்
வம்போடு கோளி மருவுகிலாய் — நம்பும்

429 குவலயநீ வேண்டிற் குறிக்குமுனந் தாட்கீழ்
அவலமற வாவதே யன்றோ — கவலையற

430 நாகம் புகுவாயர் நாகந் துறந்துரிய
சோகம் படர்வாய் துறையனைத்தும் — நீகண்டு

431 நீத்தவே யன்றோ நிகர்ப்பாரார் நின்னையினி
ஆத்தனுக்கு நின்போ லடுத்தாரார் — மூத்தபெரும்

432 தேவரு நின்னைச் சிரமேற்கொள் வாரென்னின்
யாவரோ நின்னை யிகப்புறுவார் — போவதுசெய்

433 தங்கங்கே பல்பொழிலு மங்கங்கே பல்கயமும்
அங்கங் கமரர்கள்பூங் கோயிலும் — அங்கங்கே

434 விம்மிதப் போதுகளு மெய்த்தருவு முள்ளவற்றுள் [போய்த்
இம்மெனுங் காலமுஞ்சென் றெய்தாமைக் — கொம்மெனப்

435 துதிதுவா லென்றுரிமை சூழ்ந்தவிட மாதுமுடி
மாது மறியா மரபெய்திச் — சோதிதிகழ்

436 ஆனந்த ருத்திரனு ரஞ்செழுத்து நெஞ்சாக்கி
ஊனந் தபும்பணிவு முள்ளாக்கிக் — கானம்

437 தழைத்தமலர்க் கொன்றைத் தனித்தா ரிவர்ந்து
மழைத்தமது வுண்டு மகிழ்ந்து — செழித்ததற்பின்

438 காந்தாரம் பாடு கனலிற் றழல்கின்ற
காந்தாரங் கொங்கை கலப்பிப்பார் — சேந்திடகாச்

439 சாதாரி யோது தமியே னிறையோடும்
சாதாரி யின்னே தவிர்த்தருள்வார் — மீதான

440 தாண்டகம் பாடு தமியேனை விட்டங்கே
தாண்டகங் கொண்டு தரவருவார் — ஈண்டும்

441 இராகங்கண் முற்று மியம்பிங் கிருவேம்
இராகங்க ளொற்றித் திணைவார் — பராவும்

442 கவுசிகம் பாடு கடிதடமே னில்லாக்
கவுசிக நிற்கும்வகை காண்பார் — இவறுசுவை

443 ஆர்கட்ட பாடை யறைதி யெனக்கிங்காம்
வார்கட்ட பாடை மருவியார் — பார்கட்ட

444 சீகா மரம்பாடு தேம்பு மெனையிணர்த்த
சீகா மரம்புரையச் செய்தருள்வார் — பாகாச்

445 சிகண்டி தனைப் பாடு தெரிவருமா னந்தச்
சிகண்டி தமை வேட்டதெனத் தேர்வார் — புகன்றவிசைக்

446 காம்போதி பாடுகெடுங் காம்போதி வில்லினர்
காம்போதிக் கென்னைக் கவல்வியார் — தேம்பாமை

447 கைவளம் பாடு கனிதேவ நாயகரென்
கைவளம் பார்த்து நலந்தருவார் — கைவில்

448 புறநீர்மை பாடு புகழ்தருமே கம்பர்
புறநீர்மை யென்பாற் புகுத்தார் — செறிநீர்மைப்

449 பஞ்சுரம் பாடு படர்கூர்ந்த வென்னுடற்குப்
பஞ்சுர மென்னும் பரிசுணர்வார் — எஞ்சலின்றிச்

450 செவ்வழி பாடு செறிந்திருக்கை யாங்குணர்ந்து
செவ்வழியே யாக்குந் திறநினைவார் — எவ்வழியும்

451 கொல்லி முழுதுங் குறித்தோ திதுவுமுயிர்
கொல்லியவட் கென்னக் குறிக்கொள்வார் — மெல்ல

452 விளரியெடுத் தோது விரவிரக்க மிக்கு
விளரியவென் மேனிவிழி யுய்ப்பார் — வளருமிசை

453 நேர்திறம் பாடொழியா நீரினளென் றேயருட்கண்
நேர்திற மல்லா நிலையருளார் — சீர்திகழப்

454 பாலை முழுதும் பயிறந் தவறுணர்ந்து
பாலை யுரிப்பொருளைப் பாற்றுவார் — சாலக்

455 குறிஞ்சி யனைத்துங் குழைந்துபல்கா லோது
குறிஞ்சி யுரிப்பொருளுட் கொள்வார் — உறுஞ்சுரும்பே

456 எல்லா முறைத்தாங் கிசையெழுப்பிப் பாடுவல்யான்
நல்லா யவர்செழுந்தார் நல்குவார் — வல்லையான்

457 போய்வரினு மவ்வளவும் போற்றரிது நீயுயிரை
மாய்வதிடை போலும் வதிந்தாலும் — ஆய்மலர்த்தார்

458 தந்தளிப்ப தண்மித் தழுமளவு மாற்றுதற்கே
அந்தநலந் தாரி னமையாதே — எந்தவழி

459 மாதர் பிரியாமை வாழுமா னந்தேசர்
போதுவரென் றையுறவு பூணுதியேல் — ஓதுவல்கேள்

460 ஈங்கிடையே யாவி யிறந்தாலு மாவடியில்
ஓங்கிய வைந்தொழில்செ யுத்தமனார் — பாங்குபெறத்

461 தந்தாள் குறித்துத் தவிர்ந்தேற் குடலியக்கம்
தந்தாண் முறையவர்க்குச் சத்தியமே — அந்தோமுன்

462 மாயன்முத லோருடலை மாய்த்தெதிர்ந்த பண்டனுயிர்
சாய வழித்துத் தகமுன்போற் — காயம்

463 கொடுத்தருளுங் கச்சி மயானத்தெங் கூத்தர்
அடுத்த வினையுடலீ தாகி — விடுத்திடினும்

464 ஆக்கை யிதுபோ லளித்துப் பெருங்கருணை
வீக்க லவர்க்கு விளையாட்டே — போக்கில்

465 அமிர்தசஞ் சீவி யவிர்வெள்ளிக் கீந்து
தமியுடற தீசியெனுந் தொல்லோற் — கிமிழ்கொளீஇ

466 வச்சிர யாக்கை வழங்குமிட்ட சித்தீசர்
மெச்சவுயிர் நல்கல் வியப்பேயோ — அச்சோ

467 இறவாத்தா னத்தி லிருந்தருளா னந்தர்
இறவாமை நல்கவெளி தன்றோ — குறிமாவே

468 பெண்ணுருவி னீங்காப் பெருந்தகைமை யானந்த
அண்ண லியற்கை யறியாய்நீ — எண்ணில்

469 நிறைந்தநெய்போ லெங்கு நிறைந்துலக மெல்லாம்
அறிந்துலக மேதுமறி யாதான் — செறிந்துயிர்க்கு

470 வெவ்வே றுடலம் விளைத்துத் திருமேனி
வெவ்வே றெடுக்கும் விரகினன் — எவ்வேறும்

471 ஆவோனவ் வோருருவே யாங்காங் குறக்காட்டி
மேவா மலத்தை விளித்திடுவான் — ஓவாது

472 வல்லி யொருபான் மகிழ்ந்திருக்க வேயன்றே
மெல்லியன்மான் மாதுநல மேவினன் — நல்லவெழில்

473 தாரு வனத்துத் தகுமடவார் தானையெலாம்
பாருக் களித்துப் படர்ந்திட்டான் — ஆர

474 அாவுமதி நீங்கா தமர்வனகா ணமை
இருமடவார்க் கின்பமியைக் கின்றான் — ஒருமதுரை

475 அங்கயற் கண்ணி யறியாமை மாதர்பலர்
செங்கைவளை யேற்றிநிறை சிந்தினன் — அங்கங்கே

476 மின்னனையார்க் கையன் விளைத்த திருக்கருணை
இன்னும் பலவா லெனக்கின்னே — தன்னருந்தார்

477 தந்தருளி நீயிங்கே சாருமுன்னே தான்வரினும்
வந்திடுவன் செய்கை மதிப்பாரார் — அந்தில்

478 இருந்தருள்வா ணயிடினு மெம்பெருமா னுக்குத்
திருந்து திரு மேனியெங்கு மன்றோ — விரிந்தவுல

479 கெங்குந் திருவடிக ளெங்குந் திருக்காங்கள்
எங்குங் கருணை யெழுமுகங்கள் — எங்கும்

480 மலர்ந்த விழிகளெங்கும் வார்செவிக ளெங்கும்
அலர்ந்தவாக் காம்பலன வாய்கள் — இலங்கும்

481 மணிநாசி யெங்குமாய் மன்னி யிருப்பன்
பிணியா வருக்கும் பெயர்ப்பான் — பிணியேதும்

482 இல்லா னுருதே யுறுவா னிறைஞ்சுநர்பாற்
செல்லாமே செல்வான் செறிவரங்கள் — எல்லாம்

483 கொடாதே யெவர்க்குங் கொடுப்பா னுருவம்
மடாதே விழிக்கண் மடுப்பான் — விடாதுரைகள்

484 கேளாதே கேட்பான் கிளவாதே தான்கிளப்பான்
மூளாதி மோவாதே மோக்கிற்பான் — வாளாங்

485 குழல்வார் தமையு முறப்பிணிப்பான் விட்டுக்
கழல்வாரை யுங்கழல வொட்டான் — தொழிலனைத்தும்

486 செய்யாதே செய்குவான் செய்தொழிற்குத் தக்கபயன்
நையா ருயிர்நுகர நாட்டுவான் — எய்யாமை

487 ஆருயிர்கள் பேரின்ப வாழி படிநெறியிற்
சாரும் விரகன்றித் தானினையான் — ஒரும்

488 தனைநோக்கு மாருயிரைத் தானோக்கி மூல
மனைநோக் கறத்தன்பால் வைப்பான் — வினைசாம்ப

489 எவ்வளவுந் தன்பா லிசையக் கருதுவார்
அவ்வளவுந் தம்பா லிசைந்தணைவான் — எவ்வெவர்தம்

490 கண்ணுக்குங் காணன் கருத்துக்குஞ் சேய்மையான்
வண்ண வுரைக்கும் வளவாதான் — திண்ணிய

491 வாண னறைகூவ வாகுபல வுந்துணித்தான்
ஓணன் பொரக்கருணை யூக்கினான் — பூணும்

492 சலந்தரனைத் தேய்த்தான் சமர்த்த விராமற்
கலங்கு பரசொன் றளித்தான் — இலங்குமையோ

493 டொற்றிப்ப வைம்பூ வுறுத்தானை நீற்றினன்
பொற்றவருள் கல்லெறிக்குப் பூண்பித்தான்-முற்றிழையாள்

494 வாட்கண் புதைப்ப மருங்கொழித்தான் மெய்குழையத்
தோட்கொண் டணையநலஞ் சூழ்ந்தணைந்தான் —தாட்பணிய

495 ஏவிய செவ்வேட் கினிததுசெய் தானவன்றன்
ஏவலொழி யக்கழுவா யேலென்றான் — பூவினுக்கு

496 மாயனொரு கண்ணளிப்ப வாங்கினன் வன்றேண்டற்
கேயவொளிக் கண்ணொன் றினிதளித்தான் — தூய

497 மறைக்கோ வணத்தான் மறைச்சிலம்பான் மாவான்
மறைக்கோ வறிவரிய மாண்பான் — நெறிக்கோள்

498 உயிருக் குயிரா னுயிரறிவுக் கெட்டான்
பயிலுயிர்க்கே யின்பருளும் பண்பான் — பயிலுநர்க்குக்

499 கண்ணுமா னந்தங் கனிவாயு மானந்தம்
வண்ண வதனமு மானந்தம் — தண்ணறல்சேர்

500 வேணியுமா னந்தம் வியன்மார்பு மானந்தம்
பூணுமா னந்தம் புயங்கரந்தாம் — நாணுடையும்

501 ஆனந்த மானந்த மானந்த மானந்தம்
ஆனந்த மெவ்வுறுப்பு மானந்தம் — ஆனந்தன்

502 காஞ்சியுமா னந்தமாய்க் காணநிற்பா னத்தகைய
வாஞ்சையுறு மானந்த வள்ளறன் — காஞ்சனத்த

503 கோயிலை முற்றிக் குறுகி முறைமையால்
நீயணவி யான்சொ னெறியுளிநின் — ருயிடையே

504 பூங்கொன்றை வாங்கியிங்குப் பொற்பக் கொணர்ந்தென்றும்
ஓங்குபெரு வாழ்க்கை யுதவு.

திருச்சிற்றம்பலம்.

**கச்சி ஆனந்தருத்திரேசர் வண்டுவிடுதூது முற்றிற்று.**

---

**ஸ்ரீ மெய்கண்டதேவர் மிளிர்கழல் வெல்க.**
**ஸ்ரீ மாதவச் சிவஞானயோகிகள் மலரடி வாழ்க.**
**ஸ்ரீ கச்சியப்பமுனிவரர் கழலடி வாழ்க.**

**திருச்சிற்றம்பலம்.**

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

கவிராக்ஷஸ -

# ஸ்ரீ கச்சியப்ப முனிவர் பிரபந்தங்கள்.

## 5. பஞ்சாக்கரதேசிகரந்தாதி.

திருவாவடுதுறையாதீனம்.

உ
சிவமயம்.

மும்மைப் பொருட்கு மிலக்கணங்கண் மொழிந்த விரண்டு காலத்தும், தம்மிற் றிரியா வகைகாட்டித் தானுந் தன்மை மிகத் தேற்றி, நம்மைப் பணித்த புகழ்த்துறைசை நமச்சி வாய தேசிக ன்றன், செம்மைப் பதுமத் தாண்மலரென் சிந்தைத் தடாகத் தலருமால்.

திருச்சிற்றம்பலம்.

— திருவானைக்காப்புராணம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# பஞ்சாக்கரதேசிகரந்தாதி.

---

## கட்டளைக்கலித்துறை.

பதிபசு பாசத்தைப் பாசம் பசுபதி யாக்கியொரீஇப்
பதிபசு வாகப் பசுபதி யாக்கிப்பின் னும்பயிற்றிப்
பதியெனத் தானுய்ப் பயிலுந் திருவா வடுதுறைசைப்
பதிவளர் பஞ்சாக் கரவனை யென்சொல்லிப் பாடுதுமே. (1)

பாடுதும் பஞ்சாக் கரவனை யென்று படர்தலொடுங்
கூடுவ தன்னவன் பாத மதுவந்து கூடுதலும்
நீடுவ தின்ப மனவாக்குக் காய நிகழ்செயலற்
றோடுவ வாளாங் கிருப்பதல் லாற்பின்னை யொன்றில்லையே. (2)

ஒன்றில்லை யாக வுயிருள தாக வுருவங்கொண்டு
தென்றில்லை யாடி துறைசையிற் பஞ்சாக் கரவன்சென்று
நின்றில்லை யாதியென் றுனின்ற யான்சென்று நின்றிறலும்
நன்றில்லை தீயது மில்லைசொல் லாவொன்று நண்ணியதே. (3)

நண்ணிய பாசஞ் சடமா ணவமறி ஞனெனவே
கண்ணுவ தின்றுயி ரொன்ரு யுணர்த்துங் கதியறிவைத்
திண்ணிய பாச வறிவு பசுவறி வென்றுசெப்பி
எண்ணுவ தென்னை யியம்பாய்பஞ் சாக்கர வின்குருவே. (4)

குருவா யருள லுயிர்க்கின்மை யாருங் குறிக்கொடுய்ய
அருவா யருவுரு வாயுரு வாயவை தானெனநற்
பெருவான் பொருடன் பெரும்பெய ரேபெய ராகவந்த
ஒருவாய்மை தன்னை நினையினு முள்ள முருகுவதே. (5)

உருகுங் கருணைப் பெருந்திற நோக்கி யுலைமெழுகாய்ப்
பருகுந் தணப்பற வானந்தத் தேறல் பமரமெனத்
திருகும் வினையின் றிருக்கறுத் தாண்டுதன் சேவடிக்கீழ்த்
தருகின்ற பஞ்சாக் கரவனே டாடிய தாழ்குழலே. (6)

தாழ்கின்ற கூந்தன் மலர்சூட்டித் தையலர்த் தோயுமின்பத்
தாழ்கின்ற வென்னைத்தன் பாதத்தி லார்வ மளித்துளத்தைப்
போழ்கின்ற வைம்பொறி போழ்ந்துபஞ் சாக்கர பூரணன்மெய்
வாழ்கென்று சென்னி மலர்க்கைவைத் தானின்ப மல்கியதே. (7)

மல்கிய சஞ்சிதக் காட்டை யெரிவாய் மடுத்துடலிற்
புல்கிய வின்பத்தன் பங்களெல் லாம்பின்பு பூப்பதின்றி
அல்கிய பஞ்சாக் கரதே சிகனரு ளாற்கவர்ந்து
நல்கிய வாய்மைக்குக் கைம்மாறு கண்டில னல்குதற்கே. (8)

நல்குந் தொழிறனக் கேயன்றி யில்லா நலத்தகைசீர்
பல்குந் துறைசைப்பஞ் சாக்கர தேவன் பணித்திடுங்கான்
மெல்குந் திறமெனக் குள்ளத னல்வினை கின்றவெல்லாம்
ஒல்குந் திறமின்று காட்டினன் யானென தோடியதே. (9)

ஓடிய தாணவ முற்றது பாசகன் மங்களொத்த
வாடின பல்வகைத் தோற்ற மலரயன் மான்முதலோர்
வீடினர் செய்கை விளைந்தது போகம் வியன்றுறைசை
நீடிய பஞ்சாக் கரவன் முகிழ்த்த நிலாநகைக்கே. (10)

நகைக்கின்ற செங்கனி வாயு மெதிர்ந்தோர் நவைமுழுதும்
துகைக்கின்ற பேருட் பார்வையு மும்மலத் தொக்குவிடத்
தகைக்கின்ற சின்முத் திரையுந் தனிக்கரப் புத்தகமும்
உகைக்கின்ற வாலென்னைப் பஞ்சாக் கரவனெண் பூங்கழற்கே.

கழற்கா லரவிந்தங் கைகூப்பப் பஞ்சாக் கரவனெங்கோன்
அழற்கா லனைவந்து சாரலொட் டான்றனு வைப்படைப்பப்
புழற்கா லரவிந்தப் புத்தேளை நாடலொட் டான்புனவேய்ங்
குழற்கான வாயற் கிடமினி யாதன்ன கொள்கையனே. (12)

கையம்பு மூவுல குண்டது கண்மல மொன்றுண்டதால்
ஐயம்பு வேளை யமலன்பஞ் சாக்கர வண்ணல்பொற்றாள்
நெய்யம்பு பாறயி ராட்டி வணங்கிய நேயரொன்றும்
எய்யம் பிறவென வெல்லா மெடுத்து விழுங்கியதே. (13)

விழுங்கிக் கிடந்த வொளியறல் பார்த்து மிடையிருள்போல்
ஒழுங்கிக் கிடந்தவெ னுள்ளத் தொழிவுகண் டோங்கிருளும்
அழுங்கக் கடைக்கணித் தாண்டான்பஞ் சாக்கர வண்ணலினிப்
புழுங்கக் கடவதொன் றில்லையெஞ் ஞான்றும் புணர்ப்பன்றியே.

அன்றிய நீத்த மடுத்தான் சடைக்க ணடற்கெழுமான்
ஒன்றிய வோதை மடுத்தான் செவிக்க ணுலகமுற்றும்
கன்றிய வால மடுத்தான் களத்துக் கருதியென்னை
வென்றியம் பாத மடுத்தான்பஞ் சாக்கர மெய்த்தவனே. (15)

தவமாய்த் தவம்புரி வானுய்த் தவப்பய னுய்க்கொடுக்கும்
அவனு யிருக்கும்பஞ் சாக்கர மூர்த்தியை யாரறிவார்
நவமாத் தொழிற்கு வருமுருப் போலருண் ஞானநல்கிப்
பவமாய்க்க வந்த பவம்பரி யாமை யிருந்திடினே. (16)

இருந்திடிற் பஞ்சாக் கரவன் பதத்திடை யான்மலமும்
இருந்திடுஞ் சற்றெழி னுங்கே யெழுந்தினி நீயெனக்கு
விருந்தென வாய்ப்பெயு மீட்டு மிராமை வீடுப்பினந்தோ
பொருந்திடு மெல்லா மவன்பெயர் பொள்ளென வோதுவதே.

ஓதுவ தாகிய பஞ்சாக் கரன்பெய ரொண்மறையின்
மீது வதிவது நட்போ டிகலை விளக்குவதும்
போதுவ தும்பின் புணர்வது முன்னுய்ப் புணர்மயக்கம்
காதுவ துங்கழன் றுள்ளது மெல்லாங் கருதிடினே. (18)

கருதிடு மென்னைத்தன் னுள்ளே யிருத்துங் கதிப்பின்மலம்
பொருதிடும் போகப் புணர்ப்பா யிருக்கும் புரைதவத்தால்
இருதிடு நாமமெய் தார்க்கிரு ளாயே யிருக்குமருள்
விருதிடும் பஞ்சாக் கரவன் விரைப்பூங் கழற்றுணையே. (19)

துணைமா முலையுமை காணச் சுடர்மணி யம்பலத்தே
இணையா வருமின்றி யாடும்பஞ் சாக்கர வெந்தைபிரான்
அணையா வெனையணைப் பான்பிற கேசெல்லு மாருளே
புணையாப் பவக்கட லேற்றிய வாறற் புதநெஞ்சமே. (20)

நெஞ்சே யுறுதி யறிந்திலை போலு நினைப்பினங்கே
அஞ்சே லெனநின் றருளும்பஞ் சாக்கர வண்ணலிரு
செஞ்சே வடியை யிகந்தய லேபுலன் சென்றுபற்றி
நஞ்சே யனைய வினைவழிச் சேற னயந்தனையே. (21)

நயந்தரு நல்லவன் தான்மகிழ் வாய்நல்ல வல்லநெஞ்சே
பயந்தரி னுங்கே பணிப்பா யறிந்தநின் பண்புநன்றே
வியந்துனக் குள்ள தருளும்பஞ் சாக்கர மெய்ப்பொருளோ
டியைந்தவை தாக்கா திருக்கறி யாதுட லாயிருந்தே. (22)

இருந்தேன் மலத்தி லளற்றிரை யாய்நல னேதுமில்லேன்
பொருந்தே னடியர் குழாத்தைப் பொருந்துவன் புல்லியரைத்
திருந்தேன் றிருந்தும் வகைகளெல் லாஞ்செய்து நிற்கின்றதால்
மருந்தே யனையபஞ் சாக்கர தேவன் மலர்ப்பதமே. (23)

பதமலர் கண்டோ ரெறும்ப்பக டூர்தி பதிகுறுகார்
இதமருள் செங்கைகண் டோர்பிர மன்கை யெழுதப்படார்
கதமலை யீருரி போர்த்தருள் பஞ்சாக் கரவனுதன்
மதவிழி கண்டோர் துரப்பர் மதவேண் மலர்க்கணையே. (24)

கணையுண்ட தேரு மிருளுண்ணு மாழியு மக்கணையும்
பிணையுண்ட தேரைப் பரிக்குஞ் சிலையும் பிறங்கவெல்லாம்
அணைவொன்ற வாக்கும் வலவனு மேங்க வசித்ததென்ப
இணையொன்று மில்லாத் துறைசையிற் பஞ்சாக் கரவின்பமே.

இன்ப மிதுவெனப் பஞ்சாக் கரவ னிணைப்பதத்தில்
அன்பிற் பிணைந்த வடியரல் லான்மற்றை யாரறிவார்
துன்பிற் பிணைவது கண்டுந் தொடர்ச்சியெல் லாஞ்சுகமா
வன்பிற் பிணைந்திடு மாலாதி யோரு மதித்தனரே. (26)

மதிப்பிக்கு மென்னைத்தன் பாதத்தை யாங்கே வயங்கிநிற்கும்
உதிப்பிக்கு மன்பை யுறுசுவைத் தெள்ளமு தாயுகக்கும்
கதிப்பிக்கு மாணவ மாயைகன் மங்களின் கட்டறுக்கும்
பதிப்பிக்கும் பஞ்சாக் கரவன்றன் பாலெனைப் பாதங்கொண்டே.

கொண்டலங் கண்டமுங் கொக்கரைக் கூத்துங் குறுநகையும்
மண்டிலங் கொண்டவிர் செஞ்சடைக் கற்றையும் வான்பிறையும்
தண்டளிர்ப் பாதமும் பஞ்சாக் கரவன் றயங்கருளும்
உண்டன கண்டவன் றேயெனை மீட்டு முமிழ்வின்றியே. (28)

இன்றேயெஞ் ஞான்று மொழியாத வின்பத் துறைபடிய
நன்றே யருளும்பஞ் சாக்கர நாத னளினபதத்
தன்றே விரவு நிலையறி யாதது போலழுந்தி
வென்றே விரவு மலமறி யாமை விடுத்தனமே. (29)

விடுத்தன மென்று பகர்ந்தத னுல்விடு மோமலமும்
அடுத்தன மென்று பகர்ந்தத னுலண்மு மோவருளும்
மடுத்தருள் பஞ்சாக் கரவன் மலர்ப்பதத் தேயழுந்திக்
கெடுத்தென தியானெனுஞ் சேட்டைப் பகுப்புங் கெடினல்லதே.

அல்லவிர் கண்டனெண் டோளன்முக் கண்ண னழற்காத்தன்
எல்லுமிழ் மேனியன் பஞ்சாக் கரவ னெனக்கிரங்கிச்
சொல்லிய ஞானந் துவந்துவம் பாற்றித் தொக்காருயிராய்ப்
புல்லிய ஞான மிரண்டுமல் லாற்புக லொன்றில்லையே. (31)

இல்லை யிறைவனென் பார்க்கு மிறையென்ற மாத்திரையால்
நல்ல வருளும்பஞ் சாக்கர நாத னளினபதம்
சொல்ல நினைய விறைஞ்சப்பெற் ரூர்க்குத் துகட்கிழங்கைக்
கல்வி யருள்வதி னையுறல் வேண்டுங்கொல் காசினிக்கே. (32)

காசினி மீது பிறந்தவர் தம்முளுங் காவிரிசூழ்ந்
தாசிறு நாட்டுற் பவித்தவர் தூய ரவர்களுள்ளும்
மாசறு பஞ்சாக் கரவன் வதியா சூரினுற்ரோர்
தேசுறு தூய ரவருளுந் தூயர்சென் றேத்துநரே. (33)

ஏத்துநர் தம்மு ளிருந்துதன் பாதத்தை யேத்துவிக்கும்
சாத்துநர் தம்மு ளிருந்துதண் போதலர் சாத்துவிக்கும்
பாத்துநர் தம்மு ளிருந்துநட் போடிகல் பாத்துவிக்கும்
ஆத்தன்பஞ் சாக்கர வண்ண லருளு மருளிதுவே. (34)

இதுபுரி வேனென வொன்றனை மேற்கொண் டிடைவிடுக்கும்
மதுபுரி வேனென் றடுக்கு மயர்க்குமற் றுலுயிரிற்
கதுவிய தன்மை கரிசறுத் தாண்டபஞ் சாக்கரவன்
முதுநல முற்றுமுற் றுதுமுற் றின்புந் திளைத்திடுமே. (35)

திளைத்திடுந் தன்மையிற் றுணு யிருக்குந் திகழவருள்
விளைத்துமற் றேனை யிடங்களில் வேறு யிருக்கும்விண்ணின்
முளைத்தெழு வெண்மதிக் கண்ணியன் பஞ்சாக் கரவன்முன்னேன்
வளைத்தழும் பாளன்மெய்ம் மாதவர் போற்றிய மாதவனே. (36)

மாதவம் யாதும் புரிந்தறி யேன்வண் மலர்ப்பதத்துப்
போதலர் நீரும் பொழிந்தறி யேனெதிர் போதலுமே
வீததை சோலை விரைசூழ் துறைசைப்பஞ் சாக்கரவன்
தீதற வாண்ட விரகினை யென்னென்று செப்புவதே. (37)

செப்பற் கரியன சிந்தைக் கரியன சேர்பொருளொன்
றொப்பற் கரியன வுள்ளே விரவியொண் மாமதிபோல்
பப்புற்ற வாணவம் பாற்றி வருவன பண்பினர்க்கு
வைப்பிற் பொலிவன பஞ்சாக் கரவன் மலரடியே. (38)

அடியோ ரிரண்டி னுலகொரு மூன்று மடக்கியதால்
வடிவாளி வார்சிலை வையகந் தாங்கு மதுகையதான்
முடியா முதல்வன்பஞ் சாக்கர மீளி முழுமணித்தேர்ப்
படியோ ரிறையு முருளிட மில்லாப் பரப்பினதே. (39)

பரப்புற்ற தேர்க்கமை பாகனும் பாகற் பயந்தவனும்
இரப்புற்று நாடவெட் டாதிறந் தோங்கின வின்பவெள்ளம்
விருப்புற்ற வன்பர்க் கருளும்பஞ் சாக்கர மெய்ப்பொருடன்
குருப்பெற்ற வேணி முடியுங் குரைகழற் பாதமுமே. (40)

பாதங்க ணன்கும்வைத் தானவை நல்கும் பதங்கள்வைத்தான்
வேதங்க ணன்கும்வைத் தான்விரை யாக்கலி வீறவைத்தான்
பூதங்க ளாதிவைத் தான்புரை யாத புகர்மலத்தின்
ஏதங்கள் பாறவைத் தானெழிற் பஞ்சாக் கரவிறையே. (41)

இறைவீற் றிருந்துபஞ் சாக்கர நாத னிறைசெலுத்தும்
முறைநாடி னேனை முறைமுறை யாங்கொன் முகிழ்ப்பவற்றுண்
மறையா யிருப்பதொன் றின்றாக வெங்கும் வதிந்தறிந்து
பெறையா வருக்கு மவையவ ராலுய்க்கும் பெற்றியனே. (42)

பெற்றி யொருவர்க் கறிவரி யான்பெரு வள்ளன்மையை
உற்றறிந் தான்மற்றை வள்ளன்மை வள்ளன்மை யாயுறுமே
பற்றிக வின்றிப் பயன்விழை யாதுபஞ் சாக்கரன்போல்
முற்று மளிப்பவர் யார்முடி வானவர் தம்முளுமே. (43)

உள்ளும் புறமு மொருதன்மைக் காட்சியர் தாமுலகில்
நள்ளும் பரிசின ரேனும் வினைவழி நண்ணகிலார்
தெள்ளும் பெரும்புகழ்ப் பஞ்சாக் கரவன் றிருவடியை
விள்ளும் பரிசின ரெல்லாம் விடுத்தும் விடுக்கலரே. (44)

விடுக்கலர் பற்றினெ டார்வங் கதியை விரும்புகிலார்
தொடுக்கலர் பஞ்சாக் கரவன் பதத்துச்சொன் மாமலர்கள்
கொடுக்கல ராவி யுடல்பொரு ளாங்குக் கொழுஞ்சுவைத்தேன்
மடுக்கல ரன்பரைப் போனடிப் பார்க்கென் வருவதுவே. (45)

வருவதும் போவது மாயுழல் வீர்வம்மின் வந்தனிரேல்
தருநிதி சிந்தா மணிகாம தேனுவுந் தந்தருளும்
பொருவறு போக மெலாந்தரும் போக மெலாம்வெறுத்தால்
ஒருவரு முத்தியு நல்கும்பஞ் சாக்கர வொள்ளொளியே. (46)

ஒளிக்கு முயிர்களுக் குள்ளே மலத்தி னொளித்தவுயிர்க்
களிக்குந் தனுகர ணாதி யளித்த வவற்றொடிருள்
விளிக்கு முளைத்த வுயிரினைப் பஞ்சாக் கரவிமலன்
தெளிக்கும் பளிக்கி னிழல்போ லுடலந் திரிவிக்குமே. (47)

விக்கு ளிருமன் முயலகன் குட்டம்வெப் புப்பெருநோய்
தொக்கு வயிற்றுறு நோய்சூலை நோயொடு சூழ்ந்தடினும்
நக்கு நலத்தகு பஞ்சாக் கரவ னளினபதம்
புக்கு விடினங்க ணெல்லாமின் பாகப் பொலிதருமே. (48)

பொலிந்தன மன்னே தணியுந் தணிந்தன வேபொலியும்
கலந்தன மன்ற தணக்குந் தணந்தன வேகலவும்
சலந்தரு வையத் தியற்கை தனைக்குறித் தாழன்மினே
நலந்தரு பஞ்சாக் கரவனை நாடி நயமின்களே. (49)

கள்ளுண்ட வாளிச் சுவையுண்ட கார்முகக் காளையுடல்
விள்ளுண்ட கண்ணன்பஞ் சாக்கர நாதன் விரைமலர்த்தாள்
நள்ளுண்ட நெஞ்சுண் டவன்பெயர் பூண்டநன் னுவுமுண்டால்
எள்ளுண்ட வல்வினைக் கஞ்சுவ தின்றினி யெய்தினுமே. (50)

எய்தடு முப்புரத் தெண்ணிய மூவ ரொரிபிழைப்பச்
செய்தவன் பஞ்சாக் கரவன் றிருவடித் தாமரைக்கீழ்ப்
பெய்தடச் சூழ்ந்த பெயரா வினையைப் பிழைப்பித்துய்தி
வெய்தரு ளுந்திறத் தென்னினி வேறு விளம்புவதே. (51)

விளம்புவ தென்னினிப் பஞ்சாக் கரவன்வெல் பூங்கழற்றாள்
உளம்புகு வோர்கட் குறுவினை யாது முறுதுமெய்யே
களம்படு செந்தீக் கதுவி னிழலுடல் காயுங்கொலோ
அளம்படு புற்போ லணைந்துட னீங்கிய தாருயிரே. (52)

உயிர்தா முயிர்க்கு முடலினல் லாதின்பத் துன்பமொன்றும்
பயிலா பிறவுட லெங்கு மிருந்துமப் பண்பினவாற்
செயிர்தீர்ந்து பஞ்சாக் கரவன் றிருவடி சென்றுபற்றின்
மயரா ருடல மிருந்தும் பயனென் மருவுவதே. (53)

மருவுவ தொன்றை யரிதுபஞ் சாக்கர வான்பொருளின்
அருள்வழி யன்றி யொருவலு மொன்றை யரிதுமன்ற
ஒருவலு மொன்றைமற் றொன்றை யுறலுமெல் லாமவன்றன்
திருவடி யேயென்று சிந்திகண் டாய்மலந் தேய்ந்தறுமே. (54)

அற்றாலு மென்னை புறத்தே பயில்பொரு ளானவெலாம்
கற்றாலு மென்னை யரிதா கியகல்வி காசில்புகழ்
பெற்றாலு மென்னைபஞ் சாக்கர நாதன் பிறங்கருளில்
உற்றாலும் யானென தென்னுஞ் செருக்கொழி யாவிடினே. (55)

விடுக்குங் கணையெறு ழூர்தி மனைவி விலங்கலந்தோட்
படுக்குங் கலனு மொருபொரு ளேகொண்ட பண்ணவன்சீர்
கொடுக்குந் துறைசைப்பஞ் சாக்கர நாதன் குலப்புகழைத்
தொடுக்கும் பரிசுபெற் றாம்பெறு மாறின்று சூழ்பவமே. (56)

பவம்பல கோடி வருமாறு நாவிற் பயிற்றியிட்ட
அவம்பல கோடியும் பஞ்சாக் கரனைப் புகழ்ந்தறுத்தாம்
தவம்பல கோடிய சிந்தைய தாணினைந் தேதணந்தாம்
நிவந்தபல் கோடி யுடற்றீங் கிறைஞ்சுபு நீத்தனமே. (57)

நீத்தனங் காணி ணிகழுஞ் சுகமென தியானிலவப்
பாத்தனங் காணிற் படுவதொன் றில்லைபஞ் சாக்கரவன்
பூத்தசெந் தாமரைத் தாளுங் கரமும்புன் மூரனிலா
யாத்தசெவ் வாயு முகமுமெல் லாமின்பத் தேயெழுமே. (58)

எழுந்தது பஞ்சாக் கரவன் றிருவரு ளெங்குமதில்
விழுந்ததென் புல்லறி வாங்கே யருளாய் மிளிர்ந்தனவால்
அழுந்திய பாசமென் றெண்ணிய மாயை யருவினையும்
தழுந்தாம் வேறினி யில்லையின் பொன்றே தலைப்பட்டதே. (59)

பட்டது பாசமென் பாரது மாயும் படியறியார்
ஒட்டிய தாரரு ளென்பா ரஃதுற முண்மையெய்யார்
அட்டுல கெல்லா மளிக்கும்பஞ் சாக்கர வண்ணலருள்
முட்டறு ஞான முகிழா வுளம்படை மூர்க்கர்களே. (60)

மூர்க்கரைப் போல முதுமா தவர்க்கு முனிவுசெய்து
பார்க்குளெஞ் ஞான்றும் பருவரு வேனையும் பார்த்தருளாய்
கார்க்கதிர் தோகை யெனவடி யார்கள் கலந்தெதிர்நின்
றார்க்குந் துறைசைப்பஞ் சாக்கர நாத வருட்குருவே. (61)

குருமணி மோலித் துருவன் பிணித்த கொழுங்கயிற்றின்
ஒருவுதல் கோளுக் கிலெயெத் திசையி னுறினுமவ்வா
றருண்மணி யாகிய பஞ்சாக் கரவ வடியெனுநின்
திருவடி நீங்காத் திறம்யாங் கிருப்பினுஞ் செய்தருளே. (62)

அருணட மாடிய பஞ்சாக் கரவன்முன் பைந்தொழில்கொண்
டிருணட மாடிய வம்பல வாண னெனக்களித்த
திருநடங் காணிற் செயிரை விழுங்கித் திசைவிழுங்கி
உருநட மாடவெ னுள்ளம் விழுங்கி யுகந்ததுவே. (63)

உகந்தவ னெல்லாப் பொருட்கும்பஞ் சாக்கர வுத்தமனை
அகந்தனிற் சற்றே யடுப்பிற் கதிகளெல் லாமடுப்பர்
இகந்திடிற் சற்றே யெழுநான்கு கோடி நரகும்வல்லே
புகுந்துபல் லூழி பெயர்ந்து மெழாது புழுங்குவரே. (64)

புழுங்கும் பெரும்பழி வந்தாலு மென்னின்பம் போர்த்துளத்தை
விழுங்கும் பெரும்புகழ் வந்தாலு மென்வினைப் பாலதென்றும்
அழுங்கும் படியதன் றேயருட் பஞ்சாக் கரவன்பதத்
தொழுங்கும் பெருநிலைக் கூறவற் றுவில்லை யுற்றுநில்லே. (65)

நில்லென்று செந்தீ நிரையி னிறுவினு நீடுசெல்லல்
கல்லென்று தீய திறத்தி னெடுப்பினுங் காய்ந்துநயந்
தல்லொன்றி வாளாங் கலையாது பஞ்சாக் கரவனருள்
புல்லொன்று பாரங் கழிப்பதென் றேயின்பம் பூணுகவே. (66)

பூணுங் கடவுளைப் பஞ்சாக் கரவனைப் பூண்டுகொண்டு
காணுங் கடனுல் வருவினை மாய்க்குங் கடனதன்றி
மாணுங் கரிசுடற் கேன்ற வினையை மறுப்பவுழந்
தேணுங் கெடேன்மின் குறுகா தொழியா வெறுழுடைத்தே. (67)

உடைத்தைங் கலையும் பரானந்த வின்ப முறப்பயிற்றி
விடைத்தங்கு மேவு மொழியா வினையின் விறன்முருக்கித்
துடைத்தங் கருளும்பஞ் சாக்கர நாதன் சுடர்ப்பதத்துள்
அடைத்தங் கிருப்ப வறியா துளமயல் விட்டனவே. (68)

விட்டனம் யானென தென்னுஞ் செருக்கை விடுத்தலொடும்
கெட்டன மத்தகு கேட்டினை யேகிளர் வாழ்க்கையெனப்
பட்டனம் பஞ்சாக் கரவன் பதமலர்ப் பூசனையே
தொட்டன மிந்தத் தொடர்பினை யாவர் துளக்குநரே. (69)

துளக்கும் வினையுட னிற்பத் தொகுமுயிர் வாங்கலெவ்வா
றளக்கற் கரியபஞ் சாக்கர நாதனென் றையுறன்மின்
வளக்குஞ் சரந்தன் வயிற்றுட் செறிவினை வாங்கிக்கொண்டு
விளக்கட் கனிதன் புறம்விடல் கண்டன மேதினிக்கே. (70)

மேதினி மீதும் விரவுவ தீவினை யேன்சிரத்தும்
போதுவ வீதென்ன வற்புதம் போக்கின் மறைமுடிவும்
மாதவர் நெஞ்சு மலையான் மடந்தை வளைக்கரமும்
நீதியிற் றைவரும் பஞ்சாக் கரவ னெடும்பதமே. (71)

பதந்தர வல்லவன் பஞ்சாக் கரவன் பசுபதிநல்
இதந்தரு மீச னிறையெட் டுருவத்த னெண்குணத்தான்
சுதந்திர முள்ளவ னென்றுசொன் மாத்திரை சூழ்ந்தவர்க்கும்
கதந்தரு வல்வினை காவத நூறு கடந்திறுமே. (72)

இறுகின்ற மாலைய தாக்கை யிதுதனைப் பேணிக்கொண்டே
தெறுகின்ற வல்வினை வாயழி வேனைச்சென் றேத்துநர்பால்
உறுகின்ற பஞ்சாக் கரவனவ் வூழ்வினை தன்னடியால்
அறுகின்ற தாக்கியஞ் சேலிங்கண் வாவென் றருளினனே. (73)

அருள்கின்ற காலமெஞ் ஞான்றும்பஞ் சாக்கர வாண்டகைக்காம்
இருள்கின்ற வாணவத் தேகிடந் தெய்த்தின்பத் துன்பந்துய்த்துத்
தெருள்கின் றிலாவுயிர்க் கேசென்று சேரும் பருவங்கண்டாய்
மருள்கின்ற வன்னெஞ்ச மேமதி யாயின்று வாய்த்திடுமே. (74)

வாய்த்த துடலிது பஞ்சாக் கரவன் மலர்ப்பதத்தை
ஏத்துத லாலென் றிறுமாந் திருந்தவெ னெண்ணமெல்லாம்
தீத்தெறு பஞ்சாய்ச் சிதையப் பலகதி சென்றுசென்று
பூத்திடு மாறு புரட்டிய தாற்புல் வினையடுத்தே. (75)

அடுத்த வினைக்கினி யஞ்சேன்பஞ் சாக்கர வாரியன்முன்
விடுத்திருண் மூழ்கும் பிழையிற் பருவம் விளைத்துடலம்
கொடுத்தங்கும் விட்டிது காறும் விளைத்தகுற் றங்களுநீத்
தெடுத்தவ னின்னு மெடுப்பனென் றுண்மையை யெண்ணினனே.

எண்ண மெலாந்த னிணையடி யேறவைத் தானியம்பும்
வண்ண மெலாந்தன் பெயராக வைத்தனன் வாருடலிற்
பண்ண லெலாந்தன் பணியாக வைத்தனன் பண்ணவர்சூழ்
அண்ணல்பஞ் சாக்கர வேந்த லருளுமி தற்புதமே. (77)

அற்புத மேனிய னுந்திருச் சிற்றம் பலவனறற்
புற்புதம் போலுருக் கொண்டபஞ் சாக்கர பூரணனைச்
சிற்பர மென்றுள்ள வாறறி யார்செயிர் தீர்தொழிலந்
துற்பவ மாக்கு முருவத்தி னுண்மையு முன்னலரே. (78)

உன்னிய காலை யுறவா யினிக்குஞ்சற் றேயயர்ப்பின்
அன்னிய மாக வகன்றே கவற்று மனனியமாய்
மன்னிய பஞ்சாக் கரவன் வயங்கரு ளோங்கியக்காற்
பொன்னியல் காலைப் புரையிருள் போன்மலம் பொன்றுவதே. ()

பொன்றுஞ்சு முன்றி லுடையவ ராகப் பொலிதரினும்
மின்றுஞ்சு வேலரை யஞ்சுவர் வேலர் வெருவுவாற்
கொன்றுஞ்சு தேவரைத் தேவரு மஞ்சுவர் கோகனதத்
தென்றுஞ்சு பஞ்சாக் கரவன் றிருவடித் தேசினர்க்கே. (80)

தேசிக நாதன் சிவஞான தேவன்செங் கைத்தலமுன்
வீசிநின் றாடிய வம்பல வாணன் வியனுலகம்
பேசிய பஞ்சாக் கரவன் பிறங்கருட் டாண்மலரைக்
கூசிநின் றேத்திய மாதவத் தார்க்கென் குறையுளதே. (81)

குறையுண்ட நெஞ்சும் பழியுண்ட செய்கையுங் குற்றமெலாம்
உறையுண்ட வாக்கு மெனக்களித் தானுற் றுளாரெவர்க்கும்
நிறையுண்ட வாக்கும் புகழுண்ட செய்கையு நீடுமின்பப்
பொறையுண்ட நெஞ்சு மளித்தான்பஞ் சாக்கர பூரணனே. (82)

பூரணன் பஞ்சாக் கரவனென் செய்யும் புலைநெஞ்சமே
ஆரண மார்க்கம் விடுத்தே யரவக லல்குனல்லார்
வாரணி கொங்கை முயக்கே யமர்ந்து வருந்திடும்பைக்
காரண மேதொகுத் தாயது கூட்டுங் கடனவற்கே. (83)

அவனென் றுலகம் புகழும்பஞ் சாக்கர வாண்டகையை
எவனென்று முன்னி யிகந்தனை யாலெ னிழுதைநெஞ்சே
பவன்றவன் சங்கரன் பார்ப்பதி பாகன் பரன்சிவனும்
உவனென்று தேறி யொழியா யொழியா வுறுபகையே. (84)

உறுபகை யாளர் துவன்றினு நட்பின ரோங்கினுமென்
முறுகிய வின்ப மடுப்பதுண் டேற்பகை யான்முருக்கப்
பெறுவதொன் றில்லையின் னுங்குள தேற்பெய ராதுறவால்
நிறுவவு நீக்கவும் வல்லன்பஞ் சாக்கர நின்மலனே. (85)

நின்மலன் பேரறி வாளன்பஞ் சாக்கர நிர்க்குணன்மற்
றன்மலத் தாழ்புல் லறிவுடை யேனுட னுயமர்ந்து
தன்மலர்ப் பாதந் தலைத்தந்துந் தாழ்விலன் சார்களங்க
வின்மதி வாழும் வெளிக்கென்னை தாழ்வு விரவுவதே. (86)

விரவிய வான்வளி தீவிரி நீர்வியன் பார்வையாய்ப்
பரவிய பான்மதி யாய்க்கதிர் கால்பகல் வானவனுய்ப்
புரவிய லாருயி ராய்நின்ற பஞ்சாக் கரப்பொருளைக்
கரவியல் சீரருண் மாறுது காணுங் கடனரிதே. (87)

அரிதுதன் பாதத் தடைவா ருயிர்க்கென வன்றுதொட்டுக்
கரிசறு மூர்த்தி தலந்தீர்த்த மாயமர் காரணனை
விரிபுகழ்ப் பஞ்சாக் கரவனை மெய்யன்பி னுலுளத்தே
பரிபவம் பெற்றார் பெறுர்மலந் தான்செய் பரிபவமே. (88)

பவமெழு கோடி யெடுப்பினு மென்னைபஞ் சாக்கரவன்
நவநவ மாகப் புணருந் தொறுமின்ப நல்குகின்ற
தவமலி யிப்பவம் போல்வாய்ப் புரினிந்தத் தன்மையின்றி
அவமுறி னிந்தப் பவமுங் கடுக வவிதனன்றே. (89)

நன்றே யடுப்ப தருளிற் கலந்த நலத்தவர்க்கும்
இன்றே யிறந்த பவங்களி னீட்டு மிருவினையுட்
சென்றே பயப்ப வெவையவை பஞ்சாக் கரச்செம்மறுன்
நின்றே புணர்த்தும் புணர்த்தினு மேரு நிலைவைக்குமே. (90)

வைப்பா யிருக்கும்பஞ் சாக்கர நாதன் மலர்ப்பதமே
துப்பா யழுந்தின் மலைநேர் வினையு மெரித்துரும்பர்
ஒப்பா யவியும் பதைப்பிற் கடுகு முயர்மலையாம்
இப்பா லனநெஞ்ச மேநினக் காம்வழி யெய்துகவே. (91)

எய்துவ திங்கிடை யொன்றில்லை பஞ்சாக் கரவிறைவன்
உய்திற நாடிமுன் செய்வினை யூட்டி யொழிக்குங்கண்டாய்
நைதிறந் தீவினைக் கெண்ணலு நல்லதென் றுன்றனையே
செய்திற நாடலும் வேண்டா வவனடி சிந்திநெஞ்சே. (92)

நெஞ்சே நினக்கு நெடும்பகை நீயந் நிலையறியா
தஞ்சே லெனவருள் பஞ்சாக் கரவ னவையவரால்
எஞ்சாது நீமுன்ன ரீட்டிய கூட்டி யிடும்பொழுது
நஞ்சே யெனமுன் னிலைபகை யாகவு நாடினையே. (93)

நாடுவ தெல்லா மருளும்பஞ் சாக்கர னற்பதமே
கூடுவ தெல்லா மவனடி யார்தங் குழாத்திடையே
வீடுவ தெல்லா மறிவிலர் சேர்ச்சியென் றுய்விடினே
நீடுறும் வேறின்ப முண்டேனும் வேண்டா நெடுநிலத்தே. (94)

நிலங்கா லகழ்ந்து நெடுமா லறியா நிகரில்பதம்
மலங்கா லறுக்கும்பஞ் சாக்கர நாதன் மலியருளால்
நலங்கா முறுவெனக் கெண்மையின் முற்றுநன் றுய்த்தளித்தான்
கலங்காமை யின்மையின் மற்றதற் கேற்குங் கடனிலனே. (95)

இலம்பட லாவது பஞ்சாக் கரவ னெழிலருளில்
நலம்புரி வோர்க்குல கத்துறு செல்வங்க ணண்ணுவதே
குலம்புரி செல்வங்க ளாவன கோதி லடியவர்க்குச்
சலம்புரி வையகத் தாறிலம் பாடு தழைப்பனவே. (96)

தழைக்கின்ற போதி வனமுஞ்செந் தாடொழு காலமிதென்
றழைக்கின்ற வன்பர்கள் சோடையுங் கண்டா ரகமுழுதும்
குழைக்கின்ற பஞ்சாக் கரவன்மெய்க் கோலமுங் கோதிறவம்
இழைக்கின்ற சூழலு மென்பன நீங்கா திருப்பனவே. (97)

இருப்பன நெஞ்சன்பல் லூழியெல் லாம்பெயர்ந் தாலுமெம்பால்
விருப்பின ஞாத லரிதெனப் பஞ்சாக் கரவிமலன்
பொருப்பினை வாங்கிற் றெனவெனை யாண்ட புதுமையினாற்
கருப்படு மாறினிச் செல்லவொட் டானருட் காப்பிடுமே. (98)

இடுவதெல் லாமவன் றன்குண மென்குண மேற்றல்வினை
யடுவதெல் லாமவன் றன்குண மென்குண மாக்கன்மெய்ம்மை
தொடுவதெல் லாமவன் றன்குண மென்குணந் தோல்வியிவை
படுவன வாயினும் பஞ்சாக் கரவன் பரிவுளனே. (99)

உளநின்று காணி னொளிப்பனங் கேயெ னுளமொளிப்பின்
வெளிநின்று காணப் படுவன் விரிகடற் றெள்ளமிழ்தும்
தெளிவுண்ட தேறலுங் கைப்பவென் சிந்தை யெலாமினிப்பன்
பளகறுத் தாண்டபஞ் சாக்கர நாத பசுபதியே. (100)

திருச்சிற்றம்பலம்.

பஞ்சாக்கரதேசிகர் அந்தாதி முற்றியது.

---

ஸ்ரீ மெய்கண்டதேவர் மிளிர்கழல் வெல்க.
ஸ்ரீ மாதவச் சிவஞானயோகிகள் மலரடி வாழ்க.
ஸ்ரீ கச்சியப்பமுனிவரர் கழலடி வாழ்க.

திருச்சிற்றம்பலம்.

---

## பஞ்சாக்கரதேசிகரந்தாதி

## குறிப்புரை.

1. பதி பசு பாசத்தை-அநாதி நித்தியப்பொருள்களாகிய பதி பசு பாச மென்னும் மூன்றனையும். பாசம் பசு பதி ஆக்கி - ஐந்தொழி லியற்றுங்கால் எய்திய சகலாவஸ்தையில் பாசமும் பசுவும் பதியுமா கிய முறையில் முன்பின்னாக நிற்கச்செய்து. பசு - ஆன்மா. ஓரீஇ- அந்த நிலையின் நீங்கி. பதி - பதிநெறியில். ஆக - ஒழுகியவழி. பசு - ஆன்மாவை. பதி ஆக்கி - பதியின் தன்மை எய்தச் செய்து (தூயதாக்கி). பின்னும் பயிற்றி - அது சீவன்முத்தி நிலையில் நிற் குங்காறும் அந்நிலையில் நழுவாதிருக்கச் செய்து. (இவ்வகையால்) தான் - அவ்வான்மா. பதியென ஆய்ப் பயிலும் - பதிபோலச் சிவத்தன்மை முழுதும் விளங்கப் பெற்றுப் பயிலுதற்கு ஏதுவாகிய. திருவாவடுதுறைசைப் பதி - திருவாவடுதுறை என்னும் திருப்பதி யில். வளர்-எழுந்தருளியிருக்கின்ற. பஞ்சாக்கரவனை-ஸ்ரீ பஞ்சாக் கர தேசிகமூர்த்தியை. என் சொல்லிப் பாடுதும் - எவ் வியல்பின னென்று சொல்லிப் பாடுதும் என்பதாம்.

முன்பின்னாக நிற்கச்செய்தலாவது - பாசம் முற்படப் புலப் பட்டும், பசு அதனால் தொழிற்பட்டும், பதி தொழிற்படுத்தியும் நிற்குமாறு செய்தல். ஆக - காரணப்பொருட்டு. பாசம் பசு பதி யாக்குதலாவது-கேவலநிலையினின்றும் சகலநிலை யெய்துவித்தல். பதி பசுவாக என்றது ஆன்மாப் பதிநெறியில் ஒழுகிநிற்றலை யுணர்த்திற்று. பசு பதி யாக்கி என்புழி ஆக்கச் சொல் அத்துவ சுத்தியால் ஆன்மாவைத் தூயனாக்கிப் பதியின்றன்மை யெய்துவித் தலை யுணர்த்திற்று. தான் பதி யென ஆய் என்புழிஆக்கச் சொல் ஆன்மாப் பரமுத்தியில் சிவானந்தாநுபவ நிலையில் உறைத்து நிற்றலை உணர்த்திற்று.

ஆக்கி ஆக்கிப் பயிற்றித் திருவாவடுதுறைசைப் பதிவளர் பஞ்சாக்கரவ னெனவும், ஆய்ப் பயிலும் திருவாவடுதுறைசைப் பதிவளர் பஞ்சாக்கரவ னெனவும் முடிக்க.

2. படர்தல் - நினைத்தல். அன்னவன் பாதம் கூடுவது என்க. இன்பம் நீடுவது. நிகழ் செயல் - அவற்றிற்கு நிகழும் செயல்கள்.

3. ஒன்று இல்லையாக - தனக்கென உருவம் ஒன்றும் இல்லையாகவும். உயிர் உளதாக - உயிரென்பது ஒன்று இருப்பதை யுத்தேசித்து. தென்றில்லையாடி யாகிய பஞ்சாக்கரவன் உருவங் கொண்டு சென்று நின்று. இல்லை ஆதி - தற்போத முனைப்பு இல்லையாவாயாக. நின்றயான் - தற்போத முனைப்புடன் நின்ற யான். சென்று நின்று இறலும் - அவன் உபதேசித்த நெறிவழிச் சென்று நின்று தற்போதமுனைப்பு ஒழிதலும். சொல்லா ஒன்று- சிவானந்தம். ஒன்றில்லையாக என்பதற்கு அத்துவிதச் சொற்கு ஒன்றென்னும் பொருளில்லையாம்படி என்று பொருள் கோடலு மாம்.

4. பாசம் சடமானதால், பாசவறிவு என்பதுயாது? உயிர் ஆணவம் நீங்கியவழி நானென்று கருதுமாறின்மையின், பசு வறிவு என்பது யாது? என்றும் ஒருநிலையில் நின்று உணர்த்துவது பதியறிவு ஒன்றேயாம். இங்ஙனமாக அப்பதியறிவைப் பாச ஞானம் பசுஞானம் என்பவற்றோடு ஒருங்கு சேர்த்துப் பதிஞான மென்பது யாது? அருளவேண்டும் என்பதாம். இந்த ஞானத் தின் இயல்புகள் சிவஞானபாடியத்திற் கூறப்பட்டன.

5. உயிர்க்கு அநுக்கிரகம் செய்வது சிவமேயன்றி ஏனைஉயிர் களல்ல என்பதை யாரும் தெரிந்து பிழைக்க. பெருவான்பொருள் - சிவம். அப்பொருட்கு வாசகம் ஸ்ரீ பஞ்சாக்ஷரம். அருவாயும் அருவுருவாயும் உருவாயும் அவைதானெனவும் வந்ததேயன்றி ஸ்ரீ பஞ்சாக்ஷர தேசிக மூர்த்தியாகவும் எளிவந்த வாய்மை என்க.

6. தாழ்குழல் நோக்கி உலை மெழுகு போல உருகும். பமரம் - வண்டு: பிரமரமென்னும் வடமொழித்திரிவு. தணப்பற- நீக்கமின்றி. தேறலைப் பருகும். திருக்கு - குற்றம்.

7. ஆர்வம் - பேரன்பு. மெய் - சிவமாக.

8. சஞ்சிதம் - அநுபவிக்க வாராமற் குவிந்து கிடக்கும் கன்மத்தொகுதி. உடலிற் புல்கிய இன்பத் துன்பங்கள்-பிராரப்த கன்ம பலன்கள். சஞ்சித வினைத்தொகுதியைத் தன்றிரு நோக்கா லெரித்தலும், பிராரப்தவினைப்பயனைத் தான் ஏற்றுக்கோடலும் ஆகிய இவற்றின்விரிவைச் சிவஞான மாபாடியத்திற் காண்க. கைம்மாறு நல்குதற்குக் கண்டிலனென்க. பூப்பது தொழின் மேனின்றது.

9. நலத் தகை - அன்மொழித்தொகை: நலத் தகையாகிய பஞ்சாக்கர தேவன். அவன் பணித்திடுங்கால் எனக்கு மெல்குந் திறமுள்ளது. மெல்குதல் - மென்மையாதல். ஒல்குதல் - குழையும். யான்எனது - அகங்கார மமகாரம். ஓடியது தனித் தனி கூட்டுக.

10. உற்றது - சகசமாயுற்றதாகிய. ஆணவம் ஓடியது. பாசமாகிய கன்மங்கள். பல்வகைத்தோற்றம் வாடின - அண்டச முதலாயின ஒழிந்தன. தோற்றம் இன்மையின் அயன் மால் முதலானோர் செய்கை வீடினர். நகைக்கு - உருபுமயக்கம்.

11. எதிர்ந்தோர்-எதிர்ப்பட்டோர். நவை-குற்றம். துகைத் தல் - கெடுத்தல். தொக்கு - சம்பந்தம். தகைத்தல் - தடுத்தல். உகைத்தல் - செலுத்தல். துறைசையில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ பஞ்சாக்கர தேசிக மூர்த்தியின் திருவுருவை வியந்தவாறு.

12. தமது திருவடித்தாமரைகளைத் தொழுதால் ஸ்ரீ பஞ் சாக்கர தேசிக மூர்த்திகள் இயமனை நம்பாற் சாரவொட்டார். அழற்காலன் - அழலைப்போலுங் காலன். தநு - உடல். புழல் - உட்டுளையுடைய. கால் - நாளம். அரவிந்தப் புத்தேள்-பிரமன். இங்ஙனம் படைப்புக் கடவுட்கும் அழித்தற் கடவுட்கும் தத்தஞ் செயல் செய்ய இடமில்லையாக, திருமாற்கும் தன்செயல் செய்ய

இடமில்லையென்பதாம். கானம் - பாட்டு. ஆயன் - கண்ணன். ஸ்ரீ பஞ்சாக்கர தேசிக மூர்த்திகள் அவ்விதஞ் செய்யும் தன்மை யுடையார் என்க.

**13.** கை யம்பு ஈண்டுத் திருமால். அப் பிரான் உலகுண்டது கிருஷ்ணவதார நிகழ்ச்சி. கண்மலர் ஒன்று - நெற்றி விழி. ஐ அம்பு வேளை உண்டது - மன்மதனை உண்டது. அம்பு - நீர். எய்யம் - அறியோம். "எய்யாமையே அறியாமை" என்பது தொல்காப்பியம். அம்பு கண் என்பன ஒவ்வொன்றே யுண்டன: திருவடியோ வணங்கிய அன்பர் பிறவற்றைச் சிறிதுமறியோம் என்னுமாறு எல்லாவற்றையும் எடுத்து விழுங்கியதென்க.

**14.** ஒளி அறல் - ஒளியின் நீக்கம். மிடைதல்-நெருங்குதல். ஒழுங்கி - ஒழுங்குபட்டு. உள்ளத்து ஒழிவு - தற்போத நீக்கம். ஓங்கிருள்-ஆணவம். மாக்கள் சிந்தையுட் சார்ந்துநின்ற பொங்கிய இருளாதலின் ஓங்கிருளெனப்பட்டது. மழுங்குதல் - கூரில்லா தொழிதல்: அஃதாவது, அது நித்தப்பொருளாயினும் கேடு விளை யாதிருத்தல். எஞ்ஞான்றும் அவனைப் புணர்தலன்றி வேறு புழுங்கக்கடவது யாதுமில்லை.

**15.** அன்றுதல் - பகைத்தல். நீத்தம்-கங்கைநீர்ப் பெருக்கு. சடைக்கண் நீத்தமடுத்தான். அடல்-கொல்லுதல். ஓதை-ஓசை. செவிக்கண் மடுத்தான். களத்தில் ஆலத்தை மடுத்தான். அவை போல என்னையும் கொடிய பொருளாகக் கருதித் திருவடிக்கண் மடுத்தானெனச் சமற்காரமாகக் கூறினர்.

**16.** கொடுக்கும் அவன் - தவப்பயனைக் கொடுக்கும் அவ னென்க, 'செய்வானும் செய்வினையும் சேர்பயனும் சேர்ப்பானும்' கூறியவாறு. தொழிற்கு வரும் நவமா உரு - நவந்தரு பேதம். பவம் - பிறவி. பவம் - திருவுருத்தோற்றம். அத்திருவுருவி னிடத்து அன்பு செலுத்தாதிருப்பின் யாரும் அப்பெருமானை அறியாரென்றவாறு.

17. யான் பஞ்சாக்கரவன் பதத்திடை இருந்திடின் மலமும் சேட்டைபுரியாது இருந்திடும்: சற்றுத் தற்போதம் எழின் மலமும் உடனே எழுந்து நீ எனக்கு விருந்தென்று சொல்லித் தன்வாய்ப் பெய்யும். அத்துன்பங்கண்டு மீட்டும் அவனடிக்கீழ் இராமல் ஒழியின், ஐயோ எல்லாத் துன்பங்களும் என்பாற் பொருந்திடும். ஆதலின், அப்பெருமானது திருநாமத்தை ஓதுக. ஓதுவதென்பது 'கொள்ளப்படாது மறப்ப தறிவிலென் கூற்றுக்களே' என்பது போல நின்றது.

18. ஓதுவது - ஓதப்படுவது. மறையின்மீது வதிவது - வேதத்தின் நடுநாயகமா யிருப்பது, நட்பையும் இகலையும் விளக்கு வது. நீங்குவதும் பின் புணர்வதும் முன்பு சேர்ந்த மயக்கத்தை யொழிப்பதும் அது நீங்கியவழி எஞ்சி நிற்பதுமாகிய வெல்லாம் அவன் பெயரே என்க. இது ஸ்ரீ பஞ்சாக்கர தேசிக மூர்த்திகள் திருநாமப் பொருளை விளக்கியவாறு.

19. பூங்கழற்றுணை கருதிடும் என்னைத் தன்னுள் இருத்தும்: மலம் கதிப்பின் என்னோடு பொருதலைச் செய்யும் போகப் புணர்ப் பா யிருக்கும். புரை - சிறப்பு. இருது இடு நாமம் - பருவம். தவத்தால் பருவமடையாதவர்கட்குக் கழற்றுணை இருளாயே இருக்கும். அருள் விருதினையுடைய.

20. அணையா - தன்னைச் சேராத. அணைப்பான்-பானீற்று வினையெச்சம். பிறகே செல்லும் - தன்பின் செல்லுகின்ற. புணை - மரக்கலம். நெஞ்சினை நோக்கிக் கூறியவாறு.

21. அங்கே - நினைத்த அவ்விடத்தே. செஞ்சேவடி-மிகச் சிவந்த திருவடி: 'செஞ்செவ்வே' ளென்றாற் போல. இகந்து - நீங்கி. புலனைச் சென்று பற்றி. சேறல்-செல்லுதல். நயத்தல்- மகிழ்தல். நெஞ்சே! நீ யுனக்கு உறுதியின்னதென்பதனை யறிந்திலை போலும்.

**22.** நெஞ்சே நல்லன வந்தால் மகிழ்வாய்: நல்லன வல்லா தனவற்றை நின் தீவினைக்குப் பயனாக அவன் கொடுத்தால் நடுங்குவாய் நீ செய்த வினைக்கீடாக உள்ளதை அருள்புரியும் பஞ்சாக்கர மூர்த்தியோடு இயைந்து உடலாயிருந்து வியந்து அவை தாக்காது இருக்க அறியாமல் மகிழவும் பனிக்கவும் அறிந்த நின் பண்பு நன்றாயிருக்கின்றது.

**23.** அளறு - நரகம். நரகத்திற்கு இரையாய் இருந்தேன். அற்பரைப் பொருந்துவேன். திருந்தேன்-வினைப்பெயர். மருந்து - அமிர்தம்.

**24.** எறும் - வலிமை. பகடூர்தி - இயமன். குறுகார் - அடையார். கதமலை - யானை: அன்மொழித்தொகை. மதவிழி- வலியவிழி. திருவடி இயமனையும், செங்கை பிரமனையும், நுதல் விழி மன்மதனையும் ஒறுத்தமையின் அவற்றைத் தரிசித்தோர் முறையே இயமபுரம் சேராமையும், பிரமன் கையால் எழுதப்படா மையும், மன்மதபாணம் வருத்தாமையும் பெறுவரெனப்பட்டது.

**25.** கணை - திருமால். அது உண்ட தேர் - கீழும் மேலு முள்ள உலகங்கள். இருள் உண்ணும் ஆழி - சூரிய சந்திரர். தேரைப் பரிக்கும் சிலை - மகாமேரு. வலவன் - பிரமன். ஏங்க- நம்மால் ஆவது யாதுமில்லையே யென எங்குமாறு. அசித்தது - சிரித்தது.

**26.** வன்பு - வலிமை.

**27.** மதிப்பிக்கும் - நினைக்கும்படி செய்யும். அன்பை உதிப் பிக்கு மென்க. கதிப்பிக்கும் - கதியிற் செல்லுமாறு செய்யும். என்னைப் பதிப்பிக்கும்.

**28.** கொண்டல் - மேகம். மண்டலம் - வட்டம். என்னை மீட்டும் உமிழ்வின்றி உண்டன.

29. நளினம்-செந்தாமரை மலர். கேவல நிலையிற் சிவத்தை யறியாது மலத்தில் அழுந்திக் கிடந்தது போலச் சுத்த நிலையின் மலத்தை யறியாது சிவத்தில் அழுந்திக்கிடந்தமை கூறியவாறு.

30. அடுத்தனம் - அடைந்தோம். எனது என்னும் மமகாரத்தைக் கெடுத்து. கெடினல்லது மலமும் விடுமோ அருளும் அண்முமோ.

31. அல் - இருள். எல் - ஒளி. துவந்துவம் - இன்பத் துன்பங்கள். ஞானம் இரண்டு - அபர பர ஞானங்கள்.

32. சொல்ல நினைய இறைஞ்ச-திரிகாரணத்தானும் வழிபட. துகட்கிழங்கு-இங்கே ஆணவமாகிய கிழங்கு. கல்லுதல்-தோண்டுதல். நாதன் அருள்வதின் என்க. காசினிக்கு-உருபுமயக்கம்.

33. ஆசு - குற்றம். இறுதல் - ஒழியும். வதிதல் - எழுந்தருளியிருத்தல். அரசூர் - திருவாவடுதுறை.

34. பாத்துநர் - பகுத்துணர்வோர். ஆத்தன்-வடமொழித் திரிவு. அவனன்றி யாதும் நிகழா தென்பது உணர்த்தியவாறு.

35. உயிரின் தன்மை கூறியவாறு. ஒன்றனைச் செய்யத் தொடங்கி இடையில் அதனை விடுத்து வேறொன்றனைச் செய்யத் தொடங்கும்: அதனையும் மறந்துவிடும். இவ்வித உயிர் ஸ்ரீ பஞ்சாக்கரநாதன் முதுநலம் உற்றாலும் முடிவுறக் கொள்ளாது. ஆயினும் பூர்ண வின்பத்தை யனுபவிக்கும். முதுநலம் - ஈண்டு ஆனந்தம்.

36. அருள் விளைத்துத் தாணுயிருக்கும் என்க. வளைத் தழும்பாளன் என்பது காஞ்சிப் புராணத்தா லறியப்படுவது.

37. வீ - பூ. ததைதல் - நெருங்குதல். விரகு - உபாயம்.

38. மாமதிபோற் பப்புற்ற வாணவம் பாற்றி என்பதை 'மன்னுமிருளே மதிதுரந்த வாறு' எனவரும் வெண்பாவா னறிக. வைப்பு - நிக்ஷேபநிதி.

39. வடிவாளி அடக்கியது. மதுகை - வலிமை, சிலை-வில்: ஈண்டு மேரு. மீளி - வலியோன், படி - பூமி, தோாகிய படி என்க.

40. பாகன் - பிரமன். பாகற் பயந்தவன்-திருமால். குரு-நிறம். முடியும் பாதமும் அவ்விருவரும் இரப்புற்று நாடவும் எட்டாது கடந்து உயர்ந்தன என்க. அவ்விருவரும் அகங்காரத்தால் நாடத்தொடங்கினராதலின் கண்டிலரென்பது. 'இன்பவெள்ளம் விருப்புற்ற அன்பர்க் கருளும் பஞ்சாக்கர மெய்ப்பொருள்' என்பதனுற் பெறப்படும்.

41. பாதங்கள் நான்கு - சரியாதி. பதங்கள்நான்கு - சாலோகாதி. வேதங்கள் நான்கு - இருக்காதி. விரையாக்கலி - ஆணை. பூதங்களாதி - பூத முதலாகிய தத்துவங்கள். புரையாத-இழிந்த. புகர் மலம் - குற்றமாகிய ஆணவமலம். ஏதங்கள் - கேடுகள்.

42. இறை - இறைமை. பஞ்சாக்கரநாதன் அரசு செலுத்தும் முறையை நாடின் ஏனைய முறையனைத்தும் முறையாதலில்லை. முகிழ்ப்ப - இனித் தோன்றுவன: அவை பிராரத்தம்.

43. முற்செய்யுளின் இறைமைகூறி இச்செய்யுளின் வள்ளன்மை கூறுகின்ருர். பற்று இகல் - விருப்பு வெறுப்பு. விழையாது - விரும்பாமல்.

44. உள்ளும் புறமும் ஒருதன்மைக் காட்சியர் - சிவஞானிகள். உலகில் நள்ளும் - உலகத்திற் பொருந்தியிருக்கும். விள்ளுதல் - நீங்குதல். பரிசு - தன்மை. பஞ்சாக்கரவன் றிருவடியை அடைந்த சீவன் முத்தர் உலகியலிற் பொருந்தி நின்ருலும் அவர்

வினைவழி நண்ணகிலார்: அவன் திருவடியை அடையாத ஏனையோர் எல்லாம் விடுத்தனராயினும் வினைவழி விடுக்கலர். 'உள்ளும் புறமு மொருதன்மைக் காட்சியருக் - கெள்ளுந் திறமேது மில்' என்பது திருவருட்பயன்.

**45.** ஆர்வம் - கண்ட பொருள்மேற் செல்லும் பற்றுள்ளம். பொருள் என்பது ஈண்டு வினை.

**46.** வருதல் - பிறத்தல். போதல் - இறத்தல். இவை இப் பொருட்டாதலைப் 'போக்கு வரவு புரிய' என்பதனான் அறிக, தரு - கற்பதரு. நிதி - சங்கநிதி முதலியன. பொரு - உவமை. ஒருவு அரும் முத்தி - பிரிதல் இல்லாத வீடு.

**47.** கேவலம் சகலம் சுத்தமென்னும் அவத்தை மூன்றினும் பஞ்சாக்கர விமலன் உயிர்கட்கு அருள்புரியுமாறு கூறுகின்றது இச்செய்யுள். உளைத்த - வருத்திய. தெளிக்கும் - தெளிவிக்கும்.

**48.** விக்குண் முதலிய நோய்கள் சூழ்ந்து வருந்தினும் நக்குப் பஞ்சாக்கரவன் திருவடி புகின் அவை யெல்லாம் இன்பமாகப் பொலியும்.

**49.** மன்ற - நிச்சயமாக: 'மன்றவென் கிளவி தேற்றஞ் செய்யும்' என்பது தொல்காப்பியம். கலவும் - சேரும். சலம் - வஞ்சம். உலகியல் கூறித் தெருட்டியவாறு.

**50.** கள்ளுண்ட வாளி - மலர். சுவை யுண்ட கார்முகம் - கரும்பு. அவற்றைக் கைக்கொண்ட காளை - மன்மதன். அவனது உடலை விள்ளுண்ட கண்ணனுகிய பஞ்சாக்கர நாதன். வினைக்கு அஞ்சாமைக்குக் காரணம் கூறியவாறு.

**51.** எண்ணிய மூவர்-சுபுத்தி, சுசீலன், சுதன்மன். திருவடித் தாமரைக்கீழ் என்னைப் பெய்து என்க. வெய்து - விரைந்து.

52. நிழலுடல் - சாயாசரீரம். அளம் - உப்பளம்.

53. உயிர்கடாம் பயிலா என்க. அப்பண்பின - இன்பத் துன்பம் பயிலாப் பண்பின. செயிர் - குற்றம். மயரார் - மயங்கார்.

54. அருள்வழியன்றி மருவுவது அரிது: ஒருவலும் அரிது.

55. பொருளானவெலாம் அற்றாலும் என்னை? அருளின் உற்று. ஆலும் - பெயரெச்சம்.

56. ஒரு பொருள் - திருமால். பவம் பெறுமாறு இன்று.

57 திரிகாரணத்தாலும் செய்த தீங்குகள் நீங்குமாறு கூறுகின்றது. பஞ்சாக்கரனைப் புகழ்ந்து நாவிற் பயிற்றியிட்ட அவம் பலகோடியும் அறுத்தாம். சிந்தைய - சிந்தையிலுள்ள தீங்குகள்: வினையாலணையும் பெயர். கோடிய - பெயரெச்சம். அவன் தாளை நினைந்து சிந்தையிலுள்ள தீங்குகளைத் தணந்தாம். இறைஞ்சி உடற்றீங்கு நீத்தனம்.

58. நீத்தனம், பாத்தனம் - வினையெச்சமுற்று.

59. எங்கும் எழுந்தது. அதில் புல்லறிவு விழுந்தது. அருளாய் மிளிர்ந்தன. பாசங்களென்று எண்ணப்பட்ட மாயை கன்மங்கள். தழுந்தாம் - தழுவுந்தாம்.

60. மூர்க்கர் என்பார்: மாயும்படி அறியார்: அஃதுறும் உண்மை எய்யார். எய்யாமை - அறியாமை.

61. முனிவு - வெறுப்பு: ஆகுபெயர். பருவருதல் - துன்பப்படுதல். கார்க்குஅதிர் - மேகத்தைக் கண்டு ஆரவாரிக்கும்.

62. குரு - நிறம். கிரகங்களனைத்தும் துருவனுற் பிணிக்கப் படுவதென்பது நூற்கொள்கை.

63. இருள்நடமாடலாவது - ஊனநடனம்: செயிர் - குற்றம்.

64. கதி - மேலான நிலை. இகத்தல் - நீங்குதல்.

65. பழியும் புகழும் வினையால் வருவன. அப்புகழும் பழியும் பஞ்சாக்கரவன் பதத்து ஒழுங்குபட்டு நிற்கும் பெருநிலைக்கு ஊறு செய்யா: ஆதலின், அவன் பதத்துற்று நில் என்க.

66. நீடுசெல் - நெடுந்தூரம்போ, அல்கல் - தங்காதே. திறத்தின் - திறத்தினின்றும். நிறுவிற் காய்ந்தும் எடுப்பின் நயந்தும்: நிரனிறை. புல் - முதனிலைத் தொழிற்பெயர். பாரமாவது வினைப் பயனை நுகர்வித்தல்.

67. மாணும்வினை என்க. பிராரத்தவினை தாக்காதிருத்தற்கு உபாயங் கூறியவாறு.

68. ஐங்கலை-நிவிர்த்தியாதி பஞ்சகலைகள். உளத்தை மயலில் விட்டனம்.

69. செருக்கை விட்டனம்: அதனல் உலகநிலைபற்றிப் பார்க்குமிடத்துக் கேடு அடைந்தோம்: அக்கேடே சிறந்த வாழ்க்கையாக் கொண்டோம். ஸ்ரீ பஞ்சாக்கரநாதன் திருவடிப்பூசனை தொடங்கினேம்: இந்தத் தொடர்பை எவர் நீக்குவரென்க.

70. குஞ்சரம் - விளம்பழத்திற்கு வருவதோர் நோய்: சிந்தாமணி யுரையில் நச்சினார்க்கினியர் இவ்வாறு கூறினர். தன் வயிறு என்பது விளம்பழத்தின் உள்ளிடம். விளக்கட்கனி - விளங்கனி. தன்புறம் என்புழி - தான் உள்ளிருப்ப அந்நோய் புறம். மேதினிக்கு - உருபுமயக்கம்.

71. பஞ்சாக்கரவன் நெடும்பதம் விரவுவ போதுவ ஈதென்ன அற்புதம். போக்கு - குற்றம்: "போக்கறுபனுவல்" என்றார் பனம்பாரனர்.

72. சொல்மாத்திரையில் வணங்குபவர்க்கும் வல்வினை இறும்.

73. மாலையது - இயல்பினையுடையது. பஞ்சாக்கரவன் அழி வேனை ஆக்கி வாவென்றருளினன்.

74. பருவமென்பது உயிர்களுக்கேயன்றிப் பஞ்சாக்கர ஆண் டகைக்கில்லை. ஆதலின், நீ இப்பொழுது அவனை நினையின் அவன ருள் உனக்கு வாய்த்திடும்.

75. கதி - பிறவி. புல்வினை - இழிவான தீவினை: வினைத் தொகையுமாம். அடுத்துப்புரட்டியது.

76. ஆரியன் - ஆசாரியன். கேவல நிலையினும் ஐந்தொழில் செய்து, பக்குவப்படுத்திச், சகல நிலைக்குக் கொண்டுவந்து, அச்சகல நிலையில் நாம் செய்த குற்றங்களையெல்லாம் நீக்கி நம்மைத் தாங்கும் பஞ்சாக்கரமூர்த்தி இன்னும் நம்மைத் தாங்கி மேனிலையிற் சேர்ப் பனென்னும் உண்மையை உணர்ந்தேன் என்றவாறு.

"பண்டிகந் திருளிற் பட்ட படர்பெரும் பிழையை நீயே
கண்டொரு செயலு மில்லாக் காலத்துக் கருணை வைத்துக்
கொண்டிடும் பருவ நோக்கிக் கோளமெய் யருளிற் றந்த
வண்டனிப் பிழையுள் வையா தளிப்பதின் றரிது போலும்"

என இவ்வாசிரியர் தணிகைப் புராணத்து அருளியதுங் காண்க.

77. பஞ்சாக்கர ஏந்தல் வைத்தான், வைத்தனன், வைத்த னன்என்க.

78. உலகினர் சிற்பரமென்று அறியார்: அதுவேயுமன்றி, ஐந்தொழிற்பொருட்டுக் கொள்ளும் உருவத்தின் உண்மையும் அறியார்.

79. அநந்யம் - வேறன்மை. பொன் - சூரியன்.

80. துஞ்சுதல் - நிலைபெறுதல்: பெருஞ்செல்வரென்றபடி. வேலர் - அரசர். கொன் - அச்சம். தென் - அழகு. தாமரை மலரின் அழகும்கெடுதற்குக் காரணமாகிய பஞ்சாக்கரவன்றிருவடி.

81. கூசுதலாவது அப்பெருமானது உயர்வும் தமது இழிவும் நோக்கியவழி நிகழ்வது.

82. உற்றிலா எனக்குக் குறையுண்ட நெஞ்சு முதலியன அளித்தான்.

83. ஆரண மார்க்கம் - வேதாகமநெறி, அரவு - ஆகுபெயர். முயக்கு - முயக்கம். இடும்பைக் காரணம்-துன்பம் நுகர்தற்குரிய காரணத்தை.

84. இழுதை - பேதை.

85. இன்னுங்கு - துன்பம். உறவாற் பெயராது. இன்பம் நிறுவவும் இன்னுங்கு நீக்கவும் வல்லன் பஞ்சாக்கர நின்மலனே.

86. அல் மலம் - இருண்மலம். இறைவன் மலஞ்சார்ந்த உயிரோடு கலந்திருப்பினும் மலம் அவனைத் தாக்காதென்பது உவமைவாயிலாக விளக்கப்பட்டது.

87. கால் - வினைத்தொகை. அஷ்டமூர்த்தியாய் நிற்குமாறு கூறியது. கரவு இயல் சீர் அருள் - வெளிப்படாது மறைதல் இயலுகின்ற சிறப்பினையுடைய திருவருள்.

88. அடைவு - அடைதல். பரிபவம் - முன்னது வினைத்தொகை: பின்னது வியாகூலம்.

89. இப்பவம்போல் வாய்ப்புறின் பவமெழுகோடி வெடுப்பினும் என்னை என்க.

90. அருளிற் கலந்த நலத்தவர் சீவன்முத்தர். இறந்த - கழிந்த. சென்றே பயப்ப - பிராரத்தம். ஏறு நிலை - ஆகாமியம் சேராதநிலை.

91. துரும்பர் - போலி. அழுந்தின் அவியும் பதைப்பின் மலையாம்.

92. தீவினை நீங்க எண்ணுதலும், நல்வினை செய்ய நாடலும் வேண்டா.

93. நெஞ்சே உனக்குப் பகை நீயே. நீ முன்னர் ஈட்டிய வினைப் பயன்களை அவ்வவர் முன்னிலையாகப் பஞ்சாக்கரவன் கூட்டும்பொழுது.

94. நாடுவதெல்லாம் நற்பதம், கூடுவதெல்லாம் அடியார் குழாம், வீடுவதெல்லாம் அறிவிலர் சேர்க்கை.

95. கால் அகழ்தல் - கால் யாத்தலென்பதுபோல நின்றது. மலத்தை அடியோடு அறுக்கும். இச்செய்யுட்பொருளை "என்னு லறியாப் பதந்தந்தா யான தறியா தேகெட்டேன், உன்னு லொன் றுங் குறையில்லை" என்னும் திருவாக்கான் அறிக.

96. அடியார்க்கு நல்குரவும் செல்வமும் கூறியவாறு. சலம் - வஞ்சம்.

97. போதி - அரசமரம். சோடை - ஈண்டு ஆசைமிகுதி.

98. இரும்புபோன்ற மனத்தன் என்று கருதி. மலையை வளைத்தாற்போல. காப்பு - தடை.

99. உயிர்க்கும் இறைவற்குமுள்ள வேறுபாடு கூறுமுகத் தால் பஞ்சாக்கரமூர்த்தியின் பொருள் விளக்கியவாறு.

100. உளநின்று காணலாவது திரிவுகாட்சி. உளமொளித்த லாவது தெளிவு காட்சி. இக்காட்சியின் இயல் சிவஞானமாபாடி யத்து நன்கு விளக்கப்பட்டது. பளகு அறுத்தல்-குற்றம் நீக்குதல்.

குறிப்புரை முற்றிற்று.

உ

சிவமயம்.

## திருச்சிற்றம்பலம்.

"பதிபசு பாசம் எனப்பகர் மூன்றிற்
பதியினைப் போற்பசு பாசம் அநாதி
பதியினைச் சென்றணு காபசு பாசம்
பதியணு கிற்பசு பாசநி லாவே."

"ஆன்கன்று தேடி யழைக்கு மதுபோல்
நான்கன்றாய் நாடி யழைத்தே னென்நாதனை
வான்கன்றுக் கப்பாலாய் நின்ற மறைப்பொருள்
ஊன்கன்றான் நாடிவந் துட்புகுந் தானே."

## தத்துவம்.

"ஆகின்ற தொண்ணூற்றே டாறும் பொதுவென்பர்
ஆகின்ற வாறா றருஞ்சைவர் தத்துவம்
ஆகின்ற நாலேழ் வேதாந்தி வயிணவர்க்
காகின்ற நாலாறை யைந்துமா யாவாதிக்கே."

திருச்சிற்றம்பலம்.

—திருமூலதேவநாயனார்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# ஆதீனவெளியீடுகள்.

1. முத்திபஞ்சாக்கர மாலை —
பஞ்சாக்கர தேசிகர்மாலை—பதவுரையுடன். 2ம் பதிப்பு.
2. ஞானபூசாவிதி—பழையவுரையுடன். ,,
3. நல்லூர் மாசிமகோற்சவ வைபவம். ,,
4. மண்ணிப்படிக்கரை ஸ்தலமகாத்மியம்.
5. காருண்யாமிர்ததீர்த்தமகிமை. ,,
6. இராமாயணதாற்பரியசங்கிரகம் உரையுடன்.
7. ஸ்ரீ மாதவச்சிவஞானசுவாமிகள்மீது தோத்திரப்பா உரையுடன் (முதற்பாகம்)
8. சிவஞானபோதம்—சூத்திரமூலமும் உரையும்.
9. சித்தாந்தமரபு—சித்தாந்தமரபு கண்டனம்—சித்தாந்தமரபுகண்டன கண்டனம் குறிப்புடன்.
10. ஸ்ரீ நமச்சிவாயமூர்த்தி மும்மணிக்கோவை.
11. திருநெல்வேலித்தேவாரப்பதிகம் உரையுடன்.
12. ஸ்ரீமாதவச்சிவஞானசுவாமிகள்மீது தோத்திரப்பா உரையுடன் (2-ம் பாகம்)
13. சைவசமயம்.
14. பஞ்சாக்கரதேசிகர் அந்தாதி—உரையுடன்.
15. சித்தாந்தப் பிரகாசிகை—குறிப்புடன்.
16. சுதந்திரத்திருநாள்.
17. கச்சி ஆனந்தருத்திரேசர் வண்டுவிடுதூது டாக்டர் ஸ்ரீமத் உ. வே. சா—உரையுடன்.

18. திருச்செந்தூர்—கடற்கரை முருகர்கோயில் (ஆங்கிலம்)
19. ஞான சூடாமணி.
20. சிவஞானபோதம்
ஸ்ரீமாதவச் சிவஞானசுவாமிகள் சிற்றுரை (அச்சில்)
21. ஸ்ரீசுவாமிநாத தேசிகர் பிரபந்தத்திரட்டு (அச்சில்)

---

22. பூப்பிள்ளையட்டவணை முதலியன.
23. சதமணிக்கோவை பொழிப்புரை.
24. திருவள்ளுவரும் பெரியபுராணமும்.
25. சமயம்.
26. திருச்சிற்றம்பலதேசிகர் கலம்பகம் உரையுடன்.
27. அத்துவிதவாக்கியத் தெளிவுரை.
28. சிவஞானபோதம் பன்னிருசூத்திரம் உரை.
29. திருஞானசம்பந்தர் பிள்ளைத்தமிழ் உரையுடன்.
30. சிவஞானசித்தியார் ஆராய்ச்சி (வேறுபதிப்பு)
31. திருப்பள்ளியெழுச்சி (வேறுபதிப்பு)
32. முத்திபஞ்சாக்கரமாலை முதலியன.
33. ஸ்ரீ மாதவச்சிவஞானசுவாமிகள் பிரபந்தங்கள் 1.
34, 35. துண்டுப்பிரசுரங்கள்.
36. திருவாவடுதுறையாதீன வரலாறு.
37. பாரததாற்பரிய சங்கிரகம் உரையுடன்.
38. உலகுடைய நாயனார் கழிநெடில் குறிப்புரை.
39. கலைசைப்பதிற்றுப்பத்தந்தாதி (மாதவ) குறிப்புரை.
40. அம்பலவாணதேசிகர் நினைவுமலர்.
41. சந்தானாசாரியபுராண சங்கிரகம்.
42. சந்தானகுரவர் நான்மணிமாலை.
43. விநாயகரகவல் உரை.
44. திருவுந்தியார் உரை ... (மெய்கண்ட—1)

45. திருக்களிற்றுப்படியார் உரை ... (மெய்கண்ட—2)
46. கயிலைபாதிகாளத்திபாதியந்தாதியுரை.
47. நமச்சிவாயமூர்த்தி ஆற்றுப்படை (வேறுபதிப்பு)
48. சைவப்பேராசு.
49. திருவஞ்சைக்களம்தேவாரப்பதிகம் உரை.
50. திருமந்திர சிந்தனை (நவாக்கரி).
51. வடதிருமுல்லைவாயிலந்தாதியுரை (மாதவ).
52. போலிவினாமறுப்பு.
53. சோமேசர் முதுமொழி வெண்பா மூலம் (மாதவ).
54. சிவஞானபோதம் பழையவுரை ... (மெய்கண்ட—3)
55. திருக்கோகர்ணம் தேவாரப்பதிகம் உரை.
56. திருஞான சாகரம்.
57. இருபாஇருபது உரை. ... (மெய்கண்ட—5)
58. துகளறுபோதம் பொழிப்புரை.
59. கந்தபுராணதத்துவம்.
60. சகலகலாவல்லிமாலை உரை.
61. திருவெம்பாவை பதவுரை—பொழிப்புரைகள்.
62. திருப்பருப்பதம் தேவாரப்பதிகம் உரை.
63. திருவெம்பாவைக்கருத்து முதலியன.
64. சிவபூசைத்திரட்டு.
65. சிவப்பிரகாசம் உரை. ... (மெய்கண்ட—7)
66. திருஞானசம்பந்தர் பிள்ளைத்தமிழ் ஆராய்ச்சி.
67. இரட்டையர் பிரபந்தங்கள் :—
தில்லைக்கலம்பகம், திருவாமாத்தூர்க்கலம்பகம், ஏகாம்பரநாதருலா முதலியன.
68. அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ். ... (மாதவ)
69. செம்பியன்மாதேவியார். ... (கல்வெட்டு)
70. தொட்டிக்கலை—மதுரகவி—ஸ்ரீ சுப்பிரமணியமுனிவர் பிரபந்தங்கள். (முதற்பகுதி)

71. கவிராக்ஷஸ — ஸ்ரீ கச்சியப்பமுனிவர் பிரபந்தங்கள். (முதற்பகுதி)

72. ஸ்ரீ காசிகண்டம் முழுவதும் மூலம்.

---

குறிப்பு :—ஸ்ரீ கச்சியப்பமுனிவர்பிரபந்தங்கள் முதற்பகுதிவேண்டுவோர் ஆதீனம் லைப்ரேரியனுக்கு 10-அணா தபால் தலைச்சீட்டு அனுப்பிப்பெற்றுக்கொள்ளவேண்டும். ஒருவர் ஒருபிரதியே பெறுவதற்குரியர்.

உ
சிவமயம்.

# கற்கு நான்முறை.

---

## திருவாவடுதுறை ஆதீனத்து வித்துவசிகாமணி—
## ஸ்ரீ சபாபதிநாவலரவர்கள்

விதிப்படி வித்தியாரம்பஞ் செய்து நல்லாசிரியரை யடைந்து நற்றமிழ் நூல் கற்கப்புகு நன்மாணாக்கர் முன்னர்த் தமிழ் நெடுங் கணக் காய்ந்துகொண்டு ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வாக் குண்டாம், நல்வழி, நன்னெறி முதலிய உலக நீதிநூல்களைக் கற்றுப் பின்னர் அவைகளின் பொருள்களை நன்று தெரிந்து கொள்க. அதற்குப் பின் நிகண்டு கற்று அது கூறுஞ் சொற்பொருளுணர்ந்து முதுமொழிவெண்பா, நீதிநெறிவிளக்கம், நாலடி, ஆசாரக்கோவை முதலிய நீதிநூல்களைக் கற்று அவற்றின் பொருளையு மவற்றின்கண் வரும் நிகண்டுச்சொற்களையும் நன்றாக வறிந்துகொள்க. அதற்குப் பின் சைவநன்மாணாக்கர் சைவாசாரியர்பால் வைதிகசைவசாத்திர மோதுதற்கு வேண்டுஞ் சைவ சம்ஸ்காரமும் வைணவநன்மாணாக் கர் வைணவ ஆசாரியர்பால் வைணவநூல் ஓதுதற்கு வேண்டும் வைணவ சம்ஸ்காரமும் விதிப்படி பெற்று, முறையே பஞ்சாக்கர அட்டாக்கர மந்திர தந்திர செப வனுட்டான முடையராய்த், தேவாரந் திருவாசக நாலாயிரப்பிரபந்த மென்னுந் தமிழ்வேதங் களைப் பண்முறையாகவுஞ் சுத்தாங்கமாகவுமோதப் பழகிக்கொள்க.

அதன்மேல், நல்லியற்புலவ ரியற்றிய தமிழிலக்கணச் சுருக் கங் கற்றுக்கொண்டு திருவிசைப்பா, திருமந்திரம், திருப்பல் லாண்டு, பதினோராந்திருமுறைப்பிரபந்தங்கள், குமரகுருபர முனி வர் பிரபந்தங்கள், சிவப்பிரகாசமுனிவர்பிரபந்தங்கள், சிவஞான யோகிகள் பிரபந்தங்கள், அவர் மாணாக்கர் பிரபந்தங்கள் முதலிய வைகளையும் பெரியபுராணம், கோயிற்புராணம் காஞ்சிப்புராணம், தணிகைப்புராணம், திருவிளையாடற்புராணம், பிரமோத்தரகாண் டம், காசிகண்டம், பிரபுலிங்கலீலை, பாகவத முதலிய தமிழ்ப்புரா ணங்களையும், இராமாயணம், பாரதமென்னுந் தமிழிதிகாசங்களையும் முறையாற்கேட்டு இலக்கியவறிவு ஈட்டிக்கொள்க. அதன்மேல்

நன்னூல், இலக்கணவிளக்கம், யாப்பருங்கலம், காரிகை, அகப்பொருள்விளக்கம், புறப்பொருள் வெண்பாமாலை, வெண்பாப்பாட்டியல், தண்டியலங்காரம், வீரசோழியம், நேமிநாதமென்னும் இலக்கணநூல்களையவற்றின் காண்டிகை விருத்தியுரைகளோடுளங்கொளக் கற்றுக், கற்றவிலக்கியங்களில் இப்பஞ்சலக்கண நூல் விதிகளமைவர நன்று பயில்க. இதுகாறுங் கூறிய இவ்விலக்கிய இலக்கண நூலுரைகண் முறையா லுளங்கொளக் கற்றுத் தமிழ்ப் புலமை யெய்திய நன்மாணுக்கர் இளந்தமிழ்ப்புலவர் (F. A.) என்னுங் கல்விப் பட்டாபிதானத்துக் குரியரென் றுணர்க.

அதன்மேல், தொல்காப்பிய வெழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரங்களை இளம் பூரணம் சேனாவரையம் நச்சினார்க்கினிய மென்னு முரைகளோடு நன்றுகற்றுச், சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, சூளாமணி, நைடதம், இரகுவம்சமென்னுந் தமிழ்க்காவியங்களை உரைகளோடு நன்று ஆராய்ந்துகொள்க.

அற்றேல் அஃதங்ஙனமாக, "சேக்கிழார் சிந்தா மணிப்பயிற்சி தீதெனவே - தாக்கியுபதேசித்தார் சோமேசா-நோக்கிற், பயனில் சொற் பாராட்டுவானை மகனெனல்-மக்கட் பதடியெனல்" என்று ஆசிரியர்சிவஞானயோகிக ளருளிச்செய்தலின், சிந்தாமணிப்பயிற்சியுஞ் சிந்தாமணி யென்ற துபலக்கணமாகலின், அதுபோலுஞ் சிலப்பதிகார மணிமேகலை சூளாமணிப் பயிற்சியுஞ் சைவ வைணவ நன்மாணுக்கர்களுக்கு ஆகாவெனின்,—அஃதொக்குமன்னாயினும், சிந்தாமணிமுதலிய காவியங்களிற் பொதுவான உலகியல் நீதி வைராக்கியங் கூறப்படுதலானும், தொல்காப்பிய வியற்றமிழ்ப் பிரயோக மிக வருதலானும், அப்பயனோக்கிச் சைவ வைணவ நன்மாணுக்கரவையுங் கற்கற்பாலரென் றெடுத்தோதினும். இனிச் சைவ வைணவ நன்மாணுக்க ரக்காவியங்களைக்கற்க வேண்டின், தத்தஞ் சமய சித்தாந்தப் பார்வையாற் கற்க. ஆத்தனூல்களிற் போல வவற்றின்க ணழுந்தற்க வென்பார், "சிந்தாமணிப் பயிற்சி தீது" என்றார். பிறநூல் பலகா லுளங்கொள வழுந்தி யாராய்தல், மன மொன்றிலழுந்தின் அதன் வண்ணமாய் மாறுமென்ப தனுபவமாகலின், வேதப்புறமாய அவ்வாருகத பௌத்த காவியங்களிற் பலகா லழுந்திப் பயில்வோர் தம் வைதிக நெறி கைவிட் டவை கூறுங் கொள்கை வசத்தரா அவைதிகராவ ரென்பது பெரியோர் கருத்தென்க. வைதிக காவியங்களி னியல்பும், அவைதிக காவியங்களினியல்பும் வைதிக்காவிய தூடணமறுப்பில் விரித்தோதினும்.

அதன்பின், தருக்கசங்கிரகதீபிகை தருக்கபரிபாடை கற்றுத் தருக்க வறிவுடையராகுக. அதன்மேல், இறையனாரகப்பொருளுரை பிரயோகவிவேகவுரை, இலக்கணக்கொத்துரை, தொல்காப்பியச்சூத்திரவிருத்தி, இலக்கணவிளக்கச்சூறாவளி யென்பவற்றை மதியமையக் கற்று இலக்கணவறிவு விரியச் செய்துகொண்டு, பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, கல்லாடம், பெருந்தேவனார்பாரத மென்னுஞ் சங்க விலக்கியங்களை யவற்றுரைகளோ டாராய்ந்து, பின்னர்த் திருக்குறள் திருக்கோவை யென்னுந் தெய்வ விலக்கியங்களைப் பரிமேலழகியாருரை பேராசிரியருரைகளோ டறிவமையப் பலமுறை நன்றாராய்ந்து தமிழ்ப்புலமை நிரப்பிக்கொள்க.

இன்னும், தமிழ்ப் பெரும்புலமைக் கின்றியமையாத வடமொழி இலக்கிய விலக்கண வாராய்ச்சியும், பூகோள ககோள கணிதநூலாராய்ச்சியும், தருக்கநூலாராய்ச்சியும் ஈட்டிக்கொள்க. இதுகாறுங் கூறிய நூலுரைகளை இவ்வாறு கசடறக் கற்று முதிர்ந்த நன்மாணாக்கர் முதுதமிழ்ப்புலவர் (B. A.) என்னும் பட்டாபிதானத்துக்குரியரென் றுணர்க.

இங்ஙனந் தமிழிலக்கண விலக்கிய முதலிய வித்தைகள் கற்று முதிர்ந்தோருட் சைவ நன்மாணாக்கர், சைவாசாரியரை யடைந்து வழிபட்டு மந்திராதிகாரம் அர்ச்சனாதிகாரம் யோகாதிகாரங்களை நன்று பயக்குஞ் சைவசமய விசேட தீக்கையுற்று சைவசமயநெறி, சிவதருமோத்தரம், பரமததிமிரபானு, ஞானாமிர்தம், தத்துவப்பிரகாசம், சோமசம்புசிவாசாரியார் கிரியாகாண்டக்கிரமாவலி, சித்தாந்தசாராவலி யென்பனவற்றையும், சதுர்வேததாற்பரியசங்கிரகம், சிவதத்துவவிவேகம், சிவகர்ணாமிர்தம், பாரததாற்பரியசங்கிரகம், இராமாயணதாற்பரியசங்கிரகம், பிரமதருக்கத்தவமென்பனவற்றையுங் கற்று, வைதிக சைவவறிவுடையராய், வைதிக சைவானுட்டானங்கைவரப் பயின்றுகொள்க. சுத்தாத்துவிதிகளான சித்தாந்த சைவ நன்மாணாக்கர் கைவல்லியம் வேதாந்தசூடாமணி முதலிய கேவலாத்துவித வேதாந்த சாத்திரங்களைக் கற்கவேண்டின், தஞ் சித்தாந்தப் பார்வையாற் கற்க. இது விசிட்டாத்துவித வைணவ நன்மாணாக்கர்களுக்கு மொக்கும்.

சைவ நன்மாணாக்கருட் சித்தசுத்தி மிகவுடையராய் நித்தியாநித்திய விவேக வுணர்வு தோன்றிப் பிறவிக் கஞ்சி வீடுபேற்றினவாமிக்குடைய பரிபாகிகளான நல்லோர், சித்தாந்த சைவ ‘ஞானாசாரியரை யடைந்து வழிபாடாற்றி அகங்கார மமகாரத்

தியாச்சியஞ் செய்து நிருவாண விஞ்ஞான தீக்கையுற்று' சிவஞான போதம், சிவஞானசித்தி, சிவப்பிரகாசம். திருவருட்பயன் முதலிய வத்துவித சைவசித்தாந்த நூல்கள் பதினான்கையும் அவற்றி னுரைகளோடும், வேதாந்த சித்தாந்த சாத்திரப்பொரு ளனைத்தையும் ஐய விபரீதமற வடக்கி விளக்கும் சகல கலாரூபமான சிவஞான மாபாடியத்தினோடும் ஞானாசாரியரை வழிபட்டு, முறையாற் கேட்டல் சிந்தித்தல் தெளிதல் செய்து, சிவானுபவங் கைவருமாறு சிவோக மென்னு மத்துவித நிட்டை பேணுக. இங்ஙனம் ஞானாதிகாரிகளான நல்லோர் ஈசாவாசியம். கேனம், பிரச்சினம், முண்டகம், மாண்டூக்கியம், தைத்திரீயம், ஐதரேயம், சாந்தோக்கியம், பிருகதாரணியகம். சுவேதாச்சுவதாம் கைவல்லியம், அதர்வசிரசு அதர்வசிகை யென்னுஞ் சைவோப நிடதங்களையும், பவுட்காம், மிருகேந்திரம், தேவிகாலோத்தாம், சருவஞானோத்தா முதலிய சைவாகமங்களையும் தாங்கற்றுணர்ந்த வேதாந்தத் தெளிவான திராவிட சைவ சித்தாந்தப் புலமைக் காணக வாய்ந்துணர்ந்து கொள்க. ஈண்டுச் சொல்லிய வுபநிடதங்களின் மெய்ப்பொருள்களாண்டாண்டுத் துவித-விசிட்டாத்துவித-கேவலாத்துவித பாடிய வுரைகளாற் பேதிக்கப்பட்டிருத்தலின், சைவ சித்தாந்த ஞானகுருவரு ளுபதேச மாந்திரப் பார்வையா லவற்றின் மெய்யுணர்ந்து சுத்தாத்துவிதநிலைக் கடைப்பிடி யுறுதியுறுக.

அதன்மேல், இங்ஙனங் கூறிய வேதாந்தத் தெளிவான சைவ சித்தாந்த ஞானானுபவ தெய்வத்திருவரு ளிலக்கியமான தேவாரந் திருவாசகந் திருக்கோவை யுத்தரவேத முதலிய திருமுறைகளைத் திருவருட்கண்ணா லென்று மாராய்ந்து ஓதிப், பாமசிவன்றிருவடிக் கீழ்ப்பிரிவறப் பொருந்துஞ் சீவன்முத்தி யுண்மைநிலை தலைக்கூடி வாழ்க.

வைணவநல்லோர், தத்துவசேகாம், தத்துவத்திரயம், சீவசனபூஷண முதலிய தஞ்சமய சாத்திரம் முறையாற் கேட்டுச் சிந்தித்து விசிட்டாத்துவித சித்தாந்தந் தேறி, நாலாயிரப்பிரபந்தங்களைத் திருவருட் பார்வையா னென்று மாராய்ந்து, நாராயண மூர்த்தி திருவடிக்கீ ழிருக்குஞ் சாணாகதிநிலை தலைக்கூடி வாழ்க.

மேற்கூறிய முதுதமிழ்ப்புலமையோ டிங்ஙனங் கூறிய வேதாந்த சித்தாந்த சாத்திரப்புலமையு நன்கு கைவரப்பெற்றார் முது தமிழ்ப் பெரும்புலவர் (M. A.) என்னும் பட்டாபிதானத்துக்குரிய ரென் றுணர்க.

திருச்சிற்றம்பலம்.

71